கெடிகொண்டதலமாறு மும்மண்டலத்திலுங் ... *
    கிள்ளாக்கு செலலமிக்க ... ... *
தெசவிதமதாய்நின்ற நாதங்களோலிடச் ... *
    சிங்காசனாதிபர்களாய்த் ... ... *
திக்குத்திகந்தமும் பூரணமதிக்குடை ... ... *
    திகழ்ந்திட வசந்தகால ... ... *
மிசையமலர்மீதுறை மணம்போலவானந்த ... *
    மிதயமேற் கொள்ளும்வண்ண ... *
மென்றைக்குமழியாத சிவராசயோகமா ... ... *
    மிந்திராதி தேவர்களெலாம் ... ... *
விசயசயசயவென்ன வாசிசொல வேகொளு ... *
    விருக்குநும்பெருமை யெளிதோ ... *
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற ... *
    வித்தகச் சித்தர்கணமே .. ... (௬)

ஆணிலேபெண்ணிலே யெப்போலவொருபேதை ... *
    யகிலத்தின் மிசை யுள்ளதோ ... ... *
வாடிய கறங்குபோ லோடியழல் சிந்தையை ... *
    யடக்கியொருகணமேனும்யான் ... *
காணிலேன்திருவருளை யல்லாதுமௌனியாய்க் ... *
    கண்மூடி யொருமூச்சைக் ... ... *
கட்டிக்கலாமதியை முட்டவேமூலவெங் ... ... *
    கனலினை யெழுப்பநினைவும் ... *
பூணிலேனிற்றைநாட் கற்றதுங்கேட்டதும் ... *
    போக்கிலே போகவிட்டுப் ... *
பொய்யுலகநெறியிலே நெறியினுங்கடையான ... *
    புன்மையே னின்னமின்னம் ... *

பிணிமேலபலையாமன் மலையிலக்காகநீர் ... ...*
வெளிப்படத் தோற்றவேண்டும் ... *
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற ... *
வித்தகச் சித்தர்கணமே ... ... (௭)

கன்னலமுதெனவுமுக் கனியெனவும்வாயூற ... *
கண்டெனவு மடியெடுத்துக் ... *
கடவுளர்கடந்ததல வழுதழுதுபேய்போற் ... ...*
கருத்திலெழு கின்றவெல்லா ... *
மென்னதறிபாஷையறி வென்றுமிருபகுதியா ... *
வீடுதமிழென் றமிழினுக் ... *
கின்னல்பகராதுலக மாராமைமேலிட் ... ..*
டிருந்தலாவித்த மிழையே ... *
சொன்னவணியாவனவன் முத்திசித்திகளெலாந் ... *
தேர்ந்தநெறி யேபடித்தீர் ... ... *
சொல்லுமெனவவர்நீங்கள் சொன்னவவையிற்சிறிது *
தோய்ந்தருண சாந்தனெனவே ... *
மின்னல்பெறவேசொல்ல வச்சொல்கேட்டடிமைமனம்
விகசிப்ப தெந்தநாளோ .. ... *
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற ... ... *
வித்தகச் சித்தர்கணமே ... ..(அ)

பொற்பிறைநிலைசகாலில் வன்றுகிர்படைத்தலாற் ... *
போந்திடையொடுக்க முறலாற் .. *
பொலிவானவெண்ணீறு பூசியேயருள்கொண்டு... .. *
பூரித்தவெண் ணீர்மையா ... ... *
லெற்படவிளங்குசக னத்திலிமையாவிழி ... *
யிசைந்துமே லேக்கமுறலா ... *
லிரவுபகலிருளான கனதந்திபடநூறி ... *
யிதயங்களித் திடுதலாற் ... ... *
பற்பலவிதங்கொண்ட புலிகலையினுரியது ... *
படைத்துப்ர தாபமுறலாற் .. *
பனிவெயில்கள்புகுதாம னெடியவான்றொட்டநெடிய*
பருமர வனங்களாறும் ... ... *
வெற்பினிடையுறைதலாற் றவராசசிங்கமென ... *
மிககோருமைப் புகழ்வர்காண் ... *
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற ... ...*
வித்தகச் சித்தர்கணமே ... ...(௯)
கல்லாதபேர்களே நல்லவர்க ணல்லவர்கள் ... ... *
கற்றுமறி வில்லாதவென் ... ... *

கர்மத்தையென்சொல்வேன்மதியையென்சொல்லுவேன்
கைவல்ய ஞானநீதி ... ... *
நல்லோருரைக்கிலோ கர்மமுக்கியமென்று ... *
நாட்டுவேன் கர்மமொருவ ... *
ஞாட்டிஞாலோபழைய ஞானமுக்கியமென்று ... *
நவிலுவேன் வடமொழியிலே ... *
வல்லாரொருத்தன் வரவுந்த்ராவிடத்திலே ... *
வந்ததாவி வகரிப்பேன் ... ... *
வல்லதமிழறிஞர்வரி னங்ஙனேவடமொழியின் ... *
வசனங்கள் சிறிதுபுகல்வேன் ... *
வெல்லாமலெவரையு மருட்டிவிடவகைவந்த ... *
வித்தையென் முத்திதருமோ ... *
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற ... *
வித்தகச் சித்தர்கணமே ... ...(௰)

சித்தர்கணம்-முற்றுப்பெற்றது. ஆக-௨௨.

ஆனந்தமானபரம்.

கொல்லாமையெத்தனை குணக்கேட்டைநீக்குமக் ... *
குணமொன்று மொன்றிலேன்பாற் ... *
கோரமெத்தனைபக்ஷ பாதமெத்தனைவன் ... *
குணங்களெத் தனைகொடியபாழ்ங் ... *
கல்லாமையெத்தனை யகந்தையெத்தனைமனக் ... *
கள்ளமெத் தனையுள்ளசற் ... ... *
காரியஞ்சொல்லிடினு மறியாமையெத்தனை ... *
கதிக்கென் றமைத்தவருளிற் ... *
செல்லாமையெத்தனைவிர் தாகோஷ்டியென்னிலோ ... *
செல்வமெத் தனைமுயற்சி ... ... *
சிந்தையெத்தனைசலன மிந்த்ரசாலப்போன்ற ... *
தேகத்தில் வாஞ்சைமுதலா ... ... *
யல்லாமையெத்தனை யமைத்தனையுனக்கடிமை ... *
யானே னினைக்குமாளோ ... ... *
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி... ... *
யானந்த மானபரமே ... ... (௧)
தெருளாகிமருளாகி யுழலுமனமாய்மனஞ் ... *
சேர்ந்துவளர் சித்தாகியச் ... ... *
சித்தெலாஞ்சூழ்ந்தசிவ சித்தாய்விசித்ரமாய்த் ... *
திறமாகி நாளுவிதப் ... ... *

பொருளாகியப்பொருளை யறிவொடறியுமாகியைம் ...✽
புலனுமாயைம் பூதமாய்ப் ... ...✽
புறமுமாயகமுமாய்த் தூரஞ்சமீபமாய்ப் ... ✽
போக்கொடு வரத்துமாகி ... ...✽
யிருளாகியொளியாகி நன்மைதீமையுமாகி ... ✽
யின்றாகி நாளையாகி ... ... ✽
யென்றுமாயொன்றுமாய்ப் பலவுமாயாவுமா ... ✽
யிவையல்ல வாயநின்னை... ... ...✽
யருளாகிநின்றவர்க ளறிவதல்லாலொருவ ... ✽
ரறிவதற் கெளிதாகுமோ ... ... ✽
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி... ...✽
யானந்த மானபரமே ... ... (௨)

மாறுபடுதர்க்கந் தொடுக்கவறிவார்சாண் ... ✽
வயிற்றின் பொருட்டாக .. ... ✽
மண்டலமும்விண்டலமு மொன்றாகிமனதுழல .. ✽
மாலாகி நிற்கவறிவார் ... ... ✽
வேறுபடுவேடங்கள் கொள்ளவறிவாரொன்றை ... ✽
மெனமெனென்றகம் வேறதாம் ... ✽
வித்தையறிவாரொமைப் போலவேசந்தைபோல் ... ✽
மெய்ந்நூல் விரிக்கவறிவார் ... ...✽
சீறுபுலிபோறசீறி மூச்சைப்பிடித்துவிழி .. ✽
செக்கச் சிவக்கவறிவார் ... ... ✽
தீரமென்றுதந்தம் மதத்தையேதாமதச்... ... ✽
செய்கைகொடு முளறவறிவா ... ✽
ராறுசமயங்கடொறும் வேறுவேறாகிவிளை ... ✽
யாடுமுனை யாவரறிவா ... ... ✽
ரண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி ...✽
யானந்த மானபரமே ... ... (௩)

காயிலையுதிர்ந்தகனி சருகுபுனன்மண்டிய . ...✽
கடும்பசி தனக்கடைத்துங் ... ... ✽
கார்வரையின்முழையிற் கருங்கல்போலசையாது.....✽
கண்மூடி நெடிதிருந்தும்... ... ✽
தீயினிடைவைகியுந் தோயமதிமூழ்கியுந் ... ✽
தேகங்க ளென்பெழும்பாய்த் .. ✽
தெரியநின்றுஞ்சென்னி மயிர்கள்கூடாக்குருவி ... ✽
தெற்றவெயி லூடிருந்தும் ... ✽
வாயுவையடக்கியு மனத்தினையடக்கியு... ... ✽
மௌனத்திலே யிருந்து ... ... ✽

மதிமண்டலத்திலே வல்செல்லவழுத்துண்டு
வனமூடிருந்துமறிந்து
ராயுமறைமுடிவான வருணூடிதூரடிமை...
யகிலத்தை நாடன்முறையோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்த மானபரமே (௪)

சுத்தமுமசுத்தமுந் துக்கசுகபேதமுந்
தொந்தமுட னிர்த்தொந்தமும்
ஸ்தூலமொடுசூக்ஷமு மாசையுநிராசையுஞ்
சொல்லுமொரு சொல்லின்முடிவும்
பெத்தமொடுமுத்தியும் பாவமொடபாவமும்
பேதமொட பேதமிலையும்
பெருமையொடுசிறுமையு மருமையுடனெளிமையும்
பெண்ணினுட னாணுமற்று
நித்தமுமநித்தமு மஞ்சனநிரஞ்சனமு
நிஷ்களமு நிஷ்கலமுமே...
நீதியுமநீதியு மாதியொடந்தமு...
நிர்விஷய விஷயவடிவு
மத்தனையுநீயல தொத்தனையுமில்லையெனின்
யாங்களுனை யன்றியுண்டோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்த மானபரமே (௫)

காராருமாணவக் காட்டைக்களைந்தறக்
கண்டகங் காரமென்னும்
கல்லைப்பிளந்துநெஞ் சகமானபூமிவெளி ..
காணத் திருத்திமேன்மேற் ..
பாராதியறியாத மோனமாம்வித்தைப்
பதித்தன்பு நீராகவே ..
பாய்ச்சியதுபயிராகு மட்டுமாமாயையவன்
பறவையணு காதவண்ண ...
நேராகநின்றுவிளை போகம்புசித்துண்ட
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின்படிக்குநீ முன்னின்றுகாப்பதே
நின்னருட் பாரமென்று
மாராருமறியாத சூதானவெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்த மானபரமே (௬)

வானாதிபூதமா யகிலாண்டகோடியாய் ...
மலையாகி வளைகடலுமாய் ... ...
மதியாகியிரவியாய் மற்றுளவெலாமாகி ...
வான்கருணை வெள்ளமாகி ... ...
நானாகிநின்றவனு நீயாகிநின்றிடவு ...
நானென் பதற்றிடாதே ... ...
நானாவெனக்குளறி நானாவிகாரியாய் ...
நானறிந் தறியாமையாய் ... ...
போனாலதிட்டவலி வெல்லவெளிதோபகற் ...
பொழுதுபுகு முன்கண்மூடிப் ...
பொய்த்துயில்கொள்வான்றனை யெழுப்பவசமோவினி
போதிப்ப தெந்தநெறியை ... [ட்
யானுமென்கொடுமை யனியாயமனியாய... ...
மார்பா லெடுத்துமொழிவே... ...
னண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி ...
யானந்த மானபரமே... ... ...(௭

பொய்யினேன்புலையினேன் கொலையினேனின்னருள்
புலப்பட வறிந்துநிலையாப் ...
புன்மையேன்கல்லாத தன்மையேனன்மைபோற் ...
பொருளெலாம் பொருளைநாடும் ...
வெய்யனேன்வெகுளியேன் வெறியனேன்சிறியனேன்
வினையினே னென்றென்னைநீ ...
விட்டுவிடநினைவையேற் றட்டழிவதல்லாது ...
வேறுகதி யேதுபுகலாய் ... ...
துய்யனேமெய்யனே யுயிரினுக்குயிரான ...
துணைவனே யிணையொன்றிலாத் ... ...
துரியனேதுரியமுங் காணாவதீதனே... ...
சுருதிமுடி மீதிருந்த ... ...
ஐயனேயப்பனே யெனுமறிஞர்நிலைவிட் ...
டகலாத கருணைவடிவே ... ...
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி ...
யானந்த மானபரமே ... ... (௮

எத்தனைவிதங்கடான் கற்கினுங்கேட்கினுமென் ...
னிதயமு மொடுங்கவில்லை ... ...
யானெனுமகந்தைதா னெள்ளளவுமாறவில்லை .. ...
யாதினும் மபிமானமென்... ...
சித்தமிசைகுடிகொண்ட தீமையோடிரக்கமென் ......
சென்மத்து நானறிகிலேன் ...

சீலமொடுதவவிரத மொருகனவிலாயினுந் ... ✱
தெரிசனங் கண்டுமறியேன் ... ✱
பொய்த்தமொழியல்லான் மருந் துக்குமெய்ம்மொழி ✱
புகன்றிடேன் பிறர்கேட்கவே ... ✿
போதிப்பதல்லாது சும்மாவிருந்தருள் ... ✱
பொருந்திடாப் பேதைநானே ... ✱
பத்தனைகுணகேடர் கண்டதாக்கேட்டதா ... ... ✱
வவனியிலை யுண்டோசொலா ... ... ✿
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி ... .. ✱
யானந்த மானபரமே ... ... (௬)
எக்காலமுந்தனக் கென்னவொருசெயலிலா ... ... ✱
வேழைநீ யென்றிருந்திட் ... ... ✱
டெனதாவியுடல்பொருளு மௌனியாய்வந்துகை ... ✿
யேற்றுநம தென்றவன்றே ... ✱
பொய்க்காலதேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்யுடலை மெய்யென்னலும் ... ✱
பொய்யுறவுபற்றலும் பொய்யாகுநானென்னல் ... .. ✱
பொய்யினும் பொய்யாகையான் ... ✱
மைக்காலிருட்டனைக ளிருளிலையிருவினைகள் ... ✱
வந்தேற வழியுமில்லை ... ... ✱
மனமில்லையம்மனத் தினமில்லைவேறொரு ... ✱
வரவில்லை போக்குமில்லை ... ... ✱
பக்காலமிக்கால மென்பதிலையெல்லா ... ... ✿
மதீதமய மானதன்றே ... ... ✱
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி ... ✱
யானந்த மானபரமே ... ... (௭)

ஆனந்தமானபரம் - முற்றுப்பெற்றது. ஆக-௭௬.

சு க வா ரி.

இன்னமுதகனிபாகு கற்கண்டுசீனிதே ... ✱
னெனருசித்திட வலியவந் ... ... ✿
தின்பங்கொடுத்தநினை யெந்நேர நின்னன்ப ... ✱
ரிடையறு துருநாடி ... ... ✱
புன்னியகருத்தவிழ வுளாகுளறியுடலெங்கு ... .. ✱
மோய்ந்தயர்ந் தவசமாகி ... ... ✱
புணர்வரியபேரின்ப வனுபூதியுணர்விலே ... ... ✿

கன்னிகையொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்...
கைக்கொள்வள் பக்குவத்திற் ...
கணவனருள்பெறின்முனே சொன்னவாறென்னெனக்
கருதிநகையாவ ளதுபோற் ...
சொன்னபடிகேட்குமிப் பேதைக்குநின்கருணை ...
தோற்றிற் சுகாரம்பமாஞ் ... ...
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ் ...
சோதியே சுகவாரியே ... ... (௧)

அன்பின்வழியறியாத வென்னைத்தொடர்ந்தென்னை ...
யறியாத பக்குவத்தே ... ...
யாசைப்பெருக்கைப் பெருக்கிக்கொடுத்துநா........
னற்றே னலந்தேனென ... ...
வெம்புலமயங்கலே பித்தேற்றிவிட்டா ...
யிரங்கியொரு வழியாயினு ...
மின்பவெளமாகவந் துள்ளங்களிக்கவே ...
யென்னைநீ கலந்ததுண்டோ ... ...
தன்பருவமலருக்கு மணமுண்டுவண்டுண்டு ... ...
தண்முகை தனக்குமுண்டோ ... ...
தமியனேற்கிவ்வணந் திருவுளமிரங்காத ...
தன்மையாற் றனியிருந்து ... ...
துன்பமுறினெங்ஙனே யழியாதநின்னன்பர் ...
சுகம்வந்து வாய்க்குமுறையாய் ...
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ் ...
சோதியே சுகவாரியே ... ... (௨

கல்லேனுமையவொரு காலத்திலுருகுமென் ..
கன்னெஞ்ச முருகவிலையே ... ...
கருணைக்கிணங்காத வன்மையையுநான்முகன் ...
கற்பிக்க வொருகடவுளோ ...
வல்லான்வகுத்ததே வாய்க்காலெனும்பெரு ... ...
வழக்குக் கிழுக்குமுண்டோ ...
வானமாய்நின்றின்ப மழையாயிரங்கியென்னை ...
வாழ்விப்பதுன் பரங்காண் ...
பொல்லாதசேயெனிற் றாய்தள்ளனீதமோ ...
புகலிடம் பிறிதுமுண்டோ ...
பொய்வார்த்தைசொல்லிலோ திருவருட்கயலுமாய்ப்
புன்மையே னவனந்தோ ... ...
சொல்லான்முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச் ....
சும்மா விருக்கவருளாய் ... ...

சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்
சோதியேசுகவாரியே (ரு)

என்பெலாநெக்குடைய ரோமஞ்சிலிர்ப்பவுட...
னிளகமன தழலின்மெழுகா
யிடையறா தருகவரு மழைபோலிரங்கியே
யிருவிழிக ணீரிறைப்ப
வன்பினுன் மூர்ச்சித்த வன்பருக்கங்ஙனே
பயிர்தசஞ் சீவிபோல்வந்
தானந்தமழைபொழிவை யுள்ளன்பிலாதவெனை
யார்க்காக வடிமைகொண்டாய்
புன்புலான்மயிர்தோ னரம்பென்பு மொய்த்திடு
புலைக்குடிலி லருவருப்புப்
பொய்யல்லவேயிதனை மெய்யென்று நம்பியென்...
புந்திசெலுமோ பாழிலே
துன்பமாயலையவோ வுலகநடையெய்யவொரு...
சொற்பனத் திலும்வேண்டிலேன்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்...
சோதியே சுகவாரியே (சு)

வெந்நீர்பொருதெனுடல் காலின்மூட்டைக்கவும்
வெடுக்கென் றசைத்தெடுத்தால்
விழியிமைத்தங்ஙனே தன்னருளை நாடுவேன்
வேறொன்றை யொருவர்சொல்லி
னந்நேரமையோவென் முகவாடிநிற்பதவு
மையநின் னருளறியுமே
யானுமெத்தப் பயந்தவனியானென்னை...
யாண்டநீ கைவிடாதே
யிந்நேரமென்றிலை யுடற்சுமையதாகவு...
மெடுத்தா லிறக்கவென்றே
யெங்கெங்குமொருதீர்வை யாயமுண்டாயினு
மிறைஞ்சுசுக ராதியான
தொன்னீர்மையாளர்க்கு மாணிடம்வகுத்தவரு
டுணையென்று நம்புகின்றேன்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்
சோதியே சுகவாரியே (எ)

பற்றுவனவற்றிடு நிராசையென்றொருபூமி
பற்றிப்பிடிக்கு மிபோகப்
பாங்கிற்பிராணலய மென்னுமொருபூமியினை
பற்றின்மன மறுமென்னவே

கற்றையஞ்சடைமௌனி தானேகனிந்தகனி ... ✽
கனிவிக்கவந்தகனிபோற் ... ... ✽
கண்டதித்நெறியெனத் திருவுளக்கனிவினொடு ... ✽
கனிவாய்திறந்து மொன்றைப் ... ✽
பெற்றவனுமல்லேன் பெருந்தவனுமல்லேன் ... ✽
பெருக்கத்த வித்துளநியே ... ... ✽
பெண்ணீர்மையென்னவிரு கண்ணீரிறைந்துநான் ... ✽
பேய்போ லிருக்கவுலகஞ் ... ... ✽
சுற்றிநகைசெய்யவே யலையவிட்டாயெனிற் ... ✽
சொல்லவினி வாயுமுண்டோ ... ✽
சுத்தநிற்குணமான பரதெய்வமேபரஞ் ... ✽
சோதியே சுகவாரியே ... ... (௬)

அரும்பொனேமணியே யென்பேயென்பான ... ✽
வறிவேயெ னறிவிலூறு ... ... ✽
மானந்தவெள்ளமே யென்னென்றுபாடினே ... ✽
னாடினே னாடிநாடி ... ... ✽
விரும்பியேகூவினே னுலறினேனலறினேன் ... ✽
மெய்சிலிர்த் திருகைகூப்பி ... ✽
விண்மாரியெனவெனிரு கண்மாரிபெய்யவே ... ✽
வேசற்றயர்ந்தேனியா ... ... ✽
னிரும்புநேர்நெஞ்சகக் கள்வனாகுமுனை ... ✽
யிடைவிட்டு நின்றதுண்டோ ... ✽
வென்றுநீயன்றநா னுன்னடிமையல்லவோ ... ✽
யாதேனு மறியாவெறுந் ... ... ✽
துரும்பனேனென்னினுங் கைவிடத்துணிதியோ ... ✽
தொண்டரொடு கூட்டுகண்டாய் ... ✽
சுத்தநிற்குணமான பரதெய்வமேபரஞ் ... ✽
சோதியே சுகவாரியே ... ... (எ)

பாராதியண்டங்க ளத்தனையும்வைக்கின்ற ... ✽
பரவெளியி னுண்மைகாட்டிப் ... ✽
பற்றுமனவெளிகாட்டி மனவெளியினிற்றோய்ந்த ... ✽
பாவியேன் பரிசுகாட்டித் ... ... ✽
தாராளமாய்நிற்க நிச்சிந்தைகாட்டிச் ... ✽
சதாகால நிட்டையெனவே ... ... ✽
சுகசநிலைகாட்டினை சுகாதீதநிலயந் ... ... ✽
தனைக்காட்ட நாள்செலலுமோ ... ... ✽
காரரவெண்ணரு மனந்தகோடிகணின்று ... ✽
கானூன்றி மழைபொழிதல்போற் ... ✽

நால்விசியின்னிப் படர்ந்துபரவெளியெல்லாங் .... *
நம்பியா னந்தவெள்ளஞ் ... ... *
சோராதுபொழியவே கருணையின்முழங்கியே .... *
தொண்டரைக் கூவுமுகிலே ... *
சுத்தநிற்குணமான பரதெய்வமேபரஞ் ... *
சோதியே சுகவாரியே ... ... (அ)

பேதித்தசமயமோ வொன்றுசொனபடியொன்று ... *
பேசாது றுறவாகியே ... ... *
பேசாதபெரியோர்க ளிருவிகற்பத்தினுற் ... ... *
பேசார்கள் பரமகுருவாய்ப் ... *
போதிக்குமுக்கணிறை நேர்மையாய்க்கைக்கொள்ள *
போதிப்ப தாச்சறிவிலே ... ... *
போக்குவரவறவின்ப நிக்கமறகசணமாப் ... *
போதிப்ப தெவனையனே ... ... *
சாதித்தசாதனமு மியோகியர்கணமதென்று ... ... *
சங்கிப்ப ராதலாலே ... ... *
தன்னிலேதானு யயர்ந்துவிடுமோமெனத் .. *
தனியிருந் தழுங்குமோ ... ... *
சோதிக்கமனமாயை தனையேவிலுன்டிமை ... ... *
சுகமாவ தெப்படிசொலாய் ... *
சுத்தநிற்குணமான பரதெய்வமேபரஞ் ... *
சோதியே சுகவாரியே ... ... (கூ)

அண்டமுடிதன்னிலோ பகிரண்டமதனிலோ ... *
வலரிமண்டல நடுவிலோ ... ... *
வனனடுவிலோவமிர்தமதி நடுவிலோவன்ப ... ... *
ரகமுருகி மலர்கடூவித் ... ... *
தெண்டமிடவருமூர்த்தி நிலையிலோதிக்குத் ... *
திகந்தத்திலோ வெளியிலோ ... *
திகழ்விந்துநாதநிலை தன்னிலோவேதாந்த ... *
சித்தாந்த நிலைதன்னிலோ ... ... *
கண்டபல்பொருளிலோ காணாதநிலையெனக் ... *
கண்டசூனிய மதனிலோ ... ... *
காலமொருமூன்றிலோ பிறவிநிலைதன்னிலோ ... *
கருவிகரணங்க ளோய்ந்த ... ... *
தொண்டர்களிடத்திலோ நீவீற்றிருப்பது ... ... *
தொழும்பனேற் குளவுபுகலாய் ... *
சுத்தநிற்குணமான பரதெய்வமேபரஞ் ... *
சோதியே சுகவாரியே ... ... (௰)

எந்தநாள்கருணைக் குரித்தானு நானெனவு ... *
மென்னிதய மெனைவாட்டுதே ... *
யேதென்றுசொல்லுவேன் முன்னொருபின்மலைவறவு *
மிற்றைவரை யாதுபெற்றேன் ... *
பந்தமானதிவிட்ட மெழுகாகியுள்ளம் ... ...*
பதைத்துப் பதைத்துருகவோ ... *
பரமசுகமாவது பொறுப்பரியதுரியமாய்ப் ... *
பலகாலு மூர்ச்சிப்பதோ ... ...*
சிந்தையானதுமறிவை யென்னறிவிலறிவான ... *
தெய்வநீ யன்றியுளதோ ... ...*
தேகநிலையல்லவே யுடைகப்பல்கப்பலாய்த் ... ...*
திரையாழி யூடுசெலுமோ ... ...*
சொந்தமாயண்டநீ யதியார்கள்போலவே ... *
துன்பத்திலாழ்த்தன் முறையோ ... *
சுத்தநிற்குணமான பரதெய்வமேபராஞ் ... *
சோதியே சுகவாரியே ... (௰௧)

எந்நாளுமுடலிலே யுயிராமுனைப்போ ... ...*
லிருக்கவிலையோ மனதெனு ... ...*
மியானுமென்னட்பாம் பிராணனுமெமைச்சடம .. *
தென்றுனைச் சித்தென்றுமே ... *
யந்நாளிலெவனோ பிரித்தானதைக்கேட்ட ... *
வன்றுமுத லின்றுவரையு ... ...*
மநியாயமாயெமை யடக்கிக்குறுக்கே ... *
யடர்ந்தரசு பண்ணியெங்கண் ... *
முன்னாகநீயென்ன கோட்டைகொண்டாயென்று ... *
மூடமன மிகவுமேச ... ... *
மூண்டெரியுமனலிட்ட மெழுகாயுளங்கருகன் ... *
முறைமையோ பதிலுயிரஞ் ... *
சொன்னாலுநின்னருளிரங்கவிலையேயினிச் ... *
சுகம்வருவதெப்படிசொலாய் ... ...*
சுத்தநிற்குணமான பரதெய்வமேபராஞ் ... *
சோதியே சுகவாரியே ... ... (௰௨)

சுகவாரி - முற்றிற்று - ஆக - அஅ.

எங்குநிறைகின்றபொருள்.

அவனன்றியோரணுவுமசையாதெனும்பெரிய ...
வாப்தர்மொழி யொன்றுகண்டா ...
லறிவாவதேதுசில வறியாமையேதிவை ...
யறிந்தார்க ளறியார்களார் ... ...
மௌனமொடிருந்ததா ரென்போலுடம்பெலாம்...
வாயாய்ப்பிதற்று மவரார் ... ...
மனதெனவுமொருமாயை யெங்கேயிருந்துவரும் ...
வன்மைபொ டிரக்கமெங்கே ... ...
புவனம்படைப்பதென் கர்த்தவ்யமெவ்விடம் ...
பூதபேதங்க ளெவ்விடம் ... ...
பொய்மெய்யிதமகிதமெல் வருநன்மைதீமையொடு...
பொறைபொறுமையு மெவ்விட ... ...
மெவர்சிறியரெவர்பெரிய ரெவருறவரெவர்பகைஞர்
யாதுமுனை யன்றியுண்டோ ...
விகபரமிரண்டினு முயிரினுக்குயிராகி ...
யெங்குநிறை கின்றபொருளே ... ...(க)

அன்னேயனேயெனுஞ் சிலசமயநின்னையே ...
யையாவையா வென்னவே ... ...
யலறிடுஞ்சிலசமய மல்லாதுபேய்போல ...
வலறியே யொன்றுமிலவாய்ப் ... ...
பின்னேதுமறியாம லொன்றைவிட்டொன்றைப் ...
பிதற்றிடுஞ் சிலசமயமேற் ... ...
பேசரியவொளியென்றும் வெளியென்று நாதாதி......
பிறவுமே நிலயமென்றுந் ... ...
தன்னேரிலாததோ ரணுவென்றுமூவிதத் ...
தன்மையாங் காலமென்றுஞ் ...
சாற்றிடுஞ்சிலசமய மிவையாகிவேறதாய்ச் ...
சதானந்த மானதமலா ... ...
வென்னேயெனேகருணை விளையாட்டிருந்தவா ...
றெம்மனோர் புகலவெளிதோ ...
விகபரமிரண்டினு முயிரினுக்குயிராகி ...
யெங்குநிறை கின்றபொருளே ... (உ)

வேதமுடனாகம புராணமிதிகாசமுதல் ...
வேறுமுள கலைகளெல்லாம் ... ...
மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே ... ...
விரிவா யெடுத்துரைக்கு ... ...
மோதரியதுவிதமே யத்துவிதஞானத்தை ...
யுண்டுபணு ஞானமாகு ... ...

ஏகமனுபவவசன மூன்றுக்குமொவ்வுமீ ...
துபயவாதிகள் சம்மத ... ...
மாதவிலெனக்கினிச்சரியையாதிகள்போது ...
மியாதொன்று பாவிக்கநா ...
னதுவாதலானுன்னை நானென்றுபாவிக்கி ...
னத்துவித மார்க்கமுறலா ... ...
மேதுபாவித்திடினு மதுவாகிவந்தருள்செ ...
யெந்தைநீ குறையுமுண்டோ ...
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ...
யெங்குநிறை கின்றபொருளே ... ...(௫

சொல்லானதிற்சற்றும் வாராதபிள்ளையைத் ...
தொட்டில்வைத்தாட்டியாட்டித் ...
துடையினைக்கிள்ளல்போற் சங்கற்பமொன்றிற் ...
றெடுக்குந் தொடுத்தழிக்கும் ... ...
பொல்லாதவாதனை யெனுஞ்சப்தபூமியிடை ... ...
போந்துதலை சுற்றியாடும் ... ...
புருஷனிலடங்காத பூவைபோற்றனே ...
புறம்போந்து சஞ்சரிக்குங் ...
கல்லோடிரும்புக்கு மிகவன்மைகாட்டிடுங் ... ...
காணாது கேட்டவெல்லாங் ... ...
கண்டதாக்காட்டியே யணுவாச்சுருக்கிடுங் ...
கபடநாடக சாலமோ ... ...
வெல்லாமும்வல்லிந்த மனமாயையேழையா ...
மென்னா லடக்கவசமோ ... ...
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ... ...
யெங்குநிறை கின்றபொருளே ... (௬

கண்ணாரநீர்மல்கி யுள்ளநெக்குருகாத ...
கள்ளனே னானுமோ ... ...
கைகுவித்தாடியும் பாடியும்விடாமலே ...
கண்பனித் தாரைகாட்டி ... ...
யண்ணாபரஞ்சோதி யப்பாவுனக்கடிமை ...
யானெனவு மேலெழுந்த ... ...
வன்பாகிநாடக நடித்ததோகுறையில்லை ...
யகிலமுஞ் சிறிதறியுமேற் ... ...
றண்ணருநின்னதரு ளறியாததல்லவே ...
சற்றேனு மினிதிரங்கிச் ...
சாசுவதமுத்திநிலை யீதென் றுணர்த்தியே ...
[illegible] க்கவேனென் ... ...

றெண்ணமுள்ளபடி சுகமாயிருக்கவே ... *
யேழையேற் கருள்செய்கண்டா ... ...*
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ... *
யெங்குநிறைகின்றபொருளே ... (௫)

காகமானதுகோடி கூடிநின்றாலுமொரு ... *
கல்லின்முன் னெதிர்நிற்குமோ ... *
கர்மமானதுகோடி முன்னேசெய்தாலுநின் ... *
கருணைப்ர வாகவருளைத் ... ... *
தாகமாய்நாடினவர் தீக்கவல்லதோ... ... *
தமியனேற் கருட்டாகமோ ... ...*
சற்றுமிலையென்பதுவும் வெளியாச்சுவினையெலாஞ் ...*
சங்கேத மாய்க்கூடியே ... ... *
தேகமானதுமிகவும் வாட்டுதே துன்பங்கள் ...*
சேராமல் யோகமார்க்க ... ... *
சித்தியோவரவில்லை சகசநிஷ்டைக்குமென் ...*
சிந்தைக்கு மொருதாரநா ... ...*
னேகமாய்நின்றே டிருகருநாளெந்தநா ... *
ளிந்நாளு முற்றாரதோ ... . *
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ... *
யெங்குநிறை கின்றபொருளே ... (௬)

ஒருமைமனதாகியே யல்லறநின்னருளி ... *
லொருவனுன் வந்திருக்கி ... ... *
னுலகம்பொருததோ மாயாவிசித்ரமென ... *
வோயுமோ விடமில்லையோ ... *
வருளுடையநின்னன்பர் சங்கைசெய்திடுவரோ ...*
வலதுகிர்த் தியகர்த்தரா ... ... *
யகிலம் படைத்தெம்மை யாள்கின்ற பேர்சில ...*
ரடாதென்ப ரோவன்ற ... ... *
பெருமைபெறு பூரணங் குறையுமோ பூதங்கள் ...*
பேய்க்கோல மாய்விதண்டை ... ... *
பேசுமோவலதுதான் பரிபாககாலம் ... ... *
பிறக்கவிலையோ சொல்லையா ... ... *
யிருமைசெறிசடவினை யெதிர்த்துவாய்பேசுமோ ...*
வேதுளவ சிறிதுபுகலா ... ... *
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ... *
யெங்குநிறை கின்றபொருளே ... (௭)

தில்லாதுதேதமெனு நினைவுண்டுதேகநிலை ... *
நின்றிடவு மௌனியாகி... *

நேரேயுபாயமொன் றருளினையையோவினை ... ❋
நின்றறுட் டிக்கவென்றூற் ... ... ✡
கல்லாதமனமோ வொடுங்கியுபாதிபெறக் ... ✡
காணவிலை யாகையாலே... ... ... ❋
கையேற்றுணும்புசிப் பொவ்வாதநாளுமுன் ... ❋
காட்சியி லிருந்துகொண்டு ... ❋
வல்லாளராயியம நியமாதிமேற்கொண்ட ... ❋
மாதவர்க் கேவல்செய்து... ... .. ✡
மனநின்படிக்கெலாஞ்சித்தி பெறலாஞானம் ... ✡
வாய்க்குமொரு மனுவெனக்கிங்... ... ❋
இல்லாமையொன்றினையு மில்லாமையாகவே ..
யிப்போ திரங்குகண்டா ... ...
இகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ...
யெங்குநிறை கின்றபொருளே ... (அ

மரவுரியுடுத்துமலை வனநெற்கொறித்துமுதிர் ...
வனசருகு வாயில்வந்தால் ... ...
வன்பசிதவிர்த்துமனல் வெயிலாதிமழையால் ...
வருந்தியும் மூலவனலைச் ... ...
சிரமளவெழுப்பியு நீரினிடைமூழ்கியுந் ...
தேகநம தல்லவென்று... ... ...
சிற்சுகவபேக்ஷையாய் நின்னன்பர்யோகஞ் ...
செலுத்தினு ரியாம்பாவியேன் ...
விரவுமறுசுவையொடு வேண்டுவபுசித்தணையில் ..
வேண்டுவ வெலாமுடுத்தி ... ...
மேடைமாளிகையாதி வீட்டினிடைவைகியே ...
யேமொரு வருத்தமின்றி... ...
யிரவுபகலேழையர்கள் கையோகமாயினு ...
மெப்படி யிழைப்பதையா ...
இகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ....
யெங்குநிறை கின்றபொருளே ... (

முத்தனையமூரலும் பவளவாயின்சொலு ...
முகத்திலகு பசுமஞ்சளு ... ...
மூர்ச்சிக்கவிரகசன் னதமேற்றவிருகும்ப ...
முலையின்மணி மாலைநால ... ...
வைத்தெமைமயக்கியிரு கண்வலையைவீசியே ..
மாயா விலாசமோக ... ...
வாரிதியிலாழ்த்திடும் பாழானசிற்றிடை ...

புத்தமிர்தபோகம் புசித்துவிழியிமையாத ... ... *
பொன்னாட்டும் வந்ததென்றால் .. .. *
போராட்ட மல்லவோ பேரின்ப முத்தியிப் ... ... *
பூமியி லிருந்துகாண ... ... *
வெத்தனை விகாதம்வரு மென்றுசுகர் சென்றநெறி ... *
யிவ்வுலக மறியாததோ ... ... *
விகபர மிரண்டிலு முயிரினுக் குயிராகி ... ... *
யெங்குநிறை கின்றபொருளே... ... ...(௰)

உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந் ... *
துளறிடு மவத்தையாகி ... ... *
யுருவுதான் காட்டாத வானவமு மொளிகண்... ... *
டொளிக்கின்ற விருளென்னவே .. .. *
தன்னிலைமை காட்டா தொருங்கருவி வினையினாற் ....*
றாவுசுக துக்கவேலை ... ... *
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனாற் ... ... *
றடித்தகில பேதமான ... ... *
முன்னிலை யொழிந்திட வகண்டிதா காரமாய் ... *
மூதறிவு மேலுதிப்ப... ... ...*
முன்பின்னுறு கீழ்மே னடுப்பக்க மென்னுமவ் ...*
முற்றுமா னந்தநிறைவே ... ...*
யென்னிலைமையாய்நிற்க வியல்புகூ ரருள்வடிவ ... *
மெந்நாளும் வாழிவாழி ... ... *
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி ... *
யெங்குநிறை கின்றபொருளே ... (௰௧)

எங்குநிறைகின்றபொருள் - முற்றிற்று. ஆ - கககூ.

சச்சிதானந்தசிவம்.

பாராதிககனப் பரப்புமுண்டோவென்று ... *
படர்வெளிய தாகியெழுநாப் ... *
பரிதிமதிகாணாச் சுயஞ்சோதியாயண்ட ... *
பகிரண்ட வுயிரொவைக்கு ... ... *
நேராகவறிவா யகண்டமாபேகமாய் ... *
நித்தமாய் நிர்த்தொந்தமாய் ... *
நிர்க்குணவிலாசமாய் வாக்குமனமணுகாத ... *
நிர்ம்மலா னந்தமயமாய்ப் ... ... *
போராதுநிற்றிநீ சும்மாவிருந்துதான் ... *
பேரின்ப மெய்திடாமற் ... ... *

பேய்மனதையண்டியே தாயிலாப்பிள்ளைபோற் ... ...
பித்தாகவோ மனதைநான் ... ...
சாராதபடியறிவி னிருவிகற்பாங்கமாஞ் ...
சாசுவத நிஷ்டையருளாய் ... ...
சர்வபரிபூரண வகண்டதத்துவமான ...
சச்சிதா னந்தசிவமே ... ... (௧)

குடக்கொடிகுணக்காதி திக்கினையுமக்கூடு ...
கொள்ளல்போ லேந்துபூதங் ...
கூடுஞ்சுருங்கிலேச் சாலோகமொன்பது ....
குலாவுநடை மனையைநாறும் ...
வடக்கயிறுவெண்ணரம் பாவென்புதசையிறுன் ...
மதவேள்வி நாநடத்த ... ...
வைக்கின்றகைத்தோலை வெண்ணீர்செநீர்கணீர் ...
மலநீர்பு ணீரிறைக்கும் ... ...
விடக்குத்துருத்தியைக் கருமருந்துக்கூட்டை ...
வெட்டவெட்டத் தழிர்க்கும் ...
வேட்கைமாமுறுகின்ற சுடுகாட்டைவிடிவிலே ...
மெய்போலிருந்து பொய்யாஞ் ... ...
சடக்கைச்சடக்கெனச் சதமென்றுசின்மயந் ... ...
தானாகி நிற்பதென்றோ ... ...
சர்வபரிபூரணவகண்டதத் துவமான ...
சச்சிதா னந்தசிவமே ... ... (௨

பாகத்தினாற்கவிதை பாடிப்படிக்கவோ ...
பத்திநெறி யில்லைவேத ... ...
பாராயணப்பணுவன் மூவர்செய்பணுவலது ... ...
பகரவோ விசையுமிலை ... ...
யோகத்திலேசிறிது முயலவென்றற்றேக ...
மொவ்வாதி லூண்வெறுத்தா ... ...
துயிர் வெறுத்திடலாக்கு மல்லாதுகிரியைக ...
ளுபாயத்திற் செய்யவோ ...
மோகத்திலேசிறிது மொழியவிலைமெய்ஞ்ஞான ... ...
மோனத்தி னிற்கவென்றன் ... ...
மூற்றுதுபரிபாக சத்திகளேனுநின்
மூதறிவிலே ...
தாகத்திலேவாய்க்கு மயிர்த்தபோ ... ...
தன்னந்தனிப் பெருமையே ...
சர்வபரிபூரண வகண்டதத்துவமான ...
சச்சிதானந்த சிவமே ... ... (

T.12368

சச்சிதானந்தசிவம்

இமையளவுபோதையொரு கற்பகாலம்பண்ணி ...
யிவ்வுலக மெவ்வுலகமோ ... ...
வென்றெண்ணம்வருவிக்கு மாதர்சிற்றின்பமோ...
வென்னின்மக மேருவாக்கிச் ...
சுமையெடுமினென்றுதான் சும்மாடுமாயெமைச் ...
சுமையாளு மாக்கிநாளுந் ... ...
தூர்ப்புத்திபண்ணிபுள நற்புத்தியாவையுந் ...
சூறையிட் டிந்த்ரசால... ... ...
மமையவொருகூத்துஞ் சமைந்தாடுமனமாயை ...
யம்மம்ம வெல்லவெளிதோ ...
வருள்பெற்றபேர்க்கெலா மொளிபெற்றுநிற்குமீ ...
தருளோ வலாதுமருளோ ... ...
சமயநெறிகாணாத சாக்ஷிநீசூக்ஷ்மமாத் ...
தமியனேற் குளவுபுகலாய் ... ...
சர்வபரிபூரண வகண்டதத்துவமான ...
சச்சிதா னந்தசிவமே... ... ...(ச)

இனியேதெமக்குனருள் வருமோவெனக்கருதி ...
யேங்குதே நெஞ்சமையோ ...
வின்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் ...
றெண்ணவோ திடமில்லையே ...
யனியாயமாயிந்த வுடலைநானென்றுவரு ...
மந்தகற் காளாகவோ ... ...
வாடித்திருந்துநான் கற்றதுங்கேட்டது ...
மவலமாய்ப் போதனன்றோ ...
கனியேனும்வறிய செங்காயேனுமுதிர்சருகு ...
கந்தமூலங்க ளேனுங்... ... ...
கனல்வாதைவந்தெய்தி னள்ளிப்புசித்துநான் ...
கண்மூடி மௌனியாகித் ... ...
தனியேயிருப்பதற் கெண்ணினேனெண்ணமிது ...
சாமிநீ யறியாததோ ... ...
சர்வபரிபூரணவகண்டதத்துவமான ...
சச்சிதா னந்தசிவமே .. ... (ரு)

மத்தமதகரிமுகிற் குலமென்னநின்றிலகு ...
வாயிலுடன் மதியகடுதோய் ...
மாடகூடச்சிகர மொய்த்தசந்திரகாந்த ...
மணிமேடை யுச்சிமீது ... ...
முத்தமிழ்முழக்கமுடன் முத்தநகையார்களொடு ...
முத்துமுத்தாய்க் குலாவி ... ...

மோகத்திருந்துமென் போகத்தினிலைநின்று ...
மூச்சைப் பிடித்தடைத்துக் ...
கைத்தலநகைப்படை விரித்தபுலிசிங்கமொடு ...
காடுநுழை நூழைகொண்ட ...
கானமலையுச்சியிற் குகையூடிருந்துமென் ...
காதலா மலகமென்னச் ... ...
சத்தமறமோனநிலை பெற்றவர்களுய்வர்காண்
சனகாதி முனிவிதன்றோ ... ...
சர்வபரிபூரண வகண்டதத்துமான ... ...
சச்சிதானந்த சிவமே ... ... (௫)

கைத்தலம்விளங்குமொரு நெல்லியங்கனியெனக் ..
கண்டவே தாகமத்தின் ... ...
காட்சிபுருஷார்த்தமதின் மாட்சிபெறமுத்தியது ...
கருதினது மானமாதி ... ...
யுத்திபலவாதிரு விகற்பமேலில்லையா ...
லொன்றோ டிரண்டென்னவோ... ...
வுரையுமிலைநீயுமிலை நானுமிலையென்பது... ...
முபாயநீ யுண்டுநானுஞ் ... ...
சித்தமுளநானில்லை யெனும்வசனநீயறிவை ...
தெரியார்க டெரியவசமோ ...
செப்புவேவலநீதி யொப்புவமையல்லவே ...
சின்முத்தி ராங்கமாயிற் ... ...
சத்தமறவெனையாண்ட குருமௌனிகையினூற் ...
றமியனேற் குதவுபொருளே ...
சர்வபரிபூரண வகண்டதத்துவமான... ...
சச்சிதா னந்தசிவமே... ... ...(௬)

காயாதமரமீது கல்லேறுசெல்லுமோ ...
கடவுணீ யாங்களடியேம் ... ...
கர்மபந்தத்தினூற் சன்மபந்தம்பெறக் ...
கற்பித்த துன்னதருளே... ... ...
வாயாரவுண்டபேர் வாழ்த்துவதுநொந்தபேர் ...
வைவதுவு மெங்களுலக ... ...
வாய்பாடுநிற்கநின் வைதிகவொழுங்குநினை ...
வாழ்த்தினூற் பெறுபேறுதா ...
ஞேயாதுபெறுவொன மூறையிட்டதாற்பின்ன ...
ருளறுவது கருமமன்று ... ...
மூபயநெறியிதென்னி னுசிதநெறியெந்தநெறி ...
யுலகிலேபிழைபொறுக்குந் ...

தாயானகருணைபு ருனக்குண்டெனக்கினிச் ... *
சஞ்சலங்கெட வருள்செய்வாய் ... *
சர்வபரிபூரண வகண்டதத்துவமான ... *
சச்சிதானந்தசிவமே ... ... (௮)

இன்னம்பிறப்பதற் கிடமென்னினிவ்வுடல ... *
மிறவா திருப்பமூலத்... ... *
தெழுமங்கியமிர்தொழுகு மதிமண்டலத்திலுற *
வென்னமைமை தண்டவினியாற் ... ... *
கின்னம்பிறக்காது சேயெனவளர்த்திடப் ... *
பேயேனை நல்கவேண்டும் ... ... *
பிறவாதநெறியெனக் குண்டென்னினிம்மையே ... *
பேசுகாப் பூரதிப ... ... *
மின்னும்படிக்ககண் டாகாரவன்னைபால் ... *
வினையேனை யொப்புவித்து ... *
வீட்டுநெறிகூட்டிடுதன் மிகவுநின்றிலையன்றி ... *
விவகார முண்டென்னிலோ ... *
தன்னந்தனிச்சிறிய னுற்றிலேன்போற்றிவளர் ... *
சன்மார்க்க முத்திமுதலே ... .. *
சர்வபரிபூரண வகண்டதத்துவமான ... *
சச்சிதானந்தசிவமே ... ... (௯)

வேதாவையிவ்வணம் விதித்ததேதென்னினுன் ... *
வினைப்பகுதி யென்பனந்த ... *
வினைபேசவறியாது நிற்கவிலைமனதால் ... *
விளைந்ததான் மனதைநாடிற் ... *
போதமேநிற்குமப் போதத்தைநாடிலோ... ... *
போதமுனி னுல்விளக்கம்... ... *
பொய்யன்றுதெய்வமறை யாவுமேநீயென்று ... *
போக்குவர வரநிகழ்ந்து ... ... *
மாதாரவாதேய முழுதுந்யாதலா ... *
லகிலமீ தென்னையாட்டி ... ... *
யாடல்கண்டவனுநீ யாடுகின்றவனுநீ ... *
யருளுநீ மௌனகுரு ... ... *
தாதாவுநீபெற்ற தாய்தந்தைதானுநீ ... *
தமருநீ யாவுநீகாண் ... ... *
சர்வபரிபூரண வகண்டதத்துவமான ... ... *
சச்சிதானந்தசிவமே ... ... (௰)
கொத்தவிழ்மலர்ச்சோலை நன்னீழல்வைகினுங் ... *
குளிர்திம் புனற்கையள்ளிக் ... ... *

கொள்ளுகினுமந்நி ரிடைத்திளைத்தாடினுங்... ...*
குளிர்சந்த வாடைமடவார் ... ... ✡
வத்துலவுகின்றதென முன்றிலிடையுலவவே ... *
வசதிபெறு போதும்வெள்ளை ... *
வட்டமதிபட்டப் பகற்போலநிலவுதர ... *
மகிழ்போதும் வேலையமுதம் ... *
விந்தைபெறவறுசுவையில் வந்ததெனவமுதுண்ணும் *
வேளையிலும் மாலைகத்தம் ... ..✡
வெள்ளிலைப்படைக்காய் விரும்பிவேண்டியவண்ணம்.....✡
விளையாடி விழிதுயிலினுஞ் ... *
சந்ததமுநின்னருளை மறவாவரந்தந்து ... *
தமியேனை ரக்ஷைபுரிவாய் ... ... *
சர்வபரிபூரண வகண்டதத்துவமான ... *
* சச்சிதா னந்தசிவமே ... ... (௰௧)

சச்சிதானந்தசிவம் - முற்றுப்பெற்றது - ஆ - ௱௰.

தேசோமயானந்தம்.

மருமலர்ச்சோலைசெறி நன்னீழன்மலையாதி ... *
மன்னுமுனிவர்க் கேவலாய் ... ... *
மந்த்ரமாலிகைசொல்லு மியமநியமாதியா ... *
மார்க்கத்தி னின்றுகொண்டு ... *
கருமருவுகாயத்தை நிர்மலமதாகவே ... *
கமலாச னுதிசேர்த்துக் ... ... *
காலைப்பிடித்தனலை யம்மைகுண்டலியடிக் ... *
கலைமதியி னூடுதாக்கி ... ... *
யுருகிவருமமிர்தத்தை யுண்டுண்டுறங்காம ..... *
லுணர்வான விழியைநாடி ... ...
யொன்றோடிரண்டெனுஞ் சமரசசொரூபசுக ...
முற்றிடவென் மனதின்வண்ணந்... ...
திருவருண்முடிக்கவித் தேகமொடுகாண்பனோ ...
தேடரிய சத்தாகியென் ... ...
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே ...
தேசோ மயானந்தமே ... ... (௧)

இப்பிறவியெனுமோ ரிருட்கடலின்மூழ்கிநா ..
னென்னுமொரு மகரவாய்ப்பட் ...
டிருவினையெனுந்திரையி னெற்றுண்டுபுற்புத ...
மெனக்கொங்கை வரிசைகாட்டுந் ...

துப்பிதழ்மடந்தையர் மயற்சண்டமாருதச் ... *
சுழல்வந்து வந்தடிப்பச் ... ... *
சோராதவாசைபாங் காறுறுவானதி .. ... *
சுரந்ததென மேலுமார்ப்பக் ... *
கைப்பரிசகாரர்போ லறிவானலங்கமுங் ... *
கைவிட்டு மதிமயங்கிக் ... ... *
கள்ளவங்கக்காலர் வருவரென்றஞ்சியே ... *
கண்ணருவி காட்டுமெளியேன் ... *
செப்பரியமுத்தியாங் கரைசேரவுங்கருணை ... *
செய்வையோ சத்தாகியென் ... *
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே ... *
தேசோ மயானந்தமே ... ... (உ)

தந்தைதாய்தமர்தார மகவென்னுமிவையெலாஞ்... ... *
சந்தையிற்கூட்டமிதிலோ ... ... *
சந்தேகமில்லைமணி மாடமாளிகைமேடை... ... *
சதுரங்க சேனையுடனே ... ... *
வந்ததோர்வாழ்வுமோரிந்த்ரசாலக்கோலம் ... *
வஞ்சனைபொறாமை லோபம் ... *
வைத்தமனமாங்கிருமி சேர்ந்தமலபாண்டமோ ..... *
வாஞ்சனையி லாதகனவே ... ... *
யெந்தநாளுஞ்சரி யெனத்தேர்ந்துதேர்ந்துமே... ... *
யிரவுபக லில்லாவிடத் ... ... *
தேகமாய்நின்றநின் னருள்வெள்ளமீதிலே ... *
யானென்ப தறவுமூழ்கிச் ... ... *
சிந்தைதான்றெளியாது சுழலும்வகையென்கொலோ *
தேடரிய சத்தாகியென் ... *
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே ... *
தேசோ மயானந்தமே ... ... (௩)

ஆடாமலோய்ந்திட்ட பம்பரம்போல்வினை ... *
யடங்கிமனம் வீழநேரோ ... ... *
யதியானமயாகின்ற விருளகலவிருளொளியு ... *
மல்லாதிருந்த வெளிபோற் ... *
கோடாதெனைக்கண் டெனக்குநிறைசாந்தவெளி... *
கூடியின் பாதீதமுங் ... ... *
கூடினேஞ்சரியை கிரியையின்முயன்றநெறி ... *
கூடினேனு வல்லனியா ... ... *
வீடாகவேயாறு வீட்டினிரம்பியே ... *

மிருதிவியினைக்கட்டி யோகபாருகாம
லேழைக்குடும்ப னாகித்
தேடாதழிக்கவொரு மதிவந்ததென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (௬)

பாடாதுபாடிப் படித்தளவில்சமயமும்
பஞ்சுபடு சொல்லனினைப்
பார்மிதேயார்மிதே தென்றுசபைகூடவும்
பரமார்த்த மிதுவென்னவே
பாடாதுமாடிநெஞ் சுருகிநெக்காடவே
யமலமே யேகமேயெம்
மாதியேசோதியே யெங்குநிறைகடவுளே
யாசேயெனக் கூவிநான்
வாடாதுவாடுமென் முகவாட்டமுங்கண்டு
வாடாவெனக் கருணைநீ
வைத்திடாவண்ணமே சங்கேதமாவிந்த
வன்மையை வளர்ப்பித்ததார்
தேடாதுதேடுவோர் தேட்டற்றதேட்டமே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (

பிறியாததன்னருட் சிவஞானியாய்வந்து
பேசரிய வாசியாலே
பேரின்பவுண்மையை யளித்தனையென்மனதறப்
பேரம் பலக்கடவுளா
யறிவாயிருந்திடு நாதவொலிகாட்டியே
யமிர்தப்ர வாகசித்தி
யருளினையலாதுதிரு வம்பலமுமாகியெனை
யாண்டனைபி னெய்திநெறியாய்க்
குறிதானளித்தனைநன் மாவுரிகொளந்தணைக்
கோலமா யசபாநலங்
கூறினபின்மௌனியாய்ச் சும்மாவிருக்கநெறி
கூட்டினை யெலாமிருக்கச்
சிறியேன்மயங்கிமிக வறிவின்மையாவனே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே

ஆரெனக்கென்ன போதித்துமென்னவென் ...*
அறிவினை மயக்கவசமோ ... ... *
வண்டகோடிகளெலாங் கருப்பவறைபோலவு ...*
மடுக்கடுக் காவமைத்துப் ... ... *
போமறிற் பர வெளியிலேயனைவெளி ... *
பிறங்குவ தலாதொன்றிலும் ... *
பின்னமுறமருவாது நன்னயத்தாலினிப் .. *
பேரின்ப முத்திநிலையுந் ... ... *
தாராதுதள்ளவும் போகாதுறைவது ... *
தள்ளினும் போகேனியான் ... ... *
நடையேதுமில்லையாண் டவனடிமையென்றுமிரு .. *
தன்மையிலு மென்வழக்குத் ... *
தீராதுவிடுவதிலை நடுவானகடவுளே... ... *
தேடரிய சத்தாகியென் .. ..*
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே ... *
தேசோ மயானந்தமே ... ... (௭)

கந்துகமதக்கரியை வசமாநடத்தலாங் ... ...*
கரடிவெம் புலிவாயையுங் ... ... *
கட்டலாமொருசிங்க முதுகின்மேற்கொள்ளலாங் ...*
கட்செவி யெடுத்தாட்டலாம் ... *
வெந்தழலினிரதம்வைத் தைந்துலோகத்தையும் ... *
வேதித்து விற்றுண்ணலாம் ... *
வேறொருவர்காணாம லுலகத்துலாவலாம் ... *
விண்ணவரை யேவல்கொளலாஞ் ... ...*
சந்ததமுமிளமையோ டிருக்கலாமற்றொரு ... *
சரீரத்தினும் புகுதலாஞ் ... ... *
சலமேனடக்கலாங் கனன்மேலிருக்கலாந் ... *
தன்னிகரில் சித்திபெறலாஞ் ... *
சிந்தையையடக்கியே சும்மாவிருக்கின்ற ... *
திறமரிது சத்தாகியென் ... ... *
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே ...*
தோசோ மயானந்தமே ... ...(அ)

எல்லாமறிந்தவரு மேதுமறியாதவரு ... *
மில்லையெனு மிவ்வுலகமீ ... ... *
தேதுமறியாதவ னெனப்பெயர்தரித்துமிக .. *
வேழைக்கு ளேழையாகிக் ... ... *
கல்லாதவறிவிற் கடைப்பட்டநானன்று ... *
கையிறு லுண்மைஞானங் ... ... *

கற்பித்த நின்னருளினுக்கென்னைகைம்மாறு ... *
காட்டுவேன் குற்றேவலு... .. ...*
னல்லார்ந்தமேனியொடு குண்டுகட்டிறையெயிற்... *
றுபாச வடிவமான ... ... *
வந்தகா நீயொரு பகட்டாற்பகட்டுவ... ... *
தடாதடா காசுநம்பாற் .. ..*
செல்லாதடாவென்று பேசவாயதுதந்த ... *
செல்வமே சத்தாகியென் ... ... *
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே *
தேசோ மயானந்தமே ... .. (௬)

மின்போலு மிடையொடியு மொடியுமென மொழிதல்
மென்கிலம் பொலிகளாரிப்ப ... [போன்
வீங்கிப்புடைத்துவிம்மு சுமையன்னகொங்கைமட ...*
மின்னார்கள் பின்னேயலா ... *
லென்போலவந்தவர்கள் கற்றார்கள்கல்லார்க ... *
ளிருவர்களிலொருவருண்டோ ... *
வென்செய்கேனம்மம்ம வென்பாவமென்கொடுமை *
யேதென் றெடுத்துமொழிவே ... *
னன்பால்வியந்துருகி யடியற்றமரமென்ன ...*
வடியிலே வீழ்ந்துவீழ்ந்தெம் ... *
மடிகளேயுமதடிமை யாங்களென்றுநால்வருக் ... *
கறமாதி பொருளுரைப்பத் ... *
தென்பாலின்முகமாகி வடவாலிருக்கின்ற ... *
செல்வமே சத்தாகியென் ... ... *
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே ... *
தேசோ மயானந்தமே ... ... (௭)

புத்தமிர்தபோகமுங் கற்பகநனீழலிற் ... *
பொலிவுற விருக்குமியல்பும் ... *
பொன்னுலகிலயிராவதத்தேறுவரிசையும் ... *
பூமண்டலாதிக்கமும் ... ... *
மத்தவெறியினர்வேண்டு மாலென்றுதள்ளவுமெ ...*
மாறுமொரு சுட்டுமறவே ... ...*
வைக்கின்றவைப்பாளன் மௌனதேசிகனென்ன ... *
வந்ததின் னருள்வாழிகாண் ... ...*
சுத்தபரிபூரண வகண்டமேயேகமே ... *
சுருதிமுடி வானபொருளே ... *
சொல்லரியவுயிரினிடை யங்கங்குநின்றருள் ... *
சுரந்துபொழி கருணைமுகிலே ... *

சித்தநிலைமுத்திநிலை விளைகின்றபூமியே ... *
தேடரிய சத்தாகியென் ... ...*
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே ... *
தேசோமயானந்தமே ... ...(௰௧)
தேசோமயானந்தம் - முற்றுப்பெற்றது - ஆக - ௱௨௧.

சிற்சுகோதயவிலாசம்.

காகமோடுகழுகலகை நாய்நரிகள் ... *
சுற்றுசோறிடு துருத்தியைக் ... *
காலிரண்டுநவ வாசல்பெற்றுவளர் ... ... *
காமவேளடன சாலையை ... ...*
மோகவாசைமுறி யிட்டபெட்டியைமு ... *
மலமிகுந்தொழுகு கேணியை ... *
மொய்த்துவெப்பிருமி தத்துகும்பியை ... *
முடங்கலார்க்கிடை சரக்கினை ... *
மாகவிந்த்ரஜால மின்னையொத்திலக ... *
வேதமோதிய குலாலனார் ... ... *
வனையவெய்யதடி காரனாயமன் ... *
வந்தடிக்குமொரு மட்கலத் ... *
தேகமானபொய்யை மெய்யெனக்கருதி ... *
யையமையபிசை வாடவோ ... *
தெரிவதற்கரிய பிரமமேயமல ... ... *
சிற்சுகோதய விலாசமே ... ...(௧)
குறிகளோடுகுண மேதுமின்றியனு ... *
லொழுகநின்றிடு மிருப்பனைக் ... *
கூடலின்றியனு வாயிருந்தபடி ... ... *
கொடியவாணவ மறைக்குமே ... *
யறிவதேதுமற வறிவிலாமைமய ... *
மாயிருக்குமெனை யருளினு ... *
ளளவிலாததனு காரணமாதியை ... ... *
யளித்தபோதுமனை யறிந்துநான் ... *
பிறிவிலாதவனை நின்றிடாதபடி ... ... *
பெலநிறங்கவரு மூமலமாய்ப் ... *
பெரியமாயையி லழுந்திநின்னது ... *
ப்ரசாதநல்லருளை மறந்திடுஞ் ... *
சிறியனேனுமுனை வந்தணைந்துசுக ... .. *
மாயிருப்பதினி யென்றுகாண் ... *

டெரிவதற்கரிய பிரமமேயமல ... ...
சிற்சுகோதய விலாசமே ... ... (௨)

ஐந்துபூதமொரு காரணமொன ... ...
வடங்கவந்தபெரு வானமே ... ...
யாகியந்தநடு வேதுமின்றியரு ... ...
ளாய்நிறைந்திலகு சோதியே ...
தொந்தரூபமுட னரூபமாகுறி ...
குணமிறந்துவளர் வஸ்துவே ...
துரியமேதுரிய வுயிரினுக்குணர்வு ...
தோன்றநின்றருள் சுபாவமே ...
யெந்தநாளுநடு வாகிநின்றொளிரு ...
மாதியேகருணை நீதியே ... ...
யெந்தையேயென விடைந்திடைந்துருகு ... ...
மெளியனேன்கவலை தீரவுஞ் ... ...
சிந்தையானதை யறிந்துநீயுனருள் ... ...
செய்யநாளுமினி யுய்வனோ ... ...
தெரிவதற்கரிய பிரமமேயமல .. ..
சிற்சுகோதய விலாசமே ... ...(௩)

ஐவரொன்றபுல வேடர்கோட்டம ... ...
தடங்கமர்க்கடவன் மூட்டியா ... ...
யடவிநின்றமலை யருகினின்றசரு ... ...
காதிநின்றபனி வெயிலினொன் ... ...
மெய்வருந்துதவ மில்லைநற்சரியை ... ...
கிரியையோகமெனு மூன்றதாய் ... ...
மேவுகின்றசவு பானநன்னெறி... ... ...
விரும்பவில்லையுல கத்திலே ... ...
பொய்முடங்குதொழில் யாததற்குநல ... ...
சாதித்தொழி னடத்திடும்... ... ...
புத்திபூகமறி வற்றமூகமிவை ... .
பொருளெனக்கருது மருளன்யான் ...
றெய்வநல்லருள் படைத்தவன்பரொடு ... ...
சேரவுங்கருணை கூர்வையோ ... ...
தெரிவதற்கரிய பிரமமேயமல ... ...
சிற்சுகோதய விலாசமே ... ... (௪

ஏகமானவுரு வானநீயருளி ... ...
னேகமானவுரு வாகியே ... ...
யெந்தநாளகில கோடிசிர்ஷ்டிசெய ... ...
விசையநாள்வரையநாண்முத ... ...

லாசநாளது வரைக்குமுன்னடிமை ... ... *
கூடவேசனன மானதோ ... ... *
வனந்தமுண்டுதல சனனமீதினு ... *
ளறியவேண்டுவன வறியலா ... ... *
மோகமாதிதரு பாசமானதை ... ... *
யறிந்துவிட்டுனையு மென்னையுமே ... *
முழுதுணர்ந்துபர மானவின்பவெள ... *
ளமூழ்கவேண்டுமிது வின்றியே ... ... *
தேகமேநழுவி நானும்மாதழுவின் ... *
பின்னையுய்யும்வகை யுள்ளதோ ... *
தெரிவதற்கரிய பிரமமேயமல ... ... *
சிற்சுகோதயவிலாசமே ... ...(௫)

நியமலக்ஷணமு மியமலக்ஷணமு ... *
மாசனாதிவித பேதமு ... ... *
நெடிதுணர்ந்திதய பத்மபீடமிசை ... *
நின்றிலக்குமச பானலந் ... ... *
தியலறிந்துவளர் மூலகுண்டலியை ... *
யினிதிறைஞ்சியவ ளருளினு ... *
லெல்லையற்றுவளர் சோதிமூலவனை ... *
லெங்கள்மோனமது முறையிலே ... *
வயமிகுந்துவரு மமிர்தமண்டல ... ... *
மதிக்குளேமதியை வைத்துநான் ... *
வாய்மடுத்தமிர்த வாரியைப்பருகி ... *
மன்னுமாரமிர்த வடிவமாய்ச் ... *
செயமிகுந்துவரு சித்தயோகநிலை ... *
பெற்றஞானநெறி யடைவனே ... *
தெரிவதற்கரிய பிரமமேயமல ... ... *
சிற்சுகோதய விலாசமே ... (௬)

எதிரிலாக்கட லிகர்த்தசெல்வமிக ... *
வலலலென்றொருவர் பின்செலா ... *
தில்லையென்றுமுரை பேசிடாதுலகி ... *
லெவருமாமென மதிக்கவே ... *
நெறியின்வைகிவளர் செல்வமும்முதவி ... *
நோய்களற்றசுக வாழ்க்கையாய் — *
நியமமாதிநிலைநின்றஞானநெறி ... ... *
நிஷ்டைகூடவுமெந் நாளுமே ... *
யறிவினின்றகுரு வாயுணர்த்தியது ... *
மன்றிமோனகுரு வாகியே ... .. *

யகிலமீதுவர வந்தசிரருளை ... ...
யையவையவினி யென்சொல்கேன் ...
சிறியனேனைநம தடிமையென்றனது ...
திருவுளத்தினி லிருந்ததோ ... ...
தெரிவதற்கரிய பிரமமேயமல ... ...
சிற்சுகோதய விலாசமே ... ...(எ)

எவ்வுயிர்த்திரளு முலகிலென்னுயி ... ...
ரெனக்குழைந்துருகி நன்மையா ...
யிதமுரைப்பவென தென்றயாவையு ...
மெயித்தெறிந்துமத யானைபோற் ...
கவ்வையற்றநடை பயில்வன்பரடி ...
கண்டதேவருளின் வடிவமாக் ...
கண்டயாவையு மகண்டமென்னவிரு ...
கைகுவித்துமலர் தூவியே ... ..
பவ்வவெண்டிரை கொழித்தண்டரளம் ...
விழியுதிர்ப்பமொழி குளறியே ...
பாடியாடியு ளுடைந்துடைந்தெழுது ...
பாவையொத்தசைத லின்றியே ... ...
திவ்யவன்புருவ மாகியன்பரொடு ... ...
மின்பவீட்டினி லிருப்பனோ ...
தெரிவதற்கரிய பிரமமேயமல ... ..
சிற்சுகோதய விலாசமே ... (அ)

மத்தர்பேயரொடு பாலர்தன்மையது ... ...
மருவியேதுரிய வடிவுமாய் ...
மன்னுதேசமொடு காலமாதியை ...
மறந்துநின்னடியரடியிலே ...
பத்தியாய்நெடிது நம்புமென்னையொரு ...
மையறந்தகிலமாயையைப் ... ...
பாருபாரெனநடத்தவந்தென ... ...
பாரதத்திலுமிதுள்ளதோ ... ...
சுத்தநித்தவியல்பாகுமோவுனது ... ..
விசுவமாயைநடுவாகவே ... ...
சொல்லவேணும்வகைநல்லகாதிகதை ...
சொல்லுமாயையினு மில்லையென் .....
சித்தமிப்படிமயங்குமோவருளை ... ...
நம்பினோர்கள்பெறுபேறிதோ ...
தெரிவதற்கரியபிரமமேயமல ... ...
சிற்சுகோதயவிலாசமே ... ...

பன்முகச்சமயநெறி படைத்தவரு ... *
மியாங்களே கடவுளென்றிடும் ... *
பாதகத்தவரும் வாதத்தர்க்கமிடு ... ... *
படிறருந்தலை வணங்கிடத் ... ... *
தன்முகத்திலுயிர் வரவழைக்குமெம ... ✡
தருமனும்பகடு மேய்க்கியாய்த் ... *
தனியிருப்பவட நீழலூடுவளர் ... ... *
சனகனாதிமுனி வோர்கடங்... ... *
தொன்மயக்கமிது தீரவங்கைதொடு ... *
மோனஞானம துணர்த்திடே ... ... *
சுத்தநித்தவரு ளியல்புதாகவுள ... ... *
சோமசேகர கிர்பாளுவாய்த் ... *
தென்முகத்தின் முகமாயிருந்தகொலு ... *
வெம்முகத்திலும் வணங்குவேன் ... ✡
தெரிவதற்கரிய பிரமமேயமல ... ... *
சிற்சுகோதயவிலாசமே ... ... (௰)

சிற்சுகோதயவிலாச - முற்றுப்பெற்றது - ஆக- ௱௬௰௧.

ஆகாரபுவனம்- சிதம்பரரகசியம்.

ஆகாரபுவன மின்பாகாரமாக ... ... *
வந்தனேயொருமொழியா லகண்டாகார ... ✡
யோகானுபூதிபெற்ற வன்பராவிக் ... *
குறாதுணையேயென்னவு முகந்தநட்பே ... *
வாராரும்படிக்கசைகின்ற கிளிவாயென்ன ... *
மலர்ந்தமலரிடைவாசம் வயங்குமாபோற் ... ✡
றேகாதியுலகமெங்குங் கலந்துதானே ... *
நிகழனந்தானந்தமயத் தெய்வக்குன்றே (௧)
அனந்தபதவுயிர்களொடு முயிராயென்று ... *
மானந்தநிலையாதி யளவைக்கெட்டாத் ... *
தனந்தனிச்சின்மாத்திரமாய்க் கிழ்மேல்காட்டாச் ... *
சதசத்தாயருட்கோயிற் றழைத்ததேவே ... *
யினம்பிரிந்தமான்போலு னிடையாவண்ண ... ✡
மின்பமுறவன்பர்பக்க லிருத்திவைத்துக்... *
கனந்தருமாகனமேதன் னருளிற்றானே ... *
கனிபலித்தவானந்தக் கட்டிப்பேறே ... (௨)
பேறனைத்துமனுவெனவே யுதறித்தள்ளப் ... *
பேரின்பமாகவந்த பெருக்கேபேசா ... *

வீறனைத்துமுந்நெறிக்கே யென்னவென்னை ...
மேவென்றவரத்தேபாழ் வெய்யமாயைக் .. ...
கூறனைத்துங்கடந்தவெல்லைச் சேடமாகிக் ...
குறைவறநின்றிடுநிறைவே குலவாநின்ற ...
வாறனைத்தும்புகுங்கடல்போற் சமயகோடி... ...
யத்தனையுந்தொடர்ந்துபுகு மாதிநட்டே ...(௫)

ஆதியந்தமெனுமெழுவா யீறற்றோங்கி ...
யருமறையின்னமுங் காணாதாற்றநாளு
பேதமதங்களு மலையமலைபோல்வாதப் ...
பெற்றியரும்வாய்வாதப் பேயராகச் ...
சாதகமோனத்திலென்ன வடவானீழற் ...
றண்ணருட்சந்திர மௌனிதடக்கைக்கேற்க...
வேதகசின்மாத்திரமா யெம்மனோர்க்கும் ...
வெளியாகவந்தவொன்றே விமலவாழ்வே (௬
விமலமுதற்குணமாகி நூற்றெட்டாதி ...
வேதமெடுத்தெடுத்துரைத்த விருத்திக்கேற்க...
வமையுமிலக்கண வடிவாயதுவும்போதா ...
தப்பாலுக்கப்பாலா யருட்கண்ணாகிச் ...
சமமுடன்கலப்புமவிழ் தனுமியாங்காணத் ...
தண்ணருடந்தெம்மக்காக்குஞ்சாக்ஷிப்பேறே...
யிமையளவுமுபகாரமல்லால்வேறொன் ... ...
றியக்காநிர்க்குணக்கடலா யிருந்தவொன்றே ...(
ஒன்றாகிப்பலவாகிப்பலவுக்கண்ட ... ...
வொளியாகிவெளியாகியுருவுமாகி... ... ..
நன்றாகித்தீதாகிமற்றுமாகி ... ...
நாசமுடனுற்பத்திநண்ணாதாகி ... ...
யின்றாகிநாளையுமாய்மேலுமான ... ...
வெந்தையேயெம்மானேயென்றென்றேங்கிக்..
கன்றாகிக்கதறினர்க்குச்சேதாவாகிக் ... ...
கடிதினில்வந்தருள்கூருங்கருணைவிண்ணே ... (

அருள்பழுத்தபழச்சுவையேகரும்பேதேனே ..
யாரமிர்தேயென்கண்ணேயரியவான ...
பொருளனைத்துந்தரும்பொருளேகருணைநீங்காப் ...
பூரணமாய்நின்றவொன்றேபுனிதவாழ்வே ...
கருதரியகருத்தகனுட்கழித்தாய்மேவிக் ...
காலமுந்தேசமும்வகுத்துக்கருவியாதி ...
விரவினையுங்கூட்டியுயிர்த்திரளையாட்டும் ... ...[(
விழுப்பொருளேயான்சொலும் விண்ணப்பங்

விண்ணவரிந்திரன்முதலோர் நாரதாதி ... *
    விளங்குசப்தரிஷிகள்கண வீணைவல்லோ ... *
ரெண்ணரியசித்தர்மனு வாதிவேந்த ... ...*
    ரிருக்காதிமறைமுனிவ ரெல்லாமிந்தக் ... ..*
கண்ணகன்ஞாலம்மதுக்கத் தானேயுள்ளங் ... *
    கையினெல்லிக் கனிபோலக்காட்சியாகத் ... *
திண்ணிபநல்லறிவாலிச் சமயத்தன்றோ ... *
    செப்பரியசித்திமுத்தி சேர்ந்தாரென்றும் .. (௮)

செப்பரியசமயநெறி யெல்லாந்தன்றன் ... *
    தெய்வமேதெய்வமெனுஞ் செயற்கையான ... *
வப்பரிசாளருமஃதே பிடித்தாலிப்பா ... ..*
    லடித்ததந்நூல்களும்விரித்தே யனுமானாதி ...*
யொப்பவிரித்துரைப்பரிங்ஙன் பொய்மெய்யென்ன *
    வொன்றிலையொன் றெனப்பார்ப்பதெவ்வாதார்க்
மிப்பரிசாஞ்சமயமுமா யல்லவாகி ... [கு
    யாதுசமயமும்வணங்கு மியல்பதாகி ... (௯)

இயல்பென்றுந்திரியாம லியமமாகி ... *
    யென்குணமுங் காட்டியன்பாலின்பமாகிப்......*
பயனருளப்பொருள்கள்பரி வாரமாகிப் ... *
    பன்பறவுஞ்சௌபான பக்ஷங்காட்டி ...*
மயலறுமந்திரஞ்சிக்ஷை சோதிடாதி ... *
    மற்றங்கநூல்வணங்க மௌனமோலி ... ...*
யயர்வறச்சென்னியில்வைத்து ராசாங்கத்தி ... *
    லமர்ந்ததுவைதிகசைவ மழகிதந்தோ ... (௰)

அந்தோவீததிசயமிச் சமயம்போலின் ... *
    றறிஞரெல்லாநவேறிய வணிமாவாதி ... *
வந்தாடித்தரிபவர்களும் பேசாமோனம் ... *
    வைத்திருந்தமாதவர்க்கு மற்றுமற்று ... *
மிந்த்ராதிபோகநலம் பெற்றபேர்க்கு ... *
    மிதுவன்றிதாயகம்வே றில்லையில்லை ... *
சந்தானகற்பகம்போ லருளைக்காட்டத் ... *
    தக்கநெறியிந்நெறியே தான்சன்மார்க்கம்...(௰௧)

சன்மார்க்கஞானமதின் பொருளும்வீறு ... *
    சமயசங்கேதப்பொருளுந் தானென்றுசப் ... *
பன்மார்க்கநெறியினிலுங் கண்டதில்லை ... *
    பகர்வரியதில்லைமன்றுட் பார்த்தபோதங் ... *
கென்மார்க்கமிருக்குதெல்லாம் வெளியேயென்ன ... *

வெச்சமயத்தவர்களும்வந் திறைஞ்சாநிற்பர் ...
கன்மார்க்கநெஞ்சமுள வெனக்குந்தானே ...
கண்டவுடனானந்தங் காண்டலாகும் ... (௰௨)

காண்டல்பெறப்புறத்திலுள்ள படியேயுள்ளுங்... ...
காட்சிமெய்நூல் சொலும்பதியாங்கடவுளே நீ ..
நீண்டநெடுமையுமகலக் குறுகக்காட்டா ...
நிறைபரிபூரண வறியாய்நித்தமாகி ...
வேண்டுவிருப்பொடுவெறுப்புச் சமீபந்தூரம் ...
விலகலணுகுதன்முதலாம் விவகாரங்கள் ...
பூண்டவலவைகண்மனவாக் காதியெலலாம் ...
பொருந்தாமலகம்புறமும் புணர்க்கையாகி (௰௩)

ஆகியசற்காரியவு சத்துக்கேற்ற ... ...
வமலமாய்நடுவாகி யனந்தசத்தி ...
யோகமுறுமானந்த மயமதாகி ... ...
யுயிர்க்குயிராயெந்நாளு மோங்காநிற்ப ...
மோகவிருண்மாயைவினை யுயிர்கட்கெல்லா ...
மொய்த்ததென்கொ லுபகாரமுயர்ச்சியாகப்...
பாகமிகவருளவொரு சத்திவந்து ... [ஃ
பதிந்ததென்கொலுனெனுமப்பான்மையென்கொ

நானென்னுமோரகந்தை யெவர்க்கும்வந்து ...
நலிந்தவுடன் சகமாயைநானாவாகித் ...
தான்வந்துதொடருமித்தால் வளருந்தண்டச்
சாகரத்தின்பெருமையெவர் சாற்றவல்லா ...
ரூனென்றுமுடலென்றுங் கரணமென்று ...
முள்ளொன்றும்புறமென்று மொழியாநின்ற ...
வானென்றுங்காலென்றுந் தீநீரொன்று ...
மண்ணென்றுமலையென்றும்வனமதென்றும் (௰௪)

மலைமலையாங்காட்சிகண்கா ணுமையாதி ...
மறப்பென்றுநினைப்பென்றுமாயாவாரி ...
யலையலையாயடிக்குமின்ப துன்பமென்று ...
மதைவிளக்குவினைகளென்று மதனைத்தீர்க்கத்...
தலைபலவாஞ்சமயமென்றுந் தெய்வமென்றுஞ் ...
சாதகமொன்றும்மதற்குச்சாக்ஷியாகக் ...
கலைபலவாநெறியென்றுந் தர்க்கமென்றுங் ...
கடலுறநுண்மணலெண்ணிக்காணும்போதும். ௰
காணரியவல்லவெல்லாந் தானேசுட்டுக் ...
கட்டாகவிளையுமதைக் கட்டோடேதான் ...

விண்ணிற்கர்ப்பூரமலை படுதீப்பட்ட ... *
விந்தையெனக்காணவொரு விவேகங்காட்ட ... *
ஊணுறக்கமின்பதுன்பம் பேருராதி ... *
யொவ்விடவுமெனைப்போல வுருவங்காட்டிக் ... *
கோணறவோர்மான்காட்டி மானையீர்க்குங் ... *
கொள்கையெனவருண்மௌன குருவாய்வந்து ()

வந்தெனுடல்பொருளாவி மூன்றுந்தங்கை ... *
வசமெனமேயத்துவா மார்க்கநோக்கி ... *
யைந்துபுலனைம்பூதங் கரணமாதி ... *
யநித்தகுணமத்தனையு மல்லையல்லை ... ✫
யிந்தவுடலறிவறியா மையுநீயல்லை ... *
யாதொன்றுபற்றினதனியல்பாய்நின்று ... *
பந்தமறும்பளிங்கனைய சித்துநீயுன் ... *
பக்குவங்கண்டறிவிக்கும் பான்மையேயாம் (௰௮)

அறிவாகியானந்த மயமாயென்று .. *
மழியாதநிலையாகி யாதின்பாலும் ... *
பிரியாமற்றன்னருளே கோயிலான ... ✫
பெரியபரம்பதியதனைப் பெறவேவேண்டி ... *
நெறியாகக்கூறுவன்கே ளெந்தநாளு ... *
நிர்க்குணநிற்குளம்வாய்த்து நீடுவாழ்க ... ✫
செறிவானவறியாமை யெல்லாநீங்க ... *
சிற்சுகம்பெற்றிடுகபந்தத் தீர்கவென்றே... (௰௯)

பந்தமறுமெய்ஞ்ஞான மானமோனப் ... *
பண்பொன்றேயருளிபந்தப் பண்புக்கேதான் *
சிந்தையில்லைநானென்னும் பான்மையில்லை ... *
தேகமில்லைகாலமில்லை திக்குமில்லை ... *
தொந்தமில்லைநீக்கமில்லை பிரிவுமில்லை ... *
சொல்லுமில்லையிராப்பகலாந் தோற்றமில்லை .. *
யந்தமில்லையாதியில்லை நடுவுமில்லை ... *
யகமுமில்லைபுறமுமில்லை யனைத்துமில்லை ... (௨௰)

இல்லையில்லையென்னினொன்று மில்லாதல்ல ... ✫
வியல்பாகியென்றுமுள்ள வியற்கையாகிச் ... *
சொல்லரியதன்மையதா யான்றுனென்னத் ... *
தோன்றுதெல்லாம்விழுங்குஞ் சொரூபமாகி ... ✫
புல்லையுண்டபகல்போலவ் வித்தையெல்லா ... *
மடையவுந்திதடையறவுன் னறிவைத்தானே .. ✫

வெல்லவுண்டிங்குன்னையுந்தா னாகக்கொண்டு ... *
    குறைவறநின்னருள்கொடுத்தாற் குறைவோசொல்

சொல்லாயதகுதியெல்லாங் கடந்துநின்ற ... *
    சொரூபானந்தச்சுடரே தொண்டனேனைக் ... *
கல்லாகப்படைத்தாலு மெத்தநன்றே ... *
    கரணமுட்டாலுறவு கலக்கமாட்டேன் ...(௨௰)

கலங்காதநெஞ்சுடைய ஞானதீரர் ... *
    கடவுளுனைக்காணவே காயமாகி ... *
புலங்காணார் நானொருவன் ஞானம்பேசி ... *
    பொய்க்கூடுகாத்ததென்ன புதுமைகண்டாய் (௨௧)

கண்டிலையோயான்படும்பா டெல்லாமூன்று ... *
    கண்ணிருந்துந்தெரியாதோ கசிந்துள்ளன்பர் *
தொண்டரடித்தொண்டனன்றோ கருணைநீங்காச் ... *
    சுத்தபரிபூரணமாஞ் சோதிநாதா ...(௨௨)

சோதியாயிருட்பிழம்பைச் சூறையாடுந் ... [நாளும்
    தூவெளியே யெனைத்தொடர்ந்து தொடர்ந்தெந்
வாதியாநிற்றவினைப் பகையைவென்ற ... *
    வாழ்வேயிங்குனைப்பிரிந்து மயங்குகின்றேன் (௨௩)

மயங்குறுமென்மனமணுகாப் பாதைகாட்டி ... *
    வல்வினையைப்பறித்தனையே வாழ்வேநானென் ... *
செயக்கடவேன்செயலெல்லா நினதேயென்று ... *
    செங்கைகுவிப்பேனல்லாற் செயல்வேறில்லை (௨௪)

வேறுபடுஞ்சமயமெல்லாம் புகுந்துபார்க்கின் ... *
    விளங்குபரம்பொருளேநின் விளையாட்டல்லால் *
மாறுபடுங்கருத்தில்லை முடிவின்மோன ... *
    வாரிதியினதித்திரள்போல் வயங்கிற்றம்மா ...(௨௫)

அம்மாவீததிசயந்தா னன்றோவன்றோ ... *
    வகண்டநிலையாக்கியென்னை யறிவாம்வண்ணஞ் .. *
சும்மாவேயிருக்கவைத்தா யையாவாங்கே ... *
    சுகமயமாயிருப்பதல்லாற் சொல்வானென்னே ...()

என்னேநான்பிறந்துழல வந்தவாறிங் ... *
    கெனக்கெனவோர்செயலிலையே யேழையன்பா
முன்னேசெய்வினையெனவும் பின்னேவந்து ... [ன்
    மூளும்வினையெனவும்வா முறையேனொந்தாய் ()

தாயானதண்ணருளை நிரம்பவைத்துத் ... *
தமியேனைப்புரவாமற் றள்ளித்தள்ளிப் ... *
போயானதென்கொலையா வேகதேசம் ... *
பூரணத்துக்குண்டோதான் புகலல்வேண்டும் (உஅ)

புகலரியநின்விளையாட் டென்னேயெந்தாய் ... *
புன்மையறிவுடையவென்னைப்பொருளாப்பண்ணி
யிகல்விளைக்குமலமாயை கன்மத்தோடே ... *
யிடருறவுஞ்செய்தனையே யிரக்கமீதோ ...(உகூ)

இரக்கமொடுபொறையீத லறிவாசார ... *
மில்லேனுநல்லோர்க ளெட்டங்கண்டாற் ... *
கரக்குமியல்புடையேன்பாழ் நெஞ்சமெந்தாய் ... *
கருந்தாதோவல்லுருக்கோ கரியகல்லோ... (௩௰)

கல்லாலின் - முற்றுப்பெற்றது - ஆக - சாஙரு.

பராபரக்கண்ணி.

ஓராருந்தெய்வத் திருவருளாம்பூமிமுதற் ... ...*
பாராதியாண்ட பதியேபராபரமே ... ... (க)
கண்ணாரக்கண்டோர் கருப்பொருள்காணாமலருள் ...*
விண்ணூடிருந்தவின்ப வெற்பே பராபரமே ... ... (உ)
சிந்தித்தவெல்லாமென் சிந்தையறிந்தேயுதவ ... *
வந்தகருணை மழையேபராபரமே ... ... (௩)
ஆராவமுதே யரசேயா னந்தவெள்ளப் .. .. *
பேராறேமோனப் பெருக்கே பராபரமே ... ... (ச)
ஆரறிவாரென்னை யனந்தமறையோலமிடும் ... ...*
பேரறிவேயின்பப் பெருக்கேபராபரமே ... ... (ரு)
உரையிறந்தவன்பருளத் தோங்கொளியாயோங்கிக் ... *
கரையிறந்தவின்பக் கடலேபராபரமே ... ... (சா)
எத்திக்குந்தானாகி யென்னிதயத்தேயூறித் ... ... *
தித்திக்குமானந்தத் தேனேபராபரமே ... ... (எ)
திக்கொடுகீழ்மேலுந் திருவருளாம்பொற்பறிந்தோர் ... *
கைக்குள்வளர்நெல்லிக் கனியேபராபரமே ... ... (அ)
முத்தேபவளமே மொய்த்தபசும்பொற்சுடரே ... ... *
சித்தேயென்னுள்ளத் தெளிவேபராபரமே ... ... (கூ)
கண்ணேகருத்தேயென் கற்பகமேகண்ணிறைந்த ... .. *
விண்ணேயானந்த வியப்பேபராபரமே ... ... (௰)

வாக்காய்மனதாய் மனவாக்கிறந்தவர்பாற் ... ... *
றாக்காதேதாக்குந் தனியேபராபரமே ... ...(௰௧)
பார்த்தவிடமெல்லாம் பரவெளியாய்த்தோன்றவொரு ... *
வார்த்தைசொல்லவந்த மனுவேபராபரமே ... ... (௰௨)
வானந்தமண்ணினந்தம் வைத்துவைத்துப்பார்க்கவெனக் ... *
கானந்தந்தந்த வரசேபராபரமே ... ... (௰௩)
அன்பைப்பெருக்கியென தாருயிரைக்காக்கவந்த ... ... *
வின்பப்பெருக்கே யிறையேபராபரமே ... ... (௰௪)
வானமெல்லாங்கொண்ட மௌனமணிப்பெட்டகத்துக் ... *
கானபணியான வணியேபராபரமே ... ...(௰௫)
ஓடுமிருநிதியு மொன்றாகக்கண்டவர்க ... ... *
ளாடும்பொருளான நட்பேபராபரமே ... ...(௰௬)
சித்தநினைவுஞ் செயுஞ்செயலுநீயெனவா ... ...*
முத்தமர்கட்கான யுறவேபராபரமே ... ... (௰௭)
போதாந்தப்புண்ணியர்கள் போற்றிசயபோற்றியெனும் .. *
வேதாந்தவீட்டில் விளக்கேபராபரமே ... ... (௰௮)
முத்தாந்தவீதி முளரிதொழுமன்பருக்கே ... ... *
சித்தாந்தவீதிவருந் தேவேபராபரமே ... ... (௰௯)
ஊனந்தருமுடல மென்னதியானென்பதற ... ...*
வானந்தம்வேண்டி யலைந்தேன்பராபரமே ... ... (௨௰)
என்புருகிநெஞ்ச மிளகிக்கரைந்துகரைந் .. .. *
தன்புருவாய்நிற்க வலந்தேன்பராபரமே ... ... (௨௧)
சுத்தவறிவாய்ச் சுகம்பொருந்தினல்லாலென் ... ... *
சித்தந்தெளியாதென் செய்வேன்பராபரமே... ... (௨௨)
மாறாவனுபூதி வாய்க்கினல்லாலென்மயக்கந் ... ... *
தேறாதென்செய்வேன் சிவமேபராபரமே ... ... (௨௩)
தாகமறிந்தின்பநிட்டை தாராயேலாகெடுவேன் ... *
றேகம்விழுந்திடினென் செய்வேன்பராபரமே ... (௨௪)
அப்பாவென்னெப்பில்வைப்பே யாற்றுகிலேன்போற்றியென்று
செப்புவதல்லால்வேறென் செய்வேன்பராபரமே ...(௨௫)
உற்றறியுமென்னறிவு முட்கருவிபோற்சவிமாண் ... *
டற்றுமின்பந்தந்திலையே யையாபராபரமே ... (௨௬)
சொல்லாலடங்காச் சுகக்கடலில்வாய்மடுக்கி ... ... *
லல்லாலென்றாக மறுமோபராபரமே ... ... (௨௭)
பாராயோவன்னெஞ்சம் பார்த்தொருகாலென்கவலை ... *
தீராயோவாய்திறந்து செப்பாய்பராபரமே ... (௨௮)
ஓயாதோவென்கவலை யுள்ளேயானந்தவெள்ளம் ... ...*
பாயாதோவையா பகராய்பராபரமே ... ... (௨௯)

ஓகோவுனைப்பிரிந்தா ருள்ளங்கனலில்லைத் ... ✱
தாகோமெழுகோ வகராய்பராபரமே ... .. (௫௰)

கூர்த்தவறிவத்தனையுங் கொள்ளைகொடுத்துன்னருளைப் ... ✱
பார்த்தவனுமென்னைமுகம் பாராய்பராபரமே ... (௫௧)

கடலமுதேதேனேயென் கண்ணேகவலைப் ... ... ✱
படமுடியாதென்னைமுகம் பார்நீபராபரமே ... (௫௨)

உள்ளமறிவாயுழைப்பறிவாய் நானேழை ... ... ✱
தள்ளிவிடின்மெத்தத் தவிப்பேன்பராபரமே ... ...(௫௩)

கன்றினுக்குச்சேதாகனிந்திரங்கல் போலவெனக் ... ✱
கென்றிரங்குவாய்கருணை யெந்தாய்பராபரமே ... (௫௪)

என்னுதவென்னமெலா மென்னியெண்ணியேழைநெஞ்சம் ✱
புண்ணாகச்செய்ததினிப் போதும்பராபரமே ... ...(௫௫)

ஆழித்துரும்பெனவே யங்குமிங்குமுன்னடிமை ... ✱
பாழிற்றிரிவதென்னபாவம் பராபரமே ... ...(௫௬)

கற்றவறிவாலுனை நான் கண்டவன்போற்கூத்தாடிற் ... ✱
குற்றமென்றன்னெஞ்சே கொதிக்கும்பராபரமே ...(௫௭)

ஐயோவுனைக்காண்பா னாசைகொண்டதத்தனையும் ... ✱
பொய்யோவெளியாப் புகலாய்பராபரமே ... (௫௮)

துன்பக்கண்ணீரிற் றுளைந்தேற்குன்னுணர்த ... ...✱
வின்பக்கண்ணீர்வருவ தெந்நாள்பராபரமே ... (௫௯)

வஞ்சனையும்பொய்யுமுள்ளே வைத்தழுக்காறுளற ...✱
னெஞ்சனுக்குமுண்டோ நெறிதான்பராபரமே ... (௬௰)

பாசம்போய்நின்றவர்போற் பாராட்டியானுமுன்னு ... ✱
மோசம்போனேனென் முறையோபராபரமே ... (௬௧)

நன்றறியேன்றீதறியே னென்றுநின்றவனு ... ...✱
மொன்றறியேனேழை யென்னேபராபரமே ... (௬௨)

இன்றுபுதிதன்றே யெளியேன்படுந்துயர ... ... ✱
மொன்றுமறியாயோ வுரையாய்பராபரமே ... ... (௬௩)

எத்தனைதான்சன்மமெடுத் தெத்தனைநான்பட்டதுய ... ✱
ரத்தனையுநீயறிந்ததன்றோ பராபரமே ... ... (௬௪)

இந்தநாட்சற்று மிரங்கிலையேற்காலன்வரு ... ... ✱
மந்தநாட்காக்கவல்லா ரார்காண்பராபரமே ... ...(௬௫)

உற்றுற்றுநாடியுளமருண்ட பாவியைநீ ... ... ✱
சற்றிரங்கியாளத் தகாதோபராபரமே ... ... (௬௬)

எள்ளளவுநின்னைவிடவில்லா வெனைமயக்கிற் ... ...✱
றள்ளுதலாலென்னபலன் சாற்றாய்பராபரமே ... (௬௭)

பாடிப்படித்துலகிற் பாராட்டிநிற்பதற்கோ ... ... ✱
தேடியெனையடிமை சேர்த்தாய்பராபரமே ... ...(௬௮)

சொன்னத்தைச்சொல்வதல்லாற் சொல்லறவென்சொல்லிறுதிக் *
கென்னத்தைச்சொல்வே னெளியேன்பராபரமே ... (௪௯)

சொல்லும்பொருளுமற்றுச் சும்மாவிருப்பதற்கே ... *
யல்லும்பகலுமெனக்காசை பராபரமே ... ... (௫௰)

நேசநிருவிகற்ப நிட்டையல்லா துன்னடிமைக் ... ... *
காசையுண்டோநீயறியாதன்றே பராபரமே ... ... (௫௧)

துச்சனெனவேண்டாமித் தொல்லுலகிலல்லல்கண்டா... ... *
லச்சமிகவுடையேனையா பராபரமே ... ... (௫௨)

கன்னுவாரோனுமுனைக் கைகுவியாராயினந்த ... *
மன்னுவார்நட்பைமதியேன் பராபரமே ... (௫௩)

கொல்லாவிரதங்குவலயமெல் லாமோங்க ... ... *
வெல்லார்க்குஞ்சொல்லுவதென் னிச்சைபராபரமே ... (௫௪)

எத்தாற்பிழைப்பேனோவெந்தையே நின்னருட்கே... ... *
பித்தானேன்மெத்தவுநான் பேதைபராபரமே ... (௫௫)

வாயினாற்பேசா மௌனத்தைவைத்திருந்துந், ... *
தாயிலார்போலுன் றளர்ந்தேன்பராபரமே ... (௫௬)

அன்னையிலாச்சேய்போ லலக்கணுற்றேன்கண்ணா ... *
வென்னகத்திற்றாய்போலிருக்கும் பராபரமே ... ... (௫௭)

உற்றுநினைக்கிற்றுயரமுள்ளுள்ளே செந்தீயாய்ப் ... *
பற்றநொந்தேனென்னைமுகம் பார்நீபராபரமே ... ... (௫௮)

பொய்யனிவனென்றுமெள்ளப் போதிப்பார்சொற்கேட்டுக் .. *
கைவிடவும்வேண்டாமென் கண்ணேபராபரமே ... (௫௯)

என்னையறிந்தேயிளைப்பறிந்தே யேழையுய்யும் ... *
வண்ணந்திருக்கருணை வையாய் பராபரமே ... (௬௰)

நாட்டாதேயென்னையொன்றி னாட்டியிதமகிதங் ... *
காட்டாதேயெல்லாநீ கண்டாய்பராபரமே ... (௬௧)

உன்னைநினைந்துன்னிறைவினுள்ளே யுலாவுமென்னை ... *
யன்னைவயிற்றினடைக்காதே பராபரமே ... ... (௬௨)

பாழுனக்கென்றெண்ணும் பழக்கமேமாறு ... ... *
வரமெனக்குத்தந்தருளென் வாழ்வேபராபரமே ... ... (௬௩)

வந்தித்துநின்னை மறவாக்கடனுகச் ... ... *
சிந்திக்கநின்னருள் செய்யாய்பராபரமே... ... ... (௬௪)

எவ்வுயிருமென்னுயிர்போ லெண்ணியிரக்கவுநின் ... *
றெய்வவருட்கருணை செய்யாய்பராபரமே ... ... (௬௫)

வெட்டவெளிப்பேதையென்பான் வேறாகவொன்றறியேன் *
சிட்டருடன்சேரனந்த தெண்டன்பராபரமே ... (௬௬)

இரவுபகலற்றவிடத் தேகாந்தயோகம்... ... ... *
வரவுந்திருக்கருணை வையாய்பராபரமே ... ... (௬௭)

மால்காட்டிச்சிந்தை மயங்காமநின்றுசுகக் . . . . *
கால்காட்டிவாங்காதே கண்டாய்பராபரமே ... (சுஅ)
எப்பொருளுநீயெனவே யெண்ணிநான்றோன்றாத ... *
வைப்பையழியாநிலையா வையாய்பராபரமே ... (சுகூ)
சும்மாவிருப்பதுவே சுட்டற்றபூரணமென் ... *
றெம்மாலறிதற் கெளிதோபராபரமே ... ... (எ0)
முன்னொடுபின்பக்க முடியடிதாப்பண்ணறநின் ... *
றன்னொடுநானிற்பதென்றோ சாற்றாய்பராபரமே ... (எக)
மைவ்வண்ணந்தீர்ந்த மௌனிசொன்னதெய்வவண்ண ... *
மெய்வண்ணநிட்டை யருளாய்பராபரமே ... ...(எஉ)
வித்தன்றியாதும் விளைவதுண்டோநின்னருளாஞ் ... *
சித்தன்றியாங்களுண்டோ செப்பாய்பராபரமே ... (எ௩)
ஆங்காரமற்றுண் ணறிவானவன்பருக்கே ... ... *
தூங்காததூக்கமது தூக்கும்பராபராபரமே ... (எச)
சிந்தைபலித்தலித்து சின்மயமாநின்னடிக்கே ... *
வந்தவர்க்கேயின்பநிலை வாய்க்கும்பராபரமே ... (எரு)
சொல்லாடலாமனைப்போற் சொல்லிறந்துநீயாகி ... *
னல்லாலெனக்குமுத்தி யாமோபராபரமே ... (எசா)
பேச்சாகாமோனம் பிறவாமுனைத்தெளிந்தாற் ... *
காச்சாக்குமேற்பயனுண் டாமோபராபரமே ... ...(எஎ)
கெட்டியென்றுன்னன்பர்மலங் கெட்டயர்ந்தோர்ரூபமயமாந் *
தொட்டிலுங்கட்டிச்சேப்போற் றுயின்றார்பராபரமே ...(எஅ)
காட்டவருணீக்கக் காலுதிருண்மலத்து ... ... *
நாட்டமெனக்குவர வன்றோபராபரமே ... ... (எகூ)
எத்தன்மைக்குற்ற மியற்றிடினுந்தாய்பொறுக்கு ... *
மத்தன்மைநின்னருளு மன்றோபராபரமே ... (அ0)
எத்தனைபேர்தேர்ந்தாலு மெய்ந்நிலையின்பருவண்டோ ... *
சித்தருக்கேயின்பச் சிவமேபராபரமே ... ...(அக)
மன்னொடுமின்னகாட்டி மறைந்துமறையாவுருவைக் ... *
கண்ணொடுகண்ணாகவென்று காண்பேன்பராபரமே ...(அஉ)
பஞ்சரித்துநின்னைப் பலகாலிரந்ததல்லா ... *
லஞ்சலெனும்பொருட்டே யன்றோபராபரமே ... (அ௩)
எங்கெங்கேபார்த்தாலு மெவ்வுயிர்க்குமவ்வுயிரா ... *
யங்கிங்கிருப்பதுநீ யன்றோபராபரமே... ... (அச)
அனைத்துமாய்நின்றாயே யான்வேறோநின்னை ... *
நினைக்குமாறெங்கே நிகழ்த்தாய்பராபரமே ... (அரு)
நின்போதத்தாலே நினைப்புமறப்புமென்றா ... *
லென்போதமெங்கே யியம்பாய்பராபரமே ... ...(அசா)

ஒன்றைநினைந் தொன்றைமறந் தோடுமனமெல்லாநீ ...
யென்றறிந்தா லெங்கே யியங்கும்பராபரமே ... (௮௭)

கொழுந்தில்வயிரமெனக் கோதறவுள்ளன்பி ...
லழுந்துமவர்க்கேசுகமென் றாகும்பராபரமே ... (௮௮)

பற்றுப்பயிர்க்குப் படர்கொழுந்துபோற்பருவம் ...
பெற்றவர்க்கேநின்னருடான் பேறும்பராபரமே ... (௮௯)

யோகியர்க்கேஞான மொழுங்காம்பேரன்பான ...
தாகியருள்யோகமுன்னே சார்ந்தோர்பராபரமே ... (௯௰)

அல்லும்பகலுமறிவாகி நின்னவர்க்கே ... ..
சொல்லும்பொருளுஞ் சுமைகாண்பராபரமே ... (௯௧)

எச்சிலென்றுபூனை யிசைந்தோர்க்குனைப்போற்றப் ... ...
பச்சிலையுங்கிள்ளப் படுமோபராபரமே ... (௯௨)

அந்தக்கரணமடங்கத் துறப்பதுவே ... ...
யெந்தத்துறவினுநன் றெந்தாய்பராபரமே ... (௯௩)

தன்னையறிந்தாற் றலைவன்மேற்பற்றலது ... ...
பின்னையொருபற்றுமுண்டோ பேசாய்பராபரமே ... (௯௪)

அன்பாற்கரைந்துகண்ணீ ராறுகண்டபுண்ணியருக் ...
குண்டாலவரையழிதா லுய்வுண்டோபராபரமே ... (௯௫)

தன்னையறிந்தருளே தாரகமாநிற்பதுவே ... ...
யுன்னையறிதற் குபாயம்பராபரமே ... ... (௯௬)

கற்றகல்வியாணவந்தான் காணுமோகாண்பதெல்லா ... ...
மற்றவிடத்தேவெளியா மன்றோபராபரமே ... (௯௭)

கண்மூடிக்கண்விழித்துக் காண்பதன்றோநின்னருளாம் ...
விண்மூடினெல்லாம் வெளியாம்பராபரமே ... (௯௮)

நேரோநினதருளென் னெஞ்சக்கற் பிளன்றும் ...
பாரோன்சகமும் படைப்பேன்பராபரமே .. (௯௯)

வான்காணவேண்டின் மலைமேற்றெலாக்குமுன்னை ...
தான்காணப்பாவனைசெய் நாட்டம்பராபரமே ... ... (௱)

வாதனைவிட்டுன்னருளின் மன்னினல்லால்வேறுமொரு ...
சாதனைதானுண்டோநீ சாற்றாய்பராபரமே ... (௱௧)

பாரகமும்விண்ணகமும் பற்றாகநின்பதருட் ...
பாரத்தைப்பற்றியன்றோ சாற்றாய்பராபரமே ... (௱௨)

விளக்குந்தகளியையும் வேறென்றார்நின்னைத் ... ...
துளக்கமறச்சிவனென்று சொல்வார்பராபரமே ... (௱௩)

பாராதிநீயாப் பகர்ந்தாலகமெனவு... ... ...
மாராயுஞ்சீவனுநீ யாங்காண்பராபரமே... ... (௱௪)

பொய்யைப்பொய்யென்றறியும் போதத்துக்காதாரவுன் ...
மெய்யருளேயன்றோ விளம்பாய்பராபரமே ... (௱௫)

ஒருவாய்வந்தேயெனைப்போல் மன்னிப்பழியுஞ்சகத்தைத் ... *
தெரிவாகவில்லையென்ற திரம்பராபரமே ... (௱௬)

மாயாசகமில்லையேன் மற்றெனக்கோர்பற்றுமில்லை ... *
நீயேநானென்றுவந்து நிற்பேன்பராபரமே ... (௱௭)

வானாதிநீயெனவே வைத்தமறைமெய்யெனையுநீ... ... *
தானாகச்சொல்லாதோ சாற்றாய்பராபரமே .. (௱௮)

வெள்ளக்கருணைமத வேழமாநின்னருட்கென் ... *
கள்ளக்கருத்தே கவளம்பராபரமே ... ... (௱௯)

வண்டாய்த்துவன்றி மௌனமலரணைமேற் ... *
கொண்டாற்கோவில்பங் கொடிப்பாய்பராபரமே ... (௱௰)

மாயைமுதலாமவினைநீ மன்னுயிர்நீமன்னுயிர்சேர்ந் ... *
தாயுமறிவானதுநீ யன்றோபராபரமே ... ...(௱௰௧)

என்னறிவும்யானுமென தெல்பதுவுமாயினைக... ... *
னின்னையேயன்றோ நிகழ்க்கப்பராபரமே ... (௱௰௨)

பாரறியாதண்டப் பரப்பறியாதுன்பெருமை... ... *
யாரறிவார்நானோ வறிவேன்பராபரமே ... ... (௱௰௩)

அண்டமனைத்திலுமா யப்பாலுக்கப்பாலுங் ... *
கொண்டநின்னையாரறிந்து கொள்வார்பராபரமே ... (௱௰௪)

ஒப்புயர்வொன்றின்றி யொப்புகாமோனவட்டக் ... *
கப்பதுக்காம்வான்பொருணீ யண்டாய்பராபரமே ... (௱௰௫)

என்போலெளியவரு மெங்கெங்கும்பார்த்தாலு ... *
முன்போல்வலியவரு முண்டோபராபரமே .. (௱௰௬)

யார்க்கிலண்டபிண்டப் பரப்பனைத்துநின்செயலே ... *
யார்க்குஞ்செயலில்லையே யையாபராபரமே ... (௱௰௭)

ஒன்றேபலவேயுருவே யருவேயோ ... ... *
வென்றேபறைப்பதுன்னை யையாபராபரமே ... (௱௰௮)

செப்புவதெல்லாஞ்செபநாஞ் சிந்திப்பதெல்லாநின் ... *
ஒப்பிரியாணமெனை யோர்ந்தேன்பராபரமே ... (௱௰௯)

ஆரிருந்தென்னார்போயென் னாமுதாநின்னருளின் ... *
சீரிருந்தாலுய்வன் சுகமேபராபரமே .. ... (௱௨௰)

வஞ்சநமன்வாதனைக்கும் வன்பிறவிவேதனைக்கு ... *
மஞ்சியுனையடைந்தே னையாபராபரமே ... (௱௨௧)

எந்தப்படியுன்னி தயமிருந்ததேமக் ... ... *
கந்தப்படிவருவ தன்றோபராபரமே ... ... (௱௨௨)

எந்தெந்தநாளுமெனைப் பிரியாதென்னுயிராய்ச் ... *
சிந்தைகுடிகொண்டவருட் டேவேபராபரமே ... (௱௨௩)

அஞ்சலஞ்சலென்றடிமைக் கப்போதைக்கப்போதே ... *
நெஞ்சிலுணர்த்து நிறைவேபராபரமே ... ... (௱௨௪)

என்னையுன்றன்கைக்களித்தார் யாவரென்னையான்கொடுத்துப்... ☆
பின்னையுன்றற்பெற்றநலம் பேசேன்பராபரமே ... (௱௨௫)
வாய்பேசாவூமையென வைக்கவென்றோநீமௌனத் .. *
தாயாகவந்தருளைத் தந்தாய்பராபரமே ... (௱௨௬)
தன்னைத்தந்தென்னைத் தடுத்தாண்டநின்கருணைக் ..... *
கென்னைக்கொண்டென்னபல னெந்தாய்பராபரமே ...(௱௨௭)
மார்க்கண்டர்க்காக மறலிபட்டபாட்டையுன்னிப்... ... *
பார்க்கினன்பர்க்கென்ன பயங்காண்பராபரமே ...(௱௨௮)
கட்டியுணராமற் றுரியநிலையாய்வெளியில் ... ... ☆
விட்டநின்னையாரோ வியப்பேன்பராபரமே ... (௱௨௯)
சூதொன்றுமின்றியுன்னைச் சும்மாவிருக்கவைத்தா ... *
யீதொன்றும்போதாதோ வின்பம்பராபரமே ... (௱௩௰)
வாயொன்றும்பேசா மௌனியாய்வந்தாண்ட ... *
தேயொன்றும்பேதாதோ வின்பம்பராபரமே ... (௱௩௧)
என்றுமிருந்தப்படிக் கென்னையெனக்களித்த ... ☆
தொன்றும்போதாதோ வுனாயாய்பராபரமே ... (௱௩௨)
எண்டிசைகீழ்மேலான வெல்லாம்பெருவெளியாக் ... ☆
கண்டவிடத்தென்னையுநாம் கண்டேன்பராபரமே ... (௱௩௩)
பித்தனையேதுமறியாப் பேதையெனையாண்டவுனக் ... *
கெத்தனைதான் றெண்ட னிடுவேன்பராபரமே ... (௱௩௪)
தாயர்கர்ப்பத்தூடனமுந் தண்ணீருந்தந்தருளு ... ☆
நேயவுனையாரோ நினையார்பராபரமே ... ...(௱௩௫)
விரிந்தமனமொடுங்கும் வேளையினானுகப் ... *
பரந்தவருள்வாழி பதியேபராபரமே ... ...(௱௩௬)
சிந்தனைபோய்நானெனல்போய்த் தேக்கவின்பமாமழையை... *
வந்துபொழிந்தனைநீ வாழிபராபரமே... ... (௱௩௭)
தந்தேனையோர்வசனந் தந்தபடிக்கின்பமுமாய் ... *
வந்தேனையென்றனைநீ வாழிபராபரமே ... (௱௩௮)
மண்ணும்விண்ணும்வந்து வணங்காவோநின்னருளைக் ... *
கண்ணுறவுட்கண்டவரைக் கண்டாற்பராபரமே ... (௱௩௯)
என்றுங்கருணைபெற்ற வின்பத்தபோதனர்சொல் ... ☆
சென்றசென்றதிக்கனைத்துஞ் செல்லும்பராபரமே ...(௱௪௰)
ஆடுவதும்பாடுவது மானந்தமாகநின்னைத் ... ☆
தேடுவதுநின்னடியார் செய்கைபராபரமே... ... (௱௪௧)
பொங்கியநிற்றண்ணருளைப் புட்கலமாப்பெற்றவர்கட் ... *
கெங்கெழுந்தென்ஞாயிறி யப்பாய்பராபரமே ... (௱௪௨)
பாலொருபேய்பித்தர் பான்மையெனநிற்பதுவே ... ☆
சீலமிகுஞானியர்தஞ் செய்கைபராபரமே ... (௱௪௩)

உண்டுடுத்துப்பூண்டிங் குலகத்தார்போற்றிரியுந் ... *
தொண்டர்விளையாட்டே சுகங்காண்பராபரமே ... (௨௪௪)

சங்குல்பகலற்றதிருக் காட்சியர்கள்கண்டவழி ... *
யெங்குமொருவழியே யெந்தாய்பராபரமே ... (௨௪௫)

காயநிலையல்லவென்று காண்பாருறங்குவரோ ... ... *
தூயவருட்பற்றுத் தொடர்வார்பராபரமே ... ...(௨௪௬)

அப்புமுப்பும்போன்ற வயிக்யபரானந்தர்தமக் ... *
கொப்புவமைசொல்லவும்வா யுண்டோபராபரமே ... (௨௪௭)

சித்தந்தெளிந்துசிவ மாஞ்ஞாலமேலோர்களுங் ... ... *
கொத்தடிமையான குடிநான்பராபரமே ... (௨௪௮)

தம்முயிர்போலெவ்வுயிருந் தானென்றுதண்ணருள்கூர் ... *
செம்மையருக்கேவலென்று செய்வேன்பராபரமே .. [௨௪௯]

விண்ணுக்கும்விண்ணாய் மேவுமுனக்கியான்பூசை ... ... *
பண்ணிநிற்குமாறு பகராய்பராபரமே ... .[௨௫௰]

நெஞ்சகமேகோயி னினைவேசுகந்தமன்பே ... . *
மஞ்சனநீர்பூசைகொள்ள வாராய்பராபரமே .. ... [௨௫௧]

கெட்டவழியாணவப்பேய் கீழாகமேலான ... ... *
சிட்டருனைப்பூசை செய்வார்பராபரமே ... ... [௨௫௨]

கால்பிடித்துமூலக் கனலைமதிமண்டலத்தின் ... *
மேலெழுப்பிற்றேகம் விழுமோபராபரமே ... [௨௫௩]

பஞ்சசுத்திசெய்துநினைப் பாவித்துப்பூசைசெய்தால் ...*
விஞ்சியஞானம் விளங்கும்பராபரமே ... ... [௨௫௪]

அன்பர்பணிசெய்யவெனை யாளாக்கிவிட்டுவிட்டா ... *
யின்பநிலைதானேவந் தெய்தும்பராபரமே ... [௨௫௫]

மூர்த்திதலந்தீர்த்த முறையாற்றொடங்கினர்க்கோர் ... *
வார்த்தைசொலச்சற்குருவும் வாய்க்கும்பராபரமே ... [௨௫௬]

விரும்புஞ்சரியைமுதன் மெய்ஞ்ஞானநான்கு ... *
மரும்புமலர்காய்கனிபோ லன்றோபராபரமே ... [௨௫௭]

தானந்தவந்தருமஞ் சந்ததமுஞ்செய்வர்சிவ ... *
ஞானந்தனையணைய நல்லோர்பராபரமே... ... ..[௨௫௮]

சொன்னத்தைச்சொல்லித் துடிக்கின்றவாணவப்பேய்க் .. *
கின்னல்வருவதெந்நா ளெந்தாய்பராபரமே ... [௨௫௯]

இன்றோவிருவினைவந் தேறியதுநானன்றோ ... ... *
வன்றேவிளைந்ததன்றோ வாற்றேன்பராபரமே ... [௨௬௰]

என்னைமுந்தானின்னைவிட வில்லையென்றுவியாய்முனமே ... *
பன்னுவினையேது பகராய்பராபரமே ... ... [௨௬௧]

என்னையின்னதென்றறியா வேழைக்குமாகெடுவேன் ... *
முன்னைவினைகூடன் முறையோபராபரமே ... ...[௨௬௨]

அறியாநான்செய்வினையை யையாநீகூட்டுவிக் ... ... *
குறியேதெனக்குளவு கூறாய்பராபரமே ... ... [௱௬௩]

என்னைக்கெடுக்க விசைந்தவிருவினைநோய் ... ... *
தன்னைக்கெடுக்கத் தகாதோபராபரமே ... ... [௱௬௪]

வல்லமையேகாட்டுகின்ற மாமாயைநாமொருவ ... *
ரில்லையெனி னெங்கே யிருக்கும்பராபரமே ... [௱௬௫]

முக்குணத்தாலெல்லா மூளைக்கப்பிரகிருதிக் ... ... *
கிக்குணத்தைநல்கியதா ரெந்தாய்பராபரமே .... [௱௬௬]

ஆற்றப்படாதுன்ப மையவென்றலேன்மனது ... *
தேற்றப்படாதினியென் செய்வேன்பராபரமே ... [௱௬௭]

பூராயமாய்மனதைப் போக்கவறியாமலையோ ... *
யாராயலைந்தே னரசேபராபரமே ... ... [௱௬௮]

சினமிறக்கக்கற்றாலுஞ் சித்தியெல்லாம்பெற்றாலு ... *
மனமிறக்கக்கல்லார்க்கு வாயேன்பராபரமே ... [௱௬௯]

வாதுக்குவந்தெதிர்த்த மல்லரைப்போற்பாழ்த்தமன ... *
மேதுக்குக்கூத்தாடு தெந்தாய்பராபரமே ... ... [௱௭௰]

சூதாடுவார்போற் றுவண்டுதுவண்டுமனம் ... ... *
வாதாடினென்னபலன் வாய்க்கும்பராபரமே ... [௱௭௧]

கொள்ளித்தேள்கொட்டிக் குதிக்கின்றபேய்க்குரங்காய்க் .. *
கள்ளமனந்துள்ளுவதென் கண்டாய்பராபரமே ... (௱௭௨)

வந்ததையும்போனதையும் வைத்துவைத்துப்பார்த்திருந்தாற் .. *
சிந்தையிதமகிதஞ் சேரும்பராபரமே ... ...(௱௭௩)

எறும்புயிர்ப்பாலுமுணர் விந்தவிடயங்களொருப் ... *
பாறெனவுநன்றா வறிந்தேன்பராபரமே ... ...(௱௭௪)

பொறிவழியேயேழை பொறியாயுழல்வதுநின் ... *
னறிவில்விதித்த விதியாமோபராபரமே ... ...(௱௭௫)

பாசசாலங்களெல்லாம் பற்றறவிட ஞானவைவாள் ... *
வீசநாளெந்நாள் விளம்பாய்பராபரமே ... (௱௭௬)

எந்தவுடலேனுமெடுத்தவுட னல்லதென்று ... *
சிந்தைசெயவந்ததிறஞ் செப்பாய்பராபரமே ... (௱௭௭)

பொய்யெல்லாமொன்றாய்ப் பொருந்திவைத்தபொய்யுடலை ... *
மெய்யென்றுமெய்யாய் விடுமோபராபரமே ...(௱௭௮)

மின்னனையபொய்யுடலை மெய்யென்றுநம்பியையோ ...... *
நின்னைமறக்கை நெறியோபராபரமே ... (௱௭௯)

நித்தியமொன்றில்லாத நீர்க்குமிழிபோன்றவுடற் ... *
கித்தனைதான் துன்பமுண்டோ வென்னேபராபரமே ... (௱௮௰)

தேகமிறுமென்றுசுடர் தேம்புவதென்னித்தனையி... ... *
னாகமழித்தாற்பயந்தா னுண்டோபராபரமே ... (௱௮௧)

ஏதைச்சுமையா வெடுப்பாரெடுத்தவுடற் ... ...✿
சேதமின்றியாதுமின்னே செல்லும்பராபரமே ...(௱௮௨)

தோற்பாவைநாலாட் சுமையாகுஞ்சீயென்றுநின் ... ✱
சார்பாலெடுத்ததெவ ராலேபராபரமே ... (௱௮௩)

ஞாலத்தைமெய்யெனவே நம்பிநம்பிநாளுமென்றன் ... ✱
காலத்தைப்போக்கியென் கண்டேன்பராபரமே ... (௱௮௪)

பொய்யுலகவாழ்க்கைப் புலைச்சேரிவாதனைநின் ... ✱
மெய்யருளின்மூழ்கின் விடுங்காண்பராபரமே ... (௱௮௫)

நூலேணிவிண்ணேற நூற்குப்பருத்திவைப்பார் ... ✿
போலேயுருவிறந்தூற் போதம்பராபரமே ... (௱௮௬)

சின்னஞ்சிறியார்கள் செய்தமணற்சோற்றையொக்கு ... ..✿
மன்னுங்கலைஞான மார்க்கம்பராபரமே ... (௱௮௭)

வாசகஞானத்தால் வருமோசுகம்பாழ்த்த ... ✿
பூசலொன்றும்போமோ புகல்வாய்பராபரமே ... (௱௮௮)

கேட்டதையேசொல்லுங் கிளிபோலநின்னருளி ... ✱
னூட்டமின்றிவாய்பேச லன்றோபராபரமே... ... (௱௮௯)

வெளியாயருளில் விரவுமன்பர்தேக ... ... ✿
மொளிபாய்ப்பிறங்கியது முண்டோபராபரமே ...(௱௯௰)

காலமொருமூன்றுங் கருத்திலுணர்ந்தாலுமவர் ... ✱
ஞாலந்தனக்குளாய் நல்லோர்பராபரமே ... (௱௯௧)

கொல்லாவிரதமொன்று கொண்டவரேநல்லோர்மற் ... ✱
றல்லாதார்யாரோ வறியேன்பராபரமே ... (௱௯௨)

இல்லாதகாரியத்தை யிச்சித்துச்சிந்தைவழி ... ✿
சொல்லாமைநல்லோர் திறங்காண்பராபரமே , (௱௯௩)

எதுவந்துமேதொழிந்து மென்னறியாமென்னல்லோர்கள் ... ✱
போதநிலைகண்ட புலத்தோர்பராபரமே ... (௱௯௪)

ஆயிரஞ்சொன்னாலு மறியாதவஞ்சநெஞ்சப் ... ✿
பேயொடுகூடிற் பிழைகாண்பராபரமே ... (௱௯௫)

மாயமயக்கொழிந்தாற் மற்றொன்றைநாடுவரோ ... ✱
நேயவருணிலையி னிற்பார்பராபரமே ... (௱௯௬)

நித்திரையிற்செத்தபிண நேருமுடல்கிச்சைவையாச் ... ...✱
சுத்தர்களேநல்ல துறவோர்பராபரமே ... (௱௯௭)

எந்நெஞ்சமேனு மிரங்குமேநின்னருட்குக் ... ✿
கன்னெஞ்சருமுளரோ காட்டாய்பராபரமே ... [௱௯௮]

மந்தவறிவாகியின்பம் வாயாதிருந்தலைந்தாற் ... ... ✱
சிந்தைமயங்காதோவென் செய்வேன்பராபரமே ... [௱௯௯]

தேடினேன்திக்கனைத்துந் தெண்டனிட்டேன்சிந்தைநைந்து... ✱
வாடினேனென்மயக்க மாற்றாய்பராபரமே ... ... [௨௱]

மடிமையெனுமொன்றை மறந்தன்றோவென்னை ... *
யடிமைகொளல்வேண்டு மரசேபராபரமே ... ...[௨௱௧]
காலர்பயந்தீர்வின்பக் காற்கபயமென்றெழுந்த ... ☆
மாலைவளர்த்தனையே வாழிபரர்பரமே ... ... [௨௱௨]
நீர்புற்புதமாய் நினைவருட்கேநிற்றழியப் ... ... *
பார்ப்பதல்லால்வேறுமொன்றைப் பாரேன்பராபரமே ...[௨௱௩]
நீர்க்குமிழிபோலென் னினைவுவெளியாய்க்கரையப் ... .. ☆
பார்க்குமிடமெல்லாமென் பார்வைபராபரமே ... [௨௱௪]
ஆடியோய்ப்பம்பரம்போ லாசையுடனெங்குழனைத் ... ...☆
தேடியோய்கின்றேனென் செய்வேன்பராபரமே ... ...[௨௱௫]
வேதாந்தஞ்சித்தாந்தம் வேறென்னார்கண்களிக்கு ... ... ☆
நாதாந்தமோன நலமேபராபரமே ... ... [௨௱௬]
ஆனந்தமானநின்னை யன்றியொன்றையுன்னாத ... ...*
மோனந்தமியேற்கு முத்திபராபரமே ... [௨௱௭]
ஏதுக்குமுன்னைவிட வில்லையென்றெலென்கருத்தைச் ..., *
சோதிக்கவேண்டாநான் சொன்னேன்பராபரமே ... [௨௱௮]
முத்தியிலுந்தேகமிசை மூலிதமாஞ்சித்திபெற்றோ ... *
ரத்தனைபேரொன்றுரைப்ப தெந்தாய்பராபரமே ... [௨௱௯]
நீயன்றிநானுர் நினைவாரொன்னெஞ்சகமார் ... ☆
தாயன்றிச்சூலுமுண்டோ சாற்றாய்பராபரமே ... [௨௱௰]
அங்கமேநின்வடிவ மானசுகர்கூப்பிடநீ ... ... *
யெங்குமேனென்ற தென்னேபராபரமே ... [௨௱௰௧]
கொள்ளைவெள்ளத்தண்ணருண்மேற் கொண்டுசுழித்தார்த்திழித
கள்ளமனக்கப்பலெங்கே காணும்பராபரமே ... [௨௱௰௨] [தாந்
எக்கலையுங்கற்றுணர்ந்தோ மென்றவர்க்குஞ்சம்மதஞ்சொல ...☆
வக்கணையாலின்பம் வருமோபராபரமே ... ... [௨௱௰௩]
கல்லெறியப்பாசி கலைந்துநன்னீர்காணுநல்லோர் ... *
சொல்லுணரில் ஞானம்வந்துதோன்றும்பராபரமே ...[௨௱௰௪]
நின்னையுணர்ந்தோர்கடமை நிந்திக்கபேயறிஞ... ... ☆
ரென்னகதிபெறுவா ரெந்தாய்பராபரமே ... ...[௨௱௰௫]
என்னதியானென்னலற்றோ ரெங்கிருந்துபார்க்கினுநின் ... *
சன்னிதியாநீ பெரியசாமிபராபரமே ... [௨௱௰௬]
சோற்றுத்துருத்திச் சுமைசுமப்பக்கண்டிறங்கக் ... *
காற்றைப்பிடித்தலைந்தேன் கண்டாய்பராபரமே ... [௨௱௰௭]
உள்ளபடியொன்றை யுரைக்கினவர்க்குள்ளுறவாய்க் ... ☆
கள்ளமின்றியன்பாய்க் களிப்பேன்பராபரமே ... [௨௱௰௮]
அடுத்தவியல்பாகவொன்றை யான்பகர்வதல்லாற் ... ☆
றொடுத்தொன்றை யான்வேண்டிச்சொல்லேன்பராபரமே௨௱௰௯

உள்ளமறியாதொருவ ரொன்றையுன்னிப்பேசிலதோ ... *
துள்ளியிளங்கன்றுய்த்த துடிப்பென்பராபரமே ...(௨௨௰)

எல்லாருமின்புற் றிருக்கநினைப்பதுவே ... ... *
யல்லாமல்வேறொன் றறியேன்பராபரமே... ... (௨௨௧)

முன்னாண்மெய்ஞ்ஞான முனிவர்தமையீட்டல்போ ... *
லிந்நாளிற்காணவெனக் கிச்சைபராபரமே ... (௨௨௨)

கன்மமென்பதெல்லாங் கரிசறவேமெய்ஞ்ஞான ... *
தன்மநிலைசார்ந்ததன்பர் தன்மைபராபரமே ... (௨௨௩)

கண்டுயிலாதென்னறிவிற் கண்ணூடேகாட்டிப்பெற ... *
மண்டியபேரொளிநீ வாழிபராபரமே ... ...(௨௨௪)

நானெனதன்மையென்று நாடாமலுடலின்ப ... *
வானாகிநின்றனைநீ வாழிபராபரமே ... ... (௨௨௫)

அகத்தூடணுவணுவா யண்டமெல்லாந்தானாய் ... *
மகத்தாகிநின்றனைநீ வாழிபராபரமே... ... (௨௨௬)

காரகமாங்கர்ப்பவறைக் கண்ணூறுமென்கண்ணே ... *
வாரம்வைத்துக்காத்தனைநீ வாழிபராபரமே ... (௨௨௭)

பரந்தோர்தந்தேசமென்பார் பூமியைப்போராடி ... *
யிரந்தோருந்தம்மதென்பா ராய்வேனேபராபரமே ... (௨௨௮)

மூர்த்திகளெல்லாம்வாழி யெங்கண்மோனகுருவாழியருள் ... *
வார்த்தையென்றும்வாழியன்பர் வாழிபராபரமே ... (௨௨௯)

சொல்லும்பொருளுந் தொடராவருளினிற்றுச் ... *
செல்லும்படிக்கருணை செய்தாய்பராபரமே ... (௨௩௰)

இற்றைவரைக்குள்ளாக வெண்ணரியசித்திமுத்தி ... *
பெற்றவர்களெத்தனைபேர் பேசாய்பராபரமே ... (௨௩௧)

நாயிநகருநீசா னுட்டேயபாளயமு .. .. *
பீடுசெபமோமுழுடினி லெந்தாய்பராபரமே ... (௨௩௨)

தேடித்திரவியமுஞ் சேர்த்தமணிமெய்ப்பட்டுமுடன் ... *
கூடவருந்துணையோ கூறாய்பராபரமே ... (௨௩௩)

தேடாதகேட்டிலவோ செங்கைத்தலக்கோலம்போல் ...*
வாடாச்சமாதியில் வாழ்வார்பராபரமே ... (௨௩௪)

நீராய்க்கசிந்துருகி நெட்டுயிர்த்துநின்றேனைப் ... *
பாராததென்னோ பகராய்பராபரமே ... ..(௨௩௫)

உள்ளபொருளாழியுடன் மூன்றுமன்றேதான் ... *
கொள்ளைகொண்டநீயென் குறைதீர்பராபரமே ... (௨௩௬)

ஆழ்ந்தாயேயிவ்வுலகி லல்லலெல்லாந்தீர்ந்தருளால் ... *
வாழ்ந்தாயேயென்றனைநீ வாழிபராபரமே ... ... (௨௩௭)

தாராவருளேயெல்லாந் தந்தெனையுநின்னருளில்... .. *
வாராயோவென்றனைநீ வாழிபராபரமே ... (௨௩௮)

ஆசையுன்மீதல்லா லருளறியவேறுமொன்றிற் ... *
பாசம்வையேனின்கருணைப் பாங்காற்பராபரமே ... (௨௩௯)
ஆதியந்தநீகுருவா யாண்டதல்லானின்னையன்றிப் ... *
போதனையுமுண்டோ புகலாய்பராபரமே ... (௨௪௰)
தானாகவந்து தடுத்தாண்டெனையின்ப ... ... *
வானாகச்செய்தவின்ப வானேபராபரமே ... (௨௪௧)
பற்றற்றிருக்குநெறி பற்றிக்கடன்மலையுஞ் ... *
சற்றநினைக்குமனஞ் சொன்னேன்பராபரமே... ...(௨௪௨)
படிப்பற்றுக்கேள்வியற்றுப் பற்றற்றுச்சிந்தைத் ... *
துடிப்பற்றார்க்கன்றோ சுகங்காண்பராபரமே ... (௨௪௩)
சத்தாகிநின்றோர் சடங்கவிலிங்கமென ... ... *
வைத்தாருமுண்டோவென் வாழ்வேபராபரமே ... (௨௪௪)
சித்தநிருவிகற்பஞ் சேர்ந்தாருடற்றீபம் ... ...*
வைத்தகர்ப்பூரம்போல் வயங்கும்பராபரமே ... (௨௪௫)
ஆதிகாலத்திலெனை யாண்டனையேயிப்பானி ... *
போதியெனினெங்கேநான் போவேன்பராபரமே ... (௨௪௬)
நாவழுத்துஞ்சொன்மலரோ நானுதிக்கும்பொன்மலரோ......*
தேவையுனக்கின்னதென்று செப்பாய்பராபரமே ... ...(௨௪௭)
கன்னறரும்பாகாய்க் கரும்புவட்டாய்க்கற்கண்டா ... *
யின்னமுதாயென்னு ளிருந்தாய்பராபரமே ... (௨௪௮)
சிற்பரமேதற்பரமே தெய்வசுருதிசொன்ன ... *
வற்புதமேயன்பே யறிவேபராபரமே ... (௨௪௯)
அறிவிப்பாநீயென்றா லைம்புலன்கடந்தந் ... ...*
நெறிநிற்பாரியாரோ நிகழ்த்தாய்பராபரமே ... (௨௫௰)
அந்தக்கரணமெனு மாகாதபேய்களெனை ... *
வந்துபிடித்தாட்ட வழக்கோபராபரமே ... (௨௫௧)
ஐவரொடுங்கூடாம லந்தரங்கசேவைதந்த ... ...*
தெய்வவறிவே சிவமேபராபரமே ... ... (௨௫௨)
அருளாகிநின்ற சுகமாகாமலையோ ... ... *
விருளாகிநிற்க வியல்போபராபரமே ... ...(௨௫௩)
அன்பரெல்லாமின்ப மருந்திடவும்யானொருவன் ... *
றுன்புறுதனன்றோநீ சொல்லாய்பராபரமே ... (௨௫௪)
சந்ததமுநின்கருணை சாற்றுவதல்லால்வேறு ... ...*
சிந்தையறியேனுன் சித்தம்பராபரமே ... (௨௫௫)
நானெனக்குளாறு நாட்டத்தாலென்னைவிட்டுப் ... *
போனதுமுன்னைவிட்டுப் போகேன்பராபரமே ... (௨௫௬)
இக்காயம்பொய்யென்றோ ரீட்டத்தனக்கபயம் ... *
புக்காராருண்டோ புகலாய்பராபரமே ... (௨௫௭)

நாறுதல்பூரணமே சாருமிடமுண்டேயிரும் ... *
பாறுதியுமொழுங்காய் மன்னும்பராபரமே ... (உருஅ)

உன்னுமனங்கர்ப்பூர வுண்டைபோலேகரைய ... *
மின்னுமானந்த விளக்கேபராபரமே ... ...(உருகூ)

நாட்பட்டலைந்த நடுக்கமெலாந்திரவுனக் ... ... *
காட்பட்டேந் துன்பமெனக் காமோபராபரமே ... (உசுய)

பாவிபடுங்கண்கலக்கம் பார்த்துமிரங்காதிருந்தா ... *
லாவிக்குறு துணையா ரையாபராபரமே ... ...(உசுக)

நின்னிறைவேதாரகமாய் நின்றசுகமெய்தாமை ... ... *
லென்னிறைவேபாவித்தே னென்னேபராபரமே ... (உசுஉ)

நின்னைச்சரண்புகுந்தா னீகாக்கல்வேண்டுமல்லா ... *
லென்னைப்புறம்விடுத லென்னேபராபரமே ... ...(உசுங)

மாறாதுன்பமெல்லாம் வந்துரைத்தா னின்செவியி ... ...*
லேறாதவாறே தியம்பாய்பராபரமே ... ... (உசுச)

விஞ்சுபுலப்பாடனைத்தும் வீறுதுன்பஞ்செய்யவந்த ... ...*
வஞ்சுபுலவேடருக்கு மாற்றேன்பராபரமே .. ...(உசுரு)

கன்னங்கரியநிறக் காமாதிராக்ஷசப்பேய்க் ... ... *
கென்னையிலக்காகவைத்த தென்னேபராபரமே ... (உசுசு)

சித்திநெறிகேட்டல் செகமயக்கஞ்சென்மமற ... ...*
முத்திநெறிகேட்டன் முறைகாண்பராபரமே ... (உசுஎ)

சிந்தைசிதயச் சிதபானவானந்த ... ... *
மெந்தவகையாலேவந் தெய்தும்பராபரமே ... (உசுஅ)

கூர்த்தவறிவாலறியக் கூடாதெனக்குரவன் ... ... *
சேர்த்தபடிதானே திரிந்தேன்பராபரமே ... ...(உசுகூ)

பத்தாருந்தும் பரமசுகம்யானருந்த ... ... *
வெத்தனைநாள்செல்லு மியம்பாய்பராபரமே ... (உஎய)

தீராத்திறற்றுறவு சேராமலிவ்வுலகிற் ... ... *
பாரத்தன்பேசல் பண்போபராபரமே ... ..(உஎக)

இந்தவெளியினையுண் டேப்பமிடப்பேரறிவாந் ... ...*
தந்தவெளிக்கேவெளியாய்ச் சார்ந்தேன்பராபரமே ... (உஎஉ)

உணர்த்துமுன்னை நாடா துணர்ந்தவையேநாடி ... ... *
யிணைக்குறுமென்னேழைமைதா னென்னேபராபரமே ... (உஎங)

உண்டுபோலின்றா முலகைத்திரமெனவுட் ... ... *
கொண்டுநான்பெற்றபலன் கூறாய்பராபரமே ... (உஎச)

உள்ளபடியாதுமென வுற்றுணர்ந்தேனக்கணமே ... *
கள்ளமனம்போனவழி காணேன்பராபரமே ... (உஎரு)

சித்தமவுனஞ் செயல்வாக்கெலாமவுனஞ் ... ...*
சுத்தமவுனமென்பாற் றோன்றிற்பராபரமே ... ...(உஎசு)

எண்ணில்பலகோடியுயி ரெத்தனையோவத்தனைக்குங் ... *
கண்ணிற்கலந்தவருட் கண்ணேபராபரமே ... (௨௭௭)
எனக்கினியாருன்போலு மில்லையென்றால்யானு ... *
னுனக்கினியனாகா வுளமேன்பராபரமே ... ...(௨௭௮)
அண்டபிண்டங்காணே னகமும்புறமுமொன்றாக் ... *
கண்டவென்னை நீகலந்த காலம்பராபரமே ... (௨௭௯)
எத்தனையோகோடி யெடுத்தெடுத்துச்சொன்னாலுஞ் ... *
சித்தமிரங்கிலையென் செய்வேன்பராபரமே ... (௨௮௰)
அறந்தநால்வருக்கு மற்புதமாநீயுரைத்த ... *
தொறந்தயார்த்தையெனக் குணர்டோபராபரமே ...(௨௮௧)
அப்பனென்றுமன்னையென்று மாரியனென்றுமுன்னையே.... *
செப்புவதுமுன்னிலையின் சீர்காண்பராபரமே ... (௨௮௨)
கட்டுங்கனமுமந்தக் காலர்வரும்போதெதிர்த்து ... *
வெட்டுந்தளமோ விளம்பாய்பராபரமே ... (௨௮௩)
பேசாதமோனநிலை பெற்றன்றோநின்னருளாம் ... *
வாசாமகோசரந்தான் வாய்க்கும்பராபரமே ... (௨௮௪)
கற்றாலுங்கேட்டாலுங் காயமழியாதசித்தி ... ... *
பெற்றாலுமின்பமுண்டோ பேசாய்பராபரமே ... (௨௮௫)
கண்டவடிவெல்லாங் கரைக்கின்றவருஞ்சமயம்போ ... *
லண்டமெல்லாநின்னருளே யன்றோபராபரமே ... (௨௮௬)
தன்செயலாலென்றுமிலை தானென்றாலும்பாவி ... *
நின்செயலாய்நில்லா நினைவேன்பராபரமே ... ...(௨௮௭)
கொலைகளவுகட்காமங் கோபம்விட்டாலன்றோ ... *
மலையிலக்காநின்னருடான் வாய்க்கும்பராபரமே ... (௨௮௮)
தன்னையறியாதுசகந் தானாயிருந்துவிட்டா ... ... *
லுன்னையறியவரு ளுண்டோபராபரமே ... (௨௮௯)
ஒன்றிரண்டென்றன்றே வுணர்வுகொடுத்துள்ளபடி ... *
யென்றுமென்னைவையா யிறையேபராபரமே ... (௨௯௰)
கருதுமடியார்களுளங் காணவெளியாகுந் ... ... *
துரியநிறைவான சுகமேபராபரமே ... ... (௨௯௧)
பொய்குவித்தநெஞ்சனருட் பொற்பறிந்துநிக்கலைத்துங்... *
கைகுவித்துநிற்பதெந்தக் காலம்பராபரமே ... (௨௯௨)
அத்துவிதமான வயிக்கியவனுபவமே ... ... *
சுத்தநிலையந்நிலையார் சொல்வார்பராபரமே ... (௨௯௩)
வைத்தசுவரலம்பின் மண்போமோமாயையினோர்க் ... *
கெத்தனைபோதித்துமென்னே யெந்தாய்பராபரமே ... (௨௯௪)
பூட்டற்றுத்தேகமற்றுப் போகுமுன்னேநின்னருளைப் ... *
கூட்டத்தகாதோவென் கண்ணேபராபரமே ... (௨௯௫)

சொல்லிப்பதர்களைந்து சொன்முடிவுகாணாதார் ... *
நெல்லிற்பதர்போல நிற்பார்பராபரமே ... ... (௨௱௯௬)

அழுக்காற்றுநெஞ்ச மழுங்கியபுன்மாக்க ... ... *
ளிழுக்காற்றுவின்பறல மட்டார்பராபரமே ... (௨௱௯௭)

தேகாதிபொய்யெனவே தேர்ந்தவுபசாந்தருக்கு ... *
மோகாதியுண்டோ மொழியாய்பராபரமே .. ...[௨௱௯௮]

சாதனையெல்லாமவிழத் தம்போதங்காட்டாதோர் ... *
போதனைநீநல்குவதெப் போதோபராபரமே ... [௨௱௯௯]

ஒன்றுமறியாவிருளா முளம்படைத்தவெனக் ... ...*
கென்றுகதியருவமீந்தாய்பராபரமே ... ... [௩௱]

சிந்திக்குந்தோறுமெய்யுட் சிற்சுகமாயூற்றாய்ப் ... *
புந்திக்குணின்றவருட் பொற்பேபராபரமே ... [௩௱க]

என்றுமடைந்தோர்கட் கிரங்கார்குறிப்பனைத்துங் ... *
கன்றையுதைகாலி கதைகாண்பராபரமே ... ..[௩௱௨]

ஏற்றக்குறையக் குணமேயடையுமோ ... ... *
யுற்றவமோயாவிக் குறவாம்பராபரமே ... .. [௩௱௩]

ஒருநாளையாவாய்க் குழுண்மைக் கோரணர்க்கு நூல்கோட்டுப் . ..✿
பெருநாளையாற்பேசிலென்ன பேறும்பராபரமே .. [௩௱௪]

சொல்லுஞ்சமயநெறிச் சுற்றுக்குமேசுழலு ... .. *
மல்லலொழியநெஞ்சறைகையாபராபரமே ... [௩௱௫]

பிடித்ததையேஸ்தாபிக்கும் பேராணவத்தை .. .. ✿
யடித்துத்துரத்தவல்லா ராகார்பராபரமே ... [௩௱௬]

நேசத்தாலின்னே நினைக்குநினைவுடையா ... ... *
ராசைக்கடலி லழுந்தார்பராபரமே ... .. [௩௱௭]

கள்ளாதுகட்பனவுங் காரியமோநாமொருசொற் ... *
கொள்ளாதமேதாவியன்றோ கூறுபராபரமே ... [௩௱௮]

சென்றவிடமெல்லாந் திருவருளேதாரகமா ... ... *
நின்றவர்கட்கேயானந்த நிட்டைபராபரமே ... [௩௱௯]

நிட்சிதுறுகலிஃலா நித்யசுகாரம்பசக ... .. ✿
சாட்சியாமுன்னையந்து சார்ந்தேன்பராபரமே .. [௩௱௰]

வாலறிவுதத்துவமாய் மன்னிநின்றகாரணநீ ... ... *
நாளுநிற்பம்தந்த நாளேபராபரமே ... [௩௱௰க]

காட்டத்துலக்கு கடையவந்தாலெல்லையுண்டு .. *
நாடத்திருவந்த நட்பேபராபரமே ... ... [௩௱௰௨]

நித்திரைபோய்த்தானே நினைவயர்ந்தானித்தனித்தற் ... ✿
செத்தபிழைப்பாணெங்கள் செய்கைபராபரமே ...[௩௱௰௩]

இன்பநிட்டையெய்தாமல் யாந்தனிநின்றுஞ்செய்துமனத் ... ✿
துன்புறுதல்வன்பிறவித் துக்கம்பராபரமே ... [௩௱௰௪]

பொய்பகலமெய்யான போதநிலைகண்டோர்க்கோ ... ... *
ஐயமில்லையையமில்லை யையாபராபரமே ... [௩௱௰௫]
மந்திரத்தையுன்னி மயங்காதெனக்கினியோர் ... ... *
தந்திரத்தைவைக்கத் தகாதோபராபரமே ... (௩௱௰௬)
விண்கருணைபூத்ததென்ன மேவியுயிர்க்குயிராய்த் ... *
தண்கருணைதோன்றவருடாய்நீபராபரமே ... (௩௱௰௭)
தன்மயமாநின்றநிலை தானேதானாகிநின்று ... *
சின்மயமாயெல்லா நிகழும்பராபரமே ... (௩௱௰௮)
எங்கிலிடையுநெஞ்ச வேழையைநீவாவென்றே ... *
பாங்குபெறச்செய்வதுன்மேற் பாரம்பராபரமே ... (௩௱௰௯)
ஆண்டநின்னைநீங்கா வடிமைகள்யாமாணவத்தைப் ... *
பூண்டதென்னகன்மம் புகலாய்பராபரமே ... (௩௨௰)
எங்குநீயென்று விருந்தபடியெய்தாம ... ... *
லங்குமிங்குமென்றலைய லாமோபராபரமே ... (௩௨௧)
சற்குமதுவுண்டு களித்ததல்லாலின்னருளி ... ... *
னிற்குமதுதந்ததுண்டோ நீதான்பராபரமே ... (௩௨௨)
அண்டபகிரண்ட மறியாதநின்வடிவைக் ... ... *
கண்டவரைக்கண்டாற் கதியாம்பராபரமே ... ... (௩௨௩)
கலக்கமுறநெஞ்சைக் கலக்கித்திரும்பத் ... ... *
துலக்குபவநீயலையோ சொல்லாய்பராபரமே ... (௩௨௪)
சிந்தையுமென்போலச் செயலற்றடங்கிவிட்டால் ... *
வந்ததெலாநின்செயலா வாழ்வேன்பராபரமே ... (௩௨௫)
பந்தமெலாந்தீரப் பரஞ்சோதிநீகுருவாய் ... ... *
வந்தவடிவை மறவேன்பராபரமே ... ... (௩௨௬)
தானந்தவான சகசநிருவிகற்ப ... ... *
வானந்தநிட்டையருளாயாபராபரமே ... ...(௩௨௭)
அல்லலெல்லாந்தீரவெனக் கானந்தமாகவரு .. ... *
சொல்லையென்பால்வைத்ததையென் சொல்வேன்பராபரமே....()
சிந்தைமயக்கமறச் சின்மயமாய்நின்றவுன்னைத் ... *
தந்தவுனக்கென்னையுநான் றந்தேன்பராபரமே ... (௩௨௯)
மைகாட்டுமாயை மயக்கமறநீகுருவாய்க்... ... *
கைகாட்டவுங்கனவு கண்டேன்பராபரமே ... (௩௩௰)
மால்வைத்தசிந்தை மறக்கறவென்சென்னியிசைக் ... *
கால்வைக்கவுங்கனவு கண்டேன்பராபரமே ... (௩௩௧)
மண்ணாசையெல்லா மாண்டுவெளியாகவிரு ... *
கண்ணாரவுங்கனவு கண்டேன்பராபரமே ... (௩௩௨)
மண்ணீர்மையாலே மயங்காதுன்கையாலென் ... ... *
கண்ணீர்துடைக்கவுநான் கண்டேன்பராபரமே ... (௩௩௩)

உள்ளதுணராவுணர்விலி மாபாவியென்றோ ... ... ✽
மெள்ளமெள்ளக்கைநெகிழ விட்டாய்பராபரமே ... (௩௩௪)
எல்லாநினதுசெய லென்றெண்ணுமெண்ணமுநீ ... ✽
யல்லாலெனக்குளதோ வையாபராபரமே ... ... (௩௩௫)
பந்தமயக்கிருக்கப் பற்றொழிந்தேனென்றுளரு ... ✾
மிந்தமயக்க மெனக்கேன்பராபரமே ... ... (௩௩௬)
காட்சியெல்லாங்கண்ணைவிடக் கண்டதுண்டோயாதினுக்கு ... ✽
மாட்சியுனதருளே யன்றோபராபரமே ... ... [௩௩௭]
எட்டுத்திசையுமொன்றா யின்பமாநின்றவுன்னை ... ✿
விட்டுப்பிரியவிடம் வேறோபராபரமே ... ... [௩௩௮]
பிரியாதுயிர்க்குயிராய்ப் பின்னமறவோங்குஞ் ... ✾
செறிவேயறிவே சிவமேபராபரமே ... ... [௩௩௯]
ஏதேதுசொன்னாலு மெள்ளளவுநீயிரங்காச்... ... ... ✾
சூதேதெனக்குளவு சொல்லாய்பராபரமே ... ... [௩௪௰]
கற்பனையாப்பாடுகின்றேன் கண்ணீருங்கம்பலையுஞ் ... ✽
சொற்பனத்துங்காணேனென் சொல்வேன்பராபரமே... [௩௪௧]
வன்பொன்றுநீங்கா மனதிறப்பமாறுப்பே ... ✿
ரன்பொன்றும்போதுமெனக் கையாபராபரமே ... (௩௪௨)
ஏதுந்தெரியா வெளியேனைவாவெனநின் ... ... ✿
போதநிலைக்காட்டிற் பொறாதோபராபரமே ... [௩௪௩]
ஓராமலெல்லா மொழிந்தேற்குன்றெய்வவரு... ... ✽
டாராதிருக்கத் தகுமோபராபரமே ... ... [௩௪௪]
மோனந்தருஞான மூட்டியெனக்குவட்டா ... ✽
வானந்தவாழ்க்கை யருளாய்பராபரமே ... [௩௪௫]
வாடுமுகங்கண்டென்னை வாடாமலேகாத்த ... ✿
நீடுங்கருணை நிறைவேபராபரமே ... ... [௩௪௬]
புந்தியினுநின்னடியைப் போற்றுகின்றமெய்யடியார் ... ✽
சிந்தையிறப்போநின் றியானம்பராபரமே ... ... [௩௪௭]
உனக்குவமையாக்கருணை யுள்ளவரும்வன்மைக்... ... ✽
கெனக்குவமையானவரு மில்லைபராபரமே ... ... [௩௪௮]
தாயிருந்தும்பிள்ளை தளர்ந்தாற்போலெவ்விடத்து ... ✽
நீயிருந்துநான்றளர்ந்து நின்றேன்பராபரமே ... [௩௪௯]
வாயாற்கிணறுகெட்ட வாறேபோல்வாய்பேசிப் ... ✽
பேயானார்க்கின்பமுண்டோ பேசாய்பராபரமே ... [௩௫௰]
பாவமென்றுலேசும் பயமின்றிச்செய்யவித்தச் ... ✽
சீவனுக்கார்போதந் தெரித்தார்பராபரமே ... [௩௫௧]
இன்பநிருவிகற்ப மின்றேதாவன்றெனிலோ ... ✾
பம்பொறுப்பாரிது சொன்னேன்பராபரமே ... [௩௫௨]

கற்குநிலைக்கற்றாற் கருவியவிழாதருளாய் ... *
நிற்குநிலைகற்பதுவே நீதம்பராபரமே ... [௩௫௩]

காச்சச்சுடர்விடும்பொற் கட்டிபோனின்மலமாய்... ... ✡
பேச்சற்றவரோ பிறவார்பராபரமே ... ... [௩௫௪]

பற்றொழிந்துசிந்தைப் பதைப்பொழிந்துதானேதா... ...*
னற்றிருப்பதென்றைக் கமைப்பாய்பராபரமே ... [௩௫௫]

உருவெளிதான்வாதனா ருத்தமர்க்கல்லாலினமுங் ... *
குருவழிநின்றார்க்குமுண்டோ கூறாய்பராபரமே ... [௩௫௬]

தேகமியாதேனுமொரு சித்திபெறச்சீவன்முத்தி ... ※
பாகுபெற்றிநல்லநெறி யையாபராபரமே ... .. [௩௫௭]

உலகநெறிபோற்சடல மோயவுயிர்முத்தி ... *
யிலகுமெனல்பந்த வியப்போபராபரமே ... [௩௫௮]

பரமாப்பரவெளிபாற் பார்ப்பதல்லான்மற்றெவர்க்குந் ... .. ✡
திரமேதுயிலைநன்றாத் தேர்ந்தேன்பராபரமே ... [௩௫௯]

தேடுவேனின்னருளைத் தேடுமுன்னேயெய்திநட ... ✡
மாடுவேனானந்த மாவேன்பராபரமே ... [௩௬௰]

உள்ளங்குழைபவுடல்குழைபவுள்ளிருந்த ... *
கள்ளங்குழைபவென்று காண்பேன்பராபரமே ... [௩௬௧]

பட்டப்பகற்போலப் பாழ்த்தசிந்தைமாளிலெனல்லாம் ... *
வெட்டவெளியாக விளங்குய்பராபரமே ... ... [௩௬௨]

பார்க்கினணுப்போற்கிடந்த பாழ்ஞ்சிந்தைமாளிலென்னை ... *
யார்க்குச்சரியிலா மையாபராபரமே ... [௩௬௩]

பாட்டுக்கோவன்பினுக்கோ பத்திக்கோவன்பர்தங்க .. *
ளீட்டுக்கெல்லாங்குறுகி நின்றாய்பராபரமே ... [௩௬௪]

முத்தாந்தவித்தே முளைக்குநிலமாயெழுந்த ... ✽
சித்தாந்தமார்க்கச் சிறப்பேபராபரமே ... [௩௬௫]

உன்னாவெளியா யுறங்காதபேருணர்வா ... ... *
வென்னாவிக்குள்ளே யிருந்தாய்பராபரமே ... [௩௬௬]

தத்துவமெல்லாமகன்ற தன்மயர்க்குச்சின்மயமா .. *
நித்தமுத்தசுத்த நிறைவேபராபரமே ... ... [௩௬௭]

உள்ளக்கொதிப்பகல வுள்ளுள்ளேயானந்த ... *
வெள்ளமலர்க்கருணை வேண்டும்பராபரமே ... .. [௩௬௮]

என்னைப்புரப்பதரு ளின்கடனுமென்கடனு ... ... *
நின்னிற்பணியறவே நிற்கைபராபரமே ... [௩௬௯]

தானேயாதன்னிலையைத் தந்தவருளானந்த ... ... *
வானேமனாதீத வாழ்வேபராபரமே ... .. [௩௭௰]

மண்ணாதிபூதமெல்லாம் வைத்திருந்தநின்னிறைவைக் ...
கண்ணாரக்கண்டு களித்தேன்பராபரமே ... ... [௩

அறியாமை யென்னு மறிவித்தவன்றேதான் ... ✿
பிறியா வருணிலையும் பெற்றேன் பராபரமே ... (௩௭௨)

இதெனவு நன்றெனவுந் தேர்ந்துநான் றேர்ந்தபடி ... ✱
பேதுறநடக்கவொட்டா தென்னே பராபரமே ... (௩௭௩)

கண்டவறிவு கண்டா காரமென மெய்யறிவிற் ... ... ✱
கொண்டவர்க்கே முத்தி கொடுப்பாய் பராபரமே ...(௩௭௪)

சுருக்கவல்வினைநா னென்றுமலின் பசுகம் ... ... ✱
பெரும்படிக் கடிமை பெற்றேன் பராபரமே ... (௩௭௫)

பெற்றாரனுபூதி பேசாத மோனநிலை ... ... ✿
சற்றுருணைப்பிரியார் கண்டாய் பராபரமே ... (௩௭௬)

நீயேநா னென்று நினைப்பு மறப்புமறத் ... ... ✱
தாயே யனையவரு டந்தாய் பராபரமே ... (௩௭௭)

சஞ்சலமற் றெல்லாநீ தானென் றுணர்ந்தே னென் ... ✱
னஞ்சலியுங் கொள்ளா யரசே பராபரமே ... (௩௭௮)

பூதமுதனாதவரை பொய்யென்ற மெய்யரெல்லாங் ... ✱
காதலித்த வின்பக் கடலே பராபரமே ... (௩௭௯)

வாக்குமன மொன்றுபட்ட வார்த்தையல்லால் வெவ்வேறாய்ப் ... ✱
போக்குடைய வார்த்தை பொருந்தேன் பராபரமே ... (௩௮௰)

வன்மையின்றி யெல்லா மதித்துணர்வாய்க் காலெடுவேன் ... ✱
றன்மையொன்றுந் தோயாத் தடையோ பராபரமே ... (௩௮௧)

பத்தர்சித்தர் வாழியரி யக்ஷவர்கள் வாழிசெங்கோல் ... ✱
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே ... (௩௮௨)

கல்லாதே னானுங் கற்றுணர்ந்த மெய்யடியார் ... ✱
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே ... (௩௮௩)

சொல்லிறப்பச் சற்குருவாய்த் தோன்றிச் சுகங்கொடுத்த ... ✿
நல்லுழைக்கே கொத்தடிமை நான்காண் பராபரமே ... (௩௮௪)

முத்திக்கு வித்தான மோனகருப்பு வழி ... ... ✿
சித்தித்திட விளைந்த தேனே பராபரமே ... (௩௮௫)

சித்திலாயும் பாழ்த்த நினைவுமற் றுநிற்பதுவோ ... ✱
சுத்தவருணிலைநீ சொல்லாய் பராபரமே ... (௩௮௬)

மண்ணுமறிகடலு மற்றுளவு மெல்லாமுன் ... ✱
கண்ணிலிருக்கவு நான் கண்டேன் பராபரமே ... (௩௮௭)

பூட்டிவைத்த வஞ்சப் பொறிவழியே யென்றனைநீ ... ✱
யாட்டுகின்ற தேதோ வறியேன் பராபரமே ... (௩௮௮)

பொய்யுணர்வாயிந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தே ... ✱
னுய்யும்வகையு முளதோ பராபரமே ... ...(௩௮௯)

பராபரக்கண்ணி முற்றுப்பெற்றது. ஆ-௩௨௪.

பைங்கிளிக்கண்ணி.

அந்தமுடனாதி யளவாமலென்னறிவிற் ... ... ✿
சுந்தரவான்சோதி துலங்குமோபைங்கிளியே ... (க)

அகமேவுமண்ணலுக்கென் னல்லலெல்லாஞ்சொல்லிச் .. *
சுகமானநீபோய்ச் சுகங்கொடுவாபைங்கிளியே ... (உ)

ஆவிக்குளாவியெனு மற்புதனார்சிற்சுகந்தான் ... *
பாவிக்குங்கிட்டுமோ சொல்லாய்நீபைங்கிளியே ... ...(ங)

ஆருமறியாமலென்னை யந்தரங்கமாகவந்து ... ... ✿
சேரும்படியிறைக்குச் செப்பிவாபைங்கிளியே ... ...(ச)

ஆறானகண்ணீர்க்கென் னங்கமானதையுங் ... ...*
கூறாதவென்றோ குதலைமொழிப்பைங்கிளியே ... ... (ரு)

இன்பருளவாடையழுக் கேறுமெமக்கண்ணல்சுத்த ... ✿
வம்பரமாமாடை யளிப்பானோபைங்கிளியே ... (சு)

உன்னாமலொன்றிரண்டென் றோராமல்வீட்டுநெறி ...✿
சொன்னான்வரவம்வகை சொல்லாய்நீபைங்கிளியே ... (எ)

ஊருமிலார்பேருமிலா ருற்றார்பெற்றாருடனே ... *
யாருமிலாரென்னை யறிவாரோபைங்கிளியே ... (அ)

ஊனைப்பாராமலென்னக் குள்ளகத்துநாயகனார் ... *
சீனைப்பார்த்தாற்கருணை செய்வாரோபைங்கிளியே ... (கூ)

என்றுவிடியுமிறை வாயோவென்றென்று ... ...*
நின்றநிலையெல்லா நிகழ்த்தாய்நீபைங்கிளியே... ... (ய)

எந்தமடனூர்பி டெழுதாவிறைவடிவைச் ... ... ✿
சிந்தைமடலாலெழுதிச் சேர்ப்பேனோபைங்கிளியே ...(யக)

கண்ணுண்மணிபோலின்பங் காட்டியெனைப்பிரிந்த ... *
திண்ணியருமின்னம்வந்து சேர்வாரோபைங்கிளியே ... (யஉ)

ஏடார்மலர்சூடே னெம்பெருமான்பொன்னடியாம் ...*
வாடாமலர்முடிக்கு வாய்க்குமோபைங்கிளியே ... (யங)

கல்லேன்மலரோன் கனிந்தவன்பேபூசையென்ற ... *
நல்லோர்பொல்லாவெனையு நாடுவரோபைங்கிளியே ... (யச)

கண்டதனைக்கண்டு கலக்கந்தவிரெனவே ... ... *
விண்டபெருமானையுநான் மேவுவனோபைங்கிளியே ... (யரு)

காணாதகாட்சி கருத்துவந்துகாணாமல் ... ... *
வீணாள்கழிந்து மெலிவேனோபைங்கிளியே ... (யசு)

காந்தமிரும்பைக் கவர்ந்திழுத்தாலென்னவருள் ... *
வேந்தனெனையிழுத்து மேவுவனோபைங்கிளியே ... (யஎ)

காதலால்வாடினதுங் கண்டனையேயெம்மிறைவர் ... *
போதரவாயின்பம் புசிப்பேனோபைங்கிளியே ... (யஅ)

கிட்டிக்கொண்டன்பருண்மை கேளாப்பலவடிகொள் ... *
பட்டிக்குமின்பமுண்டோ சொல்லாய்நீபைங்கிளியே ...(யகூ)

கிட்டரோய்நெஞ்சிற் கிளர்வார்தழுவவென்று ... *
னெட்டோராவரவர் நேசமென்றோபைங்கிளியே ... ... (௨௰)
கூறுங்குணமுமில்லாக் கொள்கையினொன்கவலை ... *
பாறும்படிக்குமனை வாரோபைங்கிளியே ... (௨௧)
சின்னஞ்சிறியேன்றன் சிந்தைகவர்ந்தாரிறைவர் ... *
தன்னந்தனியே தவிப்பேனோபைங்கிளியே ... (௨௨)
சிந்தைமருளைத் தெளிவித்தெனையாள ... ...*
வந்தகுருநாதனருள் வாய்க்குமோபைங்கிளியே ... (௨௩)
சொல்லிறந்துநின்ற சுகரூபப்பெம்மானை ... *
யல்லும்பகலு மணைவேனோபைங்கிளியே ... (௨௪)
தற்போதத்தாலே தலைகீழதாகவையு ... ... *
னற்போதவின்புவர நாட்செலுமோபைங்கிளியே ... (௨௫)
தன்னையறியுந் தருணந்தனிற்றலைவ ... ... *
ரென்னையணையாதவண்ண மெங்கொளித்தார்பைங்கிளியே.....(௨௬)
தாங்கரியமையலெல்லாந் தந்தனைவிட்டின்னருளாம் ... *
பாங்கினைச்சேர்ந்தாரிறைக்குப் பண்போசொல்பைங்கிளியே (௨௭)
தாவியதோர்மர்க்கடமாந் தன்மைவிட்டேயனைவிடத் ... *
தோவியம்போனிற்கினெனை யள்குவரோபைங்கிளியே ... (௨௮)
தீராக்கருவழக்கைத் தீர்வையிட்டங்கென்னையினிப் ... *
பாரோருதாண்டானைப் பற்றுவனோபைங்கிளியே ... (௨௯)
தூங்கிவிழித்தென்னபலன் றூங்காமற்றூங்கிநிற்கும் ... *
பாங்குகண்டாலன்றோ பலன்காண்பேன்பைங்கிளியே ... (௩௰)
தொல்லைக்கவலை தொலைத்துத்தொலையாத ... ...*
வெல்லையிலாவின்பமய மெய்துவனோபைங்கிளியே ... (௩௧)
நன்னெஞ்சத்தன்பரெல்லா நாதனைச்சேர்ந்தின்பணைந்தார் ...*
வன்னெஞ்சத்தாலேநான் வாழ்விழந்தேன்பைங்கிளியே ...(௩௨)
நானேகருதின்வர நாட்டாச்சும்மாவிருந்தாற் ... ... *
றானேயணைவரவர் தன்மையென்றோபைங்கிளியே ... (௩௩)
நீர்க்குமிழிபோன்றவுட னிற்கையிலேசாகவதஞ் ... *
சேர்க்கவறியாமற் றிகைப்பேனோபைங்கிளியே ... (௩௪)
நெஞ்சகத்தில்வாழ்வார் நினைக்கில்வேறன்றெனையார் ... *
வஞ்சகத்தாரல்லரவர் மார்க்கமென்றோபைங்கிளியே ... (௩௫)
பன்முத்திரைச்சமயம் பாழ்படக்கல்லாலடிவாழ் ... *
சின்முத்திரையரசைச் சேர்வேனோபைங்கிளியே ... (௩௬)
பச்சைகண்டநாட்டிற் பறக்குமனைப்போற்பறந்தே ... *
விச்சையெல்லாமண்ணற் கெய்ப்பிவோபைங்கிளியே ... (௩௭)
பாசபந்தஞ்செய்ததுன்பம் பாராமலெம்மிறைவ ... *
ராசைதந்ததுன்பமதற் காற்றேனோபைங்கிளியே .. (௩௮)

பாராசைபற்றிறையைப் பற்றறநான்பற்றிநின்ற ... *
பூராயமெல்லாம் புகன்றவாபைங்கிளியே ... (௩௯)
பேதைப்பருவத்தே பின்றொடர்ந்தென்பக்குவமுஞ் ... *
சோதித்தவண்ணல்வந்து தோய்வாரோபைங்கிளியே ... (௪௰)
பைம்பயிரைநாமுன்போற் பார்பூத்தபைங்கொடிசேர்... ... *
செம்பயிரைநாடித் திகைத்தேனான்பைங்கிளியே ... (௪௧)
பொய்க்கூடுகொண்டு புலம்புவனோவெம்மிறைவர் ... *
மெய்க்கூடுசென்று விளம்புவாய்பைங்கிளியே ... ...(௪௨)
பொய்ப்பணிவேண்டேனைப் பொருட்படுத்தியண்ணலென்பாம்,
மெய்ப்பணியுந்தந்தொருகான் மேவுவனோபைங்கிளியே.....(௪௩)
மண்ணுறங்கும்விண்ணுறங்கு மற்றுளவெலாமுறங்குங் ... *
கண்ணுறங்கேனெம்மிறைவர் காதலாற்பைங்கிளியே ... (௪௪)
மட்டுப்படாத மயக்கமெல்லாந்தீரவென்னை ... ... *
வெட்டவெளிவீட்டிலண்ணன் மேவுவனோபைங்கிளியே.....(௪௫)
மாலைவளர்ந்தென்னை வளர்த்திறைவர்பன்னெறியாம் ... *
பாலைவனத்தில்விட்ட பாவமென்னோபைங்கிளியே ... (௪௬)
மெய்யினோய்மாற்றவிழ்ந்த மெத்தவுண்டெம்மண்ணறந்த ... *
மையனோய்தீர்க்க மருந்துமுண்டோபைங்கிளியே ... [௪௭]
மேவுபஞ்சவண்ணமுற்றாய் வீண்சிறையாலல்லலுற்றாய் ...*
பாவிபஞ்சவண்ணம் பகர்ந்துவாபைங்கிளியே ... ...[௪௮]
வாய்திறவாவண்ணமெனை வைத்தாண்டார்க்கென்றயனை ... *
நீதிறவாச்சொல்லி நிசமாங்காண்பைங்கிளியே ... [௪௯]
வாட்டப்படாத மவுனவின்பங்கையாலே ... ... *
காட்டிக்கொடுத்தானைக் காண்பேனோபைங்கிளியே ... [௫௰]
வாராவரவாக வந்தருளும்மோனருக்கென் ... ... *
பேராசையெல்லாம்போய்ப் பேசிவாபைங்கிளியே ... [௫௧]
விண்ணவர்தம்பாலமுதம் வேப்பங்காயாகவென்பாற் ... *
பண்ணியதெம்மண்ணன்மயல் பார்த்தாயோபைங்கிளியே... [௫௨]
விண்ணுள்வளியடக்கி வேறற்றதென்னவருட் ... ... ☆
கண்ணுளடங்கிடவுங் காண்பேனோபைங்கிளியே... ... [௫௩]
விண்ணூர்நிலவுதவழ் மேடையிலல்லாருறு ... ... *
மண்ணைவீட்டிலென்னை வைத்ததென்னோபைங்கிளியே... [௫௪]
உள்ளத்தினுள்ளே யொளித்திருந்தென்கள்ளமெல்லாம் ...*
வள்ளலறிந்தாலெனக்கு வாயுமுண்டோபைங்கிளியே ... [௫௫]
ஆகத்தைநீக்குமுன்னே யாவித்துணைவரோதான் ... ..*
மோகத்தின்வண்ணந் தழுவுவனோபைங்கிளியே ... ...[௫௬]
நானேசுபாவந் தலைப்படநின்றான்ஞான ... ... ☆
வானவரும் வருவரோபைங்கிளியே ... ...[௫௭]

கள்ளத்தலைவரவர் கைகாட்டிப்பேசாம ... ...*
லுள்ளத்தில்வந்த வுபாயமென்னேபைங்கிளியே... ... [௫௮]

பைங்கிளிக்கண்ணி-முற்றுப்பெற்றது-ஆ-துஅஉ.

எந்நாட்கண்ணி.

தெய்வவணக்கம்.

நீர்பூத்தவேணி நிலவெறிப்பமன்றுமெங் ... ... *
கார்பூத்தகண்டனையான் காணுநாளெந்நாளோ ... [௧]
பொன்றுருமன்றண்மணிப் பூவைவிழியண்டுசுற்று ... *
மென்றாமுதினல யிச்சிப்பதெந்நாளோ ... ... [௨]
நீக்கமலக்கட்டறுத்து நேரேவெளியிலெம்மைத் ... *
தூக்கிவைக்குந்தானைத் தொழுகிறநாளெந்நாளோ ... [௩]
வருமுகங்காட்டாமலென்றுங் கர்ப்பூரம்வீசுந் ... *
திருமுகமேநோக்கித் திருக்கறுப்பதெந்நாளோ... ... [௪]
வெஞ்சேலெனும்விழியார் வேட்கைதருஞ்சுக்கருஞ்சினனை ...*
யஞ்சேலெனுங்கைக் கபயமெய்பதெந்நாளோ ... [௫]
ஆறுசமயத்து மதுவதுவாய்நின்றிலங்கும் ... *
வீறுபராதிருத்தாளை மேவுநாளெந்நாளோ... ... [௬]
பச்சைநிறமாய்ச்சிவந்த பாகங்கலந்துலகை... ... *
யிச்சையுடனீன்றுளை யாக்காண்பதெந்நாளோ ... ...[௭]
ஆதியந்தங்காட்டா தகண்டிதமாய்நின்றுணர்த்தும் ... *
போதவடிவானடியைப் போற்றுநாளெந்நாளோ ... [௮]
கங்கைநிலவுசடைக் காட்டானைத்தந்தையெனும் ... ...*
புங்கவெண்கோட்டானைபதம் புந்திவைப்பதெந்நாளோ ... [௯]
அஞ்சுமுகங்காட்டாம லாறுமுகங்காட்டவந்த ... ... *
செஞ்சரணச்சேவடியைச் சிந்தைவைப்பதெந்நாளோ ... [௰]
தந்தையிருதாபணிந்துத் தம்பிரான்றன்சேர்ந்த ... *
வெந்தையிருதாளிணைக்கே யின்புறுவதெந்நாளோ ... [௰௧]

முற்றிற்று-ஆ-துகூ.

குருமரபின்வணக்கம்.

துய்பகரமலராற் சொல்லாமற்சொல்லுண்மை ... ...*
யையனைக்கல்லாலரசை யாயணைவதெந்நாளோ ... ...[௧]
சிந்தையினுக்கெட்டாத சிற்சுகத்தைக்காட்டவல்ல ... *
நந்தியடிக்கீழ்க்குடியாய் நாமணைவதெந்நாளோ ... [௨]
எந்தைசனற்குமாரனுமெமையாட்கொள்வான் ... *
வந்ததவத்தினரை வாழ்த்துநாளெந்நாளோ ... ...[௩]

பொய்கண்டார்காணாப் புனிதமெனுமத்துவித ... ...*
மெய்கண்டநாதனருண் மேவுநாளெந்நாளோ ... ...[௪]
பாதிவிருத்தத்தாலிப் பார்விருத்தமாகவுண்மை ... *
சாதித்தார்பொன்னடியைத் தான்பணிவதெந்நாளோ ..[௫]
சிற்றம்பலமன்னுஞ் சின்மயராந்தில்லைநகர்க் ... *
கொற்றங்குடிமுதலைக் கூறுநாளெந்நாளோ ... ..[௬]
குன்றவிலருண்ஞானமுதல் கொற்றங்குடியடிக ... *
ளுறைமலர்த்தாட்கன்புபெற்று நாமிருப்பதெந்நாளோ ... [௭]
நாளவங்கள்போகாம னன்னெறியைக்காட்டியெமை ... *
யாளவந்தகோல்கட் கன்புவைப்பதெந்நாளோ ..... [௮]
என்னறிவையுள்ளடக்கி யென்போல்வருமவுனி ... *
தன்னறிவுக்குள்ளேநான் சாருநாளெந்நாளோ ... ...[௯]
ஆறொன்றைநாடினதற் காறுமுண்டாமென்றெமக்குக் ...*
கூறுமவுனியருள் கூடுநாளெந்நாளோ ... ... [௰]
நில்லாமனின்றருளே நேரோபாவென்றவொரு ... ...*
சொல்லான்மவுனியரு டோற்றுநாளெந்நாளோ ... [௰௧]
வைதிகமாஞ்சைவ மவுனிமவுனத்தளித்த ... ...*
மெய்திகழ்ந்தென்னல்லல் விடியுநாளெந்நாளோ ... [௰௨]
வாக்குமனமற்ற மவுனிமவுனத்தருளே ... ... *
தாக்கவுமென்னல்லலெல்லாந் தட்டழியதெந்நாளோ ...[௰௩]

முற்றிற்று - ஆக - தூாகூ.

அடியார்வணக்கம்.

வெம்பந்தந்தீர்த்துலகாள் வேந்தன்றிருஞான ... *
சம்பந்தனையருளாற் சாருநாளெந்நாளோ ... ..[௧
எரின்சிவபோக மிங்கிவர்க்கேயென்னவுழ ... ... *
வாரங்கொள்செய்கையர்தாள் வாரம்வைப்பதெந்நாளோ ... [௨
பித்தரிறையென்றறிந்து பேழைபாத்ராதனுப்பு ... *
வித்தகமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வதெந்நாளோ ... [௩
போதவூர்நாடறிய புத்தர்தமைவாதில்வென்ற ... *
வாதவூரையனன்பை வாஞ்சிப்பதெந்நாளோ ... ... [௪
ஒட்டுடன்பற்றின்றி யுலகைத்துறந்தசெல்வப் ... ... *
பட்டினத்தார்பத்ரகிரி பண்புணர்வதெந்நாளோ ... [௫
கண்டதுபொய்யென்றகண்டா காரசிவமெய்யெனவே ... *
விண்டசிவவாக்கியர்தாண் மேவுநாளெந்நாளோ ... [௬
சக்கரவர்த்தி தவராஜயோகியெனு ... ... *
மிக்கதிருமூலனருண் மேவுநாளெந்நாளோ... ... ...(

கந்தரநுபூதிபெற்றுக் கந்தரநுபூதிசொன்ன ... ... *
வெந்தையருணாடி யிருக்குநாளெந்நாளோ ... ... [அ]
எண்ணரியசித்தரிமையோர்முதலான ... ... *
பண்ணவர்கள்பத்தருள் பாலிப்பதெந்நாளோ ..... [௯]

முற்றிற்று - [illegible] - [illegible].

யாக்கையைப்பழித்தல்.

சுக்கிலமுநீருஞ் சோரிமலமூத்திரமுடற் ... ... *
புக்குழலும்வாழ்க்கையினிப் போதுமென்பதெந்நாளோ........[க]
நீர்க்குமிழிபூணமைத்து நின்றாலுநில்லாமெய் ... ... *
பார்க்குமிடத்ததின்மேற் பற்றறுவதெந்நாளோ ... [உ]
காக்கைநரிசெந்நாய் கழுகொருநாள்கூடியுண்ணுந் ... *
தேக்குவிருந்தாமுடலைச் சீயென்பதெந்நாளோ ... ..[௩]
செங்கிருமியாதி செனித்தசென்மபூமியினை ... ... *
யிங்கெனுடலென்று மிழுக்கொழிவதெந்நாளோ ... [௪]
தத்துவர்தொண்ணூற்றறுவர் தாமாய்வாழ்நாட்டைப் ... *
பித்தனெனென்னும் பிதற்றொழிவதெந்நாளோ ... ...[௫]
ஊனென்றிநாதனுணர்த்துமதைவிட்டறிவே ... *
னென்றுபாவிதலை நாணுநாளெந்நாளோ ... [௬]
வேலையிலாவேதன் விதித்தவிந்த்ரசாலவுடன் ... *
மாலைவியாபார மயக்கொழிவதெந்நாளோ ... [௭]
ஆழ்ந்துநினைக்கி னரோசிகமாமிவ்வுடலில் ... ... *
வாழ்ந்துபெறும்பேற்றை மதிக்குநாளெந்நாளோ ... [அ]
மும்மலச்சேறுண மூழ்குமுபாசகமெனு ... *
நிம்மலகாயத்து னிகழ்ச்சிவைப்பதெந்நாளோ... ... [௯]
நாற்றமிகக்காட்டு நவவாயில்பெற்றபசுஞ் ... *
சோற்றுத்துருத்தி சுமையென்பதெந்நாளோ ... ... [௰]
உருவிருப்பவுள்ளேதா னூறுமலக்கேணி ... ... *
பருவருப்புவாழ்க்கையைக்கண் டஞ்சுநாளெந்நாளோ ...[௰க]

முற்றிற்று - [illegible] - [illegible].

மாதரைப்பழித்தல்.

மெய்வீசுநாற்றமெல்லாமிக்கமஞ்சளான்மறைத்துப் ... *
பொய்வீசும்வாயார் புலையொழிவதெந்நாளோ ... [க]
திண்ணியநெஞ்சப்பறவைசிக்கக்குழற்காட்டிற் ... *
கண்ணிவைப்போர்மாயங்கடக்குநாளெந்நாளோ ... [உ]

கண்டுமொழிபேசிமனங் கண்டுகொண்டுவிலைபாக் ... *
கொண்டுவிடுமோருபொய்க் கூத்தொழிவதெந்நாளோ ... (௩)
காமனைவாவென்றிருண்டகண்வலையைவீசுமின்னார் ... *
நாமமறந்தருளைநண்ணுநாளெந்நாளோ ... ...(௪)
கண்களில்வெண்பூளைகரப்பக்கருமையிட்ட ... *
பெண்கண்மயறப்பிப்பிழைக்குநாளெந்நாளோ ... (௫)
வீங்கித்தளர்ந்துவிழுமுலையார்மேல்விழுந்து ... *
தூங்குமதன்சோம்பைத் துடைக்குநாளெந்நாளோ ...(௬)
கச்சிருக்குங்கொங்கைகரும்பிருக்குமின்மாற்றம்... ...*
வைச்சிருக்குமாதர்மயக்கொழிவதெந்நாளோ ... [௭]
பச்சென்றகொங்கைப்பசப்பியர்பாழானமய ... *
லச்சென்றறிந்தருளைநண்ணுநாளெந்நாளோ ... ...[௮]
உந்திச்சுழியாலுளத்தைச்சுழித்தகனை ... ... *
தந்தித்தனத்தார்தலைமறப்பதெந்நாளோ ... [௯]
தட்டுவைத்தசேலைகொய்சகத்திற்சிந்தையெல்லாங் ... *
கட்டிவைக்குமாயமின்னார்கட்டழிவதெந்நாளோ ... [௰]
ஆழாழியென்னவளவுபடாவஞ்சநெஞ்சப் ... *
பாழானமாதர்மயற்பற்றொழிவதெந்நாளோ... ... [௰௧]
தூயபனித்திங்கள்சுடுவதெனப்பிற்றேற்று ... ... *
மாயமடவார்மயக்கொழிவதெந்நாளோ ... ... (௰௨)
ஏழைக்குறும்புசெயுமேற்றிழையார்மோகமெனும் ... *
பாழைக்கடந்துபயிராவதெந்நாளோ ... ... (௰௩)
விண்டுமொழிகுளறிவேட்கைமதுமொண்டுதருந் ... *
தொண்டியர்கள்கட்சடையிற்சுற்றொழிவதெந்நாளோ ... (௰௪)
மெய்யிற்சிவம்பிறக்கமேவுமின்பம்போன்மாதர் ... *
பொய்யிலின்பின்றென்றுபொருந்தாநாளெந்நாளோ ... (௰௫)

முற்றிற்று - ஆக - ௲௪௨.

தத்துவமுறைமை.

ஐம்பூதத்தாலேயலக்கழிந்ததோஷமற ... ... *
வைம்பூதநாதனருளெய்துநாளெந்நாளோ ... (௧)
சத்தமுதலாம்புலனிற்சஞ்சரித்தகள்வரொடும் ... *
நாலுபந்தீர்ந்துபிழைக்குநாளெந்நாளோ ... ... (௨)
பாரும்மெய்பொறிவழியைநாடாவண்ணமெமை ... ...*
வாக்காதியரிபாலருள்வருவதெந்நாளோ ... ...(௩)
போக்காமலுண்டென்மமாவைதம்பால்வீண்காலம் *
பொருந்துநாளெந்நாளோ ... (௪)

மனமானவானரக்கைமாலையாகாம ... ... *
லெனையாளடிகளடியெய்துநாளெந்நாளோ ... (௫)
வேட்டைப்புலப்புலையாமேவாதவண்ணமனக் ... ...*
காட்டைத்திருத்திக்களைகாண்பதெந்நாளோ ... (௬)
உந்துபிறப்பிறப்பையுற்றுவிடாதெந்தையருள் ... *
வந்துபிறக்கமனமிறப்பதெந்நாளோ ... ... (௭)
புத்தியெனுந்தத்திப்பொறிபரவின்வாய்த்தேளை ... *
பொத்துவிடாதெந்தையருளொன்றுநாளெந்நாளோ ... (௮)
ஆங்காரமென்னுமதயானைவாயிற்கரும்பா ... *
யேங்காமலெந்தையருளெய்துநாளெந்நாளோ .. ... (௯)
சித்தமெனும்பௌவத்திரைக்கடலில்லாழ்ந்துரும்பாய் ... *
நித்தமலையாதருளினிற்குநாளெந்நாளோ ... .. (௰)
வித்தியாதத்துவக்களெழும்வெருண்டோடச் .. ... *
சுத்தபரபோகத்தைத்துய்க்குநாளெந்நாளோ ... (௰௧)
சுத்தவித்தையேமுதலாத்தோன்றுமோரைந்துவகைத் ... *
தத்துவத்தைநீங்கியருள்சாருநாளெந்நாளோ ... (௰௨)
பொல்லாதகாமட்டலைக்கோரிலெய்யறிவு ... *
செல்லாமெந்நெறியிற்சேருநாளெந்நாளோ... . (௰௩)
அடிகளடிக்கீழ்க்குடியாயாம்வாழவையனெங் ... *
குடிகெடுக்குங்காமடிமைகெடுநிலையெந்நாளோ ... (௰௪)
ஆணவப்புறக்கருவியாறுபற்றுமற்றவும் ... ... *
போனவழிபுங்கூடப்புகாமைப்பதெந்நாளோ ... (௰௫)
அந்தகனுக்கெங்குமிருளானவாறுபதியில ... *
வந்தவிருள்வேலைவடிடநாளெந்நாளோ ... ... (௰௬)
புன்மலத்தைச்சேர்த்துமலபோதப்பொருந்துதல்போய் ...*
நின்மலத்தைச்சேர்ந்துமலநீங்குநாளெந்நாளோ ... (௰௭)
கண்டுகண்டேதேருக்கலக்கமலமாத்திரிவண்ணம் ... *
பண்டைவினைவேறைப்பதிக்குநாளெந்நாளோ ... (௰௮)
பைங்கூழ்வினைதான்பசோவியாகவேமக் ... .. *
செங்கோன்கிரணவெயிலெய்துநாளெந்நாளோ ... (௰௯)
குறித்தவித்தமாதியாற்கூடும்வினையெல்லாம் ... ... *
வறுத்தவித்தாம்வண்ணமருள்வந்திடுநாளெந்நாளோ ... (௨௰)
சஞ்சிதமேயாதிசரக்கானமுஞ்சேரும் ... ... *
வெந்தபொறியாகவருண்மேவுநாளெந்நாளோ ... (௨௰௧)
தேகமுதலனைத்ததிரண்டொன்றாய்த்திலங்கு ... ... *
மோகமிகுமாயைமுடியுநாளெந்நாளோ ... (௨௰௨)
சுத்தமுதலாத்தழைத்திங்கெமகருணர்த்துஞ் ... *
சுத்தமாமாயைதொடக்கறுவதெந்நாளோ ... (௨௰௩)

எம்மைவினையபிறையைபெம்பாற்காட்டாத ... ... *
செம்மைதிரோதையகலுநாளெந்நாளோ ... ...(௨௪)
நித்திரையாய்வந்துநினைவழிக்குங்கேவலமாஞ் ... ... *
சத்துருவைவெல்லுஞ்சமர்த்தறிவதெந்நாளோ... ... [௨௫]
சன்னல்பின்னலானசகலமெனுங்குப்பையிடை ... *
மன்னவன்ஞானக்கனலூட்டுநாளெந்நாளோ ... [௨௬]
மாயாவிகாரமலமொழிசுத்தாவத்தை ... ... *
தோயாவருளைத்தொடருநாளெந்நாளோ ... [௨௭]

முற்றிற்று - ஆக - ௱௭௮.

தன்னுண்மை.

உடம்பறியுமென்னுமந்தவூழெல்லாந்தீரத் ... *
திடம்பெறவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ ... (௧)
செம்மையறிவாலறிந்துதேகாதிக்குள்ளிசைந்த ... ...*
வெம்மைப்புலப்படவேயாமறிவதெந்நாளோ .. ... [௨]
தத்துவமாம்பாழ்த்தசடவுருவைத்தான்சுமந்த ... ... *
சித்துருவாமெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ ... [௩]
பஞ்சப்பொறியையுயிரென்னுமந்தப்பஞ்சமறச் ... *
செஞ்செவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ ... ..[௪]
அந்தக்கரணமுயிராமென்றவந்தரங்க ... ... *
சிந்தைக்கணத்திலெம்மைத்தேர்ந்தறிவதெந்நாளோ ... [௫]
முக்குணத்தைச்சீயென்றுமூடத்தைவிட்டருளா ... *
லக்கணமேயெம்மையறிந்துகொள்வதெந்நாளோ ... [௬]
காலையுயிரென்றுங்கலாதிகள்சொற்கேளாமற் ... ... *
சீலமுடனெம்மைத்தெளிந்துகொள்வதெந்நாளோ ... [௭]
வான்கெடுத்துத்தேடுமதிகேடர்போலவெமை ... ...*
நான்கெடுத்துத்தேடாமனன்கறிவதெந்நாளோ ... [௮]

முற்றிற்று - ஆக - ௱௮௬;

அருளியல்பு.

ஜனந்தருகுடிதாமக்குவேண்டாமென் ... ... *
றனந்தநாட்டிலவதரிப்பதெந்நாளோ ... ...[௧]
பொய்க்காட்சியானபுவனத்தைவிட்டருளா ... ... *
மெய்க்காட்சியாம்புவனமேவுநாளெந்நாளோ ... ...[௨]
ஆதியந்தங்காட்டாமலம்பரம்போலேநிறைந்த ... *
தீதிலருட்கடலைச்சேருநாளெந்நாளோ ... .[௩]
எட்டுத்திசைக்கீழ்மேலெங்கும்பெருகிவரும் ... *
வெட்டவெளியினூற்றின்மெய்த்தோய்வதெந்நாளோ ... [௪]

ஞானமென்றசுருதியெல்லாமோலமிடு ... *
மோனமானவெற்றைமேவுநாளெந்நாளோ .. ... [௫]
வெந்துவெடிக்கின்றசிந்தைவெப்பகலத்தண்ணருளாய் ... *
வந்துபொழிகின்றமழைகாண்பதெந்நாளோ ... (௬)
சூரியர்கள்சந்திரர்கடோன்றாச்செயஞ்சோதிப் ... *
பூரணதேயத்திற்பொருந்துநாளெந்நாளோ ... ... (௭)
கன்றுமனவெப்பக்கலக்கமெலாந்தீரவருட் ... *
டென்றல்வந்துவீசுவெளிசேருநாளெந்நாளோ ... (௮)
கட்டுநமன்செங்கோல்கடாவடிக்குங்கோலாக ... ... *
வெட்டவெளிப்பொருளைமேவுநாளெந்நாளோ ... (௯)
சாலக்யபாடத்தடைதீரவெம்பெருமா ... ... *
ஞாலக்கமண்டபத்துளோடுநாளெந்நாளோ ... (௰)
விண்ணவன்றானென்னும்வெளிநிலாமண்டபத்திற் ... *
றண்ணீருந்தித்தளர்வொழிவதெந்நாளோ ... (௰௧)
வெய்யபுலிபார்த்துவிழித்திருந்தவல்லலறத் ... *
துய்யவருளிற்றுயிலுநாளெந்நாளோ ... ... (௰௨)
வெய்யபிறவியினிலவெப்பமெலாம்விட்டகல ... *
வையனடிநீழலணையுநாளெந்நாளோ .. ..(௰௩)
வாதைப்பிறவிவலைகடலைநீந்தவையன்... ... ...*
பாதப்புணையிணையைப்பற்றுநாளெந்நாளோ ... (௰௪)
ஈனமில்லாமெய்ப்பொருளையின்மையிலேகாணவெளி ...*
ஞானமெனுமஞ்சனத்தைநான்பெறுவதெந்நாளோ ... [௰௫]
எல்லாமிறந்தவிடத்தெந்தைநிறைவாம்வடிவைப் ... *
புல்லாமற்புல்லிப்புணருநாளெந்நாளோ ... [௰௬]
சடத்துளுயிர்போலெமக்குத்தாயிலுயிராய்ஞான ... *
நடத்துமுறைகண்டுபணிநாம்விடுவதெந்நாளோ ... [௰௭]
எக்கணுமாந்தன்பவிருட்கடலைவிட்டருளா ... *
மிக்ககரையேறிவெளிப்படுவதெந்நாளோ ... [௰௮]

முற்றிற்று- ஆக- [illegible].

பொருளியல்பு.

கைவிளக்கின்பின்னேபோய்க்காண்பார்போன்மெய்ஞ்ஞான ..*
மெய்விளக்கின்பின்னேபோய்மெய்காண்பதெந்நாளோ ... (௧)
கேடில்பசுபாசமெல்லாங்கீழ்ப்படவுந்தானேமே ... *
லாடுஞ்சுகப்பெருக்கன்புறுவதெந்நாளோ ... (௨)
ஆணவத்தைநீக்கியறிவூடேயைவகையாய்க் ... ..*
காணவத்தைக்கப்பாலைக்காணுநாளெந்நாளோ ... (௩)

நீக்கப்பிரியாநினைக்கமறக்கக்கூடாப் ... ... *
போக்குவரவற்றபொருளணைவதெந்நாளோ ... (௪)
அண்டருக்குமெய்ப்பில்வைப்பாமாரமுதையென்னகத்திற்... *
கண்டுகொண்டுநின்றுகளிக்குநாளெந்நாளோ ... (௫)
காட்டுந்திருவருளேகண்ணாகக்கண்டுபர ... ... *
வீட்டின்பமெய்ப்பொருளைமேவுநாளெந்நாளோ ... (௬)
நானெனுந்தன்மைநழுவியேயெவ்வுயிர்க்குந் ... *
தானெனவுண்மைதனைச்சாருநாளெந்நாளோ ... (௭)
சிந்தைமறந்துதிருவருளாய்நிற்பவர்பால் ... ... *
வந்தபொருளெம்மையுந்தான்வாழ்விப்பதெந்நாளோ ...(௮)
எள்ளுக்குளெண்ணெய்போலெங்கும்வியாபகமா... ...*
யுள்ளவொன்றையுள்ளபடியோருநாளெந்நாளோ ... (௯)
அருவுருவமெல்லாமகன்றதுவாயான... ... ... *
பொருளெமக்குவந்துபுலப்படுவதெந்நாளோ ... (௰)
ஆரணமுங்காணாவகண்டிதாகாரபரி... ... ...*
பூரணம்வந்தெம்மைப்பொருந்துநாளெந்நாளோ ...(௰௧)
சத்தொடுசித்தாகித்தயங்கியவானந்தபரி ... ...*
சுத்தவகண்டசிவந்தோன்றுநாளெந்நாளோ... ... . (௰௨)
எங்கெங்கும்பார்த்தாலுமின்புருவாய்நீக்கமின்றித் ... *
தங்குந்தனிப்பொருளைச்சாருநாளெந்நாளோ ... (௰௩)
அடிமுடிகாட்டாதசுத்தவம்பரமாஞ்சோதிக்... ... *
குடிவெளிவந்தென்னைக்கலக்குநாளெந்நாளோ ... (௰௪)
ஒன்றனையுங்காட்டாவுளத்திருளைக்குறையிட்டு ... *
நின்றபராஞ்சோதியுடனிற்குநாளெந்நாளோ ... ... (௰௫)
எந்தச்சமயமிசைந்துமறிவூடறிவாய் ... ... *
வந்தபெருளேபொருளாவாஞ்சிப்பதெந்நாளோ ... (௰௬)
எவ்வாறிங்குற்றுணர்ந்தாரியாவரவர்தமக்கே ... ... *
யவ்வாறாய்நின்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ ... (௰௭)
பெண்ணணலியெனவும்பேசாமலெல்லனறிவின் ... *
கண்ணூடேநின்றவொன்றைக்காணுநாளெந்நாளோ ... (௰௮)
நினைப்புமறப்புமறநின்றபராஞ்சோதி ... ... *
தனைப்புலமாவென்னறிவிற்சந்திப்பதெந்நாளோ ... (௰௯)

முற்றிற்று - ஆக - ௲௨௱௰௯.

ஆனந்தவியல்பு.

பேச்சுமூச்சில்லாதபேரின்பவெள்ளமுற்று ... *
நீச்சுநிலைகாணாமனிற்குநாளெந்நாளோ ... ... (௧)

சித்தந்தெளிந்தோர்தெளிவித்தெளிவான ... ... *
த்தசுகக்கட்டுட்டோயுநாளெந்நாளோ ... ... (௨)

சிற்றின்பமுண்டுழ்சிதைபவனந்தங்கடல்போல் ... *
முற்றின்பவெள்ளமெமைமூடுநாளெந்நாளோ ... ... (௩)

எல்லையில்பேரின்பமயமெப்படியென்றோர்தமக்குச் ... *
சொல்லறியாதுமவர்கள்போற்சொல்லுநாளெந்நாளோ........ (௪)

அண்டாண்டகோடியனைத்துமுகாந்தவெள்ளங் ... *
கொண்டதெனப்பேரின்பங்கூடுநாளெந்நாளோ ... (௫)

ஆதியந்தமில்லாதவாதியருளுமெனுஞ் ... ... *
சோதியின்பத்தூடேதுளையுநாளெந்நாளோ ... (௬)

சாலோகமாதிசவுக்கியமும்விட்டநம்பான் ... ... *
மேலானஞானவின்பமேவுநாளெந்நாளோ ... (௭)

தற்பாதத்தினுள்ளேயுஞ்சாலோகமாதியெனும் ... *
பொற்பறிந்தானந்தம்பொருந்துநாளெந்நாளோ ... (௮)

உள்ளத்திலுள்ளேதானூறுஞ்சிவானந்த ... ... *
வெள்ளந்துளைந்துவிடாய்தீர்வதெந்நாளோ ... (௯)

கன்னலுடன்முக்கனியுங்கற்கண்டுஞ்சீனியுமாய் ... *
மன்னுமின்பவாரமுதைவாய்மடுப்பதெந்நாளோ ... (௰)

மலைவுற்றுழன்றமயக்கமெல்லாந்தீர்ந்திடவும் ... .. *
விண்ணூடேமூழ்ந்தசுகமேவுநாளெந்நாளோ ... ... (௰௧)

கானற்சலம்போன்றகட்டுமுலைப்பொய்த்திர ... *
வானமுதவாவிமருவுநாளெந்நாளோ... ... ... (௰௨)

தீங்கரும்பென்றுலினியாதின்றுலினிப்பனபோற் ... *
பாங்குறும்பேரின்பம்படைக்குநாளெந்நாளோ ... (௰௩)

புண்ணியபாவங்கள்பொருந்தாமெய்யன்பரெல்லா ... *
நண்ணியபேரின்பசுகநாமணைவதெந்நாளோ ... (௰௪)

முற்றிற்று - ஆக - ௩௨௧.

அன்புநிலைமை.

தக்கரவிகண்டசரோருகம்போலென்னிதய ... ... *
மிக்கவருள்கண்டுவிகசிப்பதெந்நாளோ ... ... (௧)

வானமுகிற்கண்டமயூரபக்ஷிபோலவையன் ... ... *
ஞானநடங்கண்டுநடிக்குநாளெந்நாளோ ... ... (௨)

சந்திரனைநாடுஞ்சகோரபக்ஷிபோலறிவில் ... ... *
வந்தபரஞ்சோதியையாம்வாஞ்சிப்பதெந்நாளோ ... (௩)

குத்திரமெய்ப்புற்றகத்துக்குண்டலிப்பாம்பொன்றுண்டுஞ் ... *
சித்தனையுங்கண்ணூற்றெரிசிப்பதெந்நாளோ ... [௪]

அந்தரத்தேநின்றுமோனத்தக்கூத்தனுக்கென்... ...
சிந்தைதனைக்கொடுத்துச்சேவிப்பதெந்நாளோ ... [௫
கள்ளனிவனென்றுமெள்ளக்கைவிடுதல்காரியமோ ...
வள்ளலேயென்றுவருந்துநாளெந்நாளோ ... [௬
விண்ணாட்டர்காணாவிமலாபரஞ்சோதி ... ...
பண்ணவாவென்றாற்றுநாளெந்நாளோ ... [௭
ஏழ்துறுசெய்தாலுமென்பணிபோநின்பணியா ...
மாதேவாவென்றுவருந்துநாளெந்நாளோ ... [௮
பண்டுங்காணேனுன்பழம்பொருளேயின்றுனைக் ...
கண்டுங்காணேனெனவுங்கைகுவிப்பதெந்நாளோ ... [௯
பொங்கேதமானபுழுக்கமெல்லாந்திரவின்ப ... ...
மெங்கேயெங்கேயென்றிரங்குநாளெந்நாளோ ... [௰
கடலின்மடைகண்டதுபோற்கண்ணீராறாக ...
வுடல்வெதும்பிமூர்ச்சித்துருகுநாளெந்நாளோ ... [௰௧
புலர்ந்தேன்முகஞ்சருகாய்ப்போனேனிற்காண ... *
வலந்தேனென்றேங்கியழுங்குநாளெந்நாளோ ... [௰௨]
புண்ணீர்மையாளர்புலம்புமாபோற்புலம்பிக் ... *
கண்ணீருங்கம்பலையுங்காட்டுநாளெந்நாளோ ... (௰௩)
போற்றேனென்றாலுமெனைப்புந்திசெய்யும்வேதனைக்கிங் ...*
காற்றேனாற்றேனென்றாற்றுநாளெந்நாளோ ... (௰௪)
பொய்முடங்கும்பூமிசிலபோட்டலறப்பூங்கமலன் ... *
கைமுடங்கநான்சனனக்கட்டறுவதெந்நாளோ ... (௰௫)
கற்றுணைத்தைப்போன்றவஞ்சக்காரர்கள்கைகோராம ... *
நற்றுணைத்தார்கைகோத்துநான்றிரிவதெந்நாளோ ... (௰௬)
துட்டனைமாமாயைச்சுழனீக்கியபத்தரமே ... ...*
விட்டனையேயென்றுவியக்குநாளெந்நாளோ ... (௰௭)

முற்றிற்று - ஆக - ௩௨௪௪.

அன்பர்நெறி.

அத்துவாவெல்லாமடங்கச்சோதித்தபடிச் ... *
சித்துருவாய்நின்றார்தெளிவறிவதெந்நாளோ ... ... (௧)
மூச்சற்றுச்சிந்தைமுயற்சியற்றுமூதறிவாய்ப் ... *
பேச்சற்றோர்பெற்றவொன்றைப்பெற்றிடுநாளெந்நாளோ ...(௨)
கோட்டாலையானகுணமிறந்தநிற்குணத்தோர் ... *
தேட்டாலேதேடுபொருள்சேருநாளெந்நாளோ ... (௩)
கெடுத்தேபசுத்துவத்தைக்கேடிலாவானந்த ... *
மடுத்தோரடுத்தபொருட்கார்வம்வைப்பதெந்நாளோ ... (௪)

கற்கண்டாலோடுகின்றகாக்கைபோற்பொய்ம்மைபச் ... *
சாற்கண்டாலோடுமன்பர்தாய்வழியதெந்நாளோ ... (௫)
மெய்த்தகுலங்கல்விபுகழ்வேடமெல்லாமோடவிட்ட .. *
சித்தரொன்றுஞ்சேராச்செயலறிவதெந்நாளோ ... (௬)
குற்றச்சமயக்குறும்படர்ந்ததற்போத ... ... *
பற்றவர்கட்கற்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ ... (௭)
தர்க்கமிட்டுப்பாழாஞ்சமயக்குதர்க்கமிட்டு ... *
நிற்குமவர்கண்டவழிநேர்பெறுவதெந்நாளோ .. ... (௮)
வீறியவேதாந்தமுதன்மிக்ககாலாந்தவரை ... ... ☆
யாறுமுணர்ந்தோருணர்வுக்கன்புவைப்பதெந்நாளோ ... (௯)
கண்டவிடமெல்லாங்கடவுண்மயமென்றறிந்து ... .. *
கொண்டநெஞ்சர்நேயநெஞ்சிற்கொண்டிருப்பதெந்நாளோ (௰)
பாக்கியங்களெல்லாம்பழுத்துமெய்ப்பழுத்தோர் ... ☆
நோக்குந்திருக்கூத்தைநோக்குநாளெந்நாளோ ... (௰௧)
எவ்வுயிருந்தன்னுயிர்போலெண்ணுந்தபோதனர்கள் ... *
செவ்வறிவைநாடிமிகச்சிந்தைவைப்பதெந்நாளோ ... (௰௨)

முற்றிற்று - ஆக - ௲௨௫௪.

அறிஞருரை.

இருநிலனாய்த்தீயாகியென்றதிருப்பாட்டின் ... ... *
பெருநிலையைக்கண்டணைந்துபேச்சறுவதெந்நாளோ .. (௧)
அற்றவர்கட்கற்றசிவனாமென்றவத்துவித ... ... *
முற்றுமொழிகண்டருளின்மூழ்குநாளெந்நாளோ ... (௨)
தானென்னைமுன்படைத்தானென்றதகவுரையை ... *
நானென்றுமுண்மைபெற்றுநாடுணர்வதெந்நாளோ ... (௩)
என்னுடையதோழனுமாமென்றதிருப்பாட்டி ... ... *
னன்னெறியைக்கண்டுரிமைநான்செய்வதெந்நாளோ ... (௪)
ஆருடனேசேருமறிவென்றவவ்வுரையைத் ... *
தேரும்படிக்கருடான்சேருநாளெந்நாளோ ... ... (௫)
உன்னிலுன்னுமென்றவுறுமொழியாலென்னிதயந் ... *
தன்னிலுன்னிநன்னெறியைச்சாருநாளெந்நாளோ ... (௬)
நினைப்பறவேதானினைத்தேனென்றநிலைநாடி ... ... *
யனைத்துமாமப்பொருளிலாழுநாளெந்நாளோ ... (௭)
சென்றுசென்றேயணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாகி *
நின்றுவிடுமென்றநெறிநிற்குநாளெந்நாளோ ... (௮)
ஆதியந்தமில்லாவரியபராஞ்சோதி... ... ... *
நீதிமொழிகண்டதுவாய்நிற்குநாளெந்நாளோ ... ...(௯)

பிறிதொன்றிலாசையின்றிப்பெற்றிருந்தேனென்ற
நெறியுடையான்செல்வினிலைநிற்குநாளெந்நாளோ ...
திரையற்றநீர்போற்றெளிபவெனத்தேர்ந்த ...
வுரைபற்றியுற்றங்கொடுங்குநாளெந்நாளோ ... ...
அறியாவறிவிலவிழ்ந்தேறவென்ற ... ...
நெறியாமுறையுணர்ந்துநிற்குநாளெந்நாளோ ...
எனக்குனியென்றுமியற்கையாய்ப்பின்னு ... ...
முனக்குறுனென்றவுறுதிகொள்வதெந்நாளோ ...
அறிவையறிவதுவேயாகும்பொருளென் ... ...
றுறுதிசொன்னவுண்மையினையோருநாளெந்நாளோ ...

முற்றிற்று- அச- கூஉஎய.

நிற்குநிலை.

பண்ணினிசைபோலப்பரமன்யாதின்றதிர ...
னெண்ணியருளாகியிருக்குநாளெந்நாளோ ...
அறிவோடறியாமையற்றறிவினூடே ... ...
குறியிலறிவுவந்துகூடுநாளெந்நாளோ ... ...
சொல்லான்மனத்தாற்றொடராச்சப்பூரணத்தி ...
னில்லாநிலையாய்நிலைநிற்பதெந்நாளோ .. ..
செங்கதிரின்முன்மதியந்தேசடங்கிநின்றிடல்போ ...
லங்கணனார்தாளிலடங்குநாளெந்நாளோ ... ...
வானூடடங்கும்வளிபோலவின்புருவாங் ...
கோனூடடங்குங்குறிப்பறிவதெந்நாளோ ... ...
செப்பரியதன்கருணைச்சிற்சுகனார்பூரணத்தி ... ..
லப்பினிடையுப்பாயணையுநாளெந்நாளோ ... ...
தூயவறிவானசுகரூபசோதிதன்பாற் ... .
றீயினிரும்பென்னத்திகழுநாளெந்நாளோ ... ...
தீதனையாக்கர்ப்பூரதீபமெனநானகண்ட ... ..
சோதியுடனொன்றித்துரிசறுவதெந்நாளோ ... ... [௮]
ஆராருங்காணாதவற்புதனார்பொற்படிக்கீழ் ... ... *
நீரார்நிழல்போனிலாவுநாளெந்நாளோ ... ... [௯]
எட்டத்தொலையாதவெந்தைபிரான்சன்னிதியிற் ... .. *
பட்டப்பகல்விளக்காய்ப்புண்புறுவதெந்நாளோ... .. [௰]
கருப்புவட்டைவாய்மடுத்துக்கண்டார்நாட்போல ... *
விருப்புவட்டாவின்புருவைமேவுநாளெந்நாளோ ... [௰௧]
துச்சப்புலனாற்சுழலாமற்றன்னருளா ... ... *
லச்சிக்கதிர்படிகமொவ்வுநாளெந்நாளோ ... [௰௨]

இம்மாநிலத்தி லிருந்தபடியேயிருந்து ... ... *
சும்மாவருளைத் தொடருநாளெந்நாளோ .. ... (௰௩)
ஞானவனுந்தன்மையெய்தித் தண்டமெனவண்டமெங்கு .. *
ஞானமயமானே நடத்துநாளெந்நாளோ ... (௰௪)
ஒன்றிரண்டுமில்லதுவா யொன்றிரண்டுமுள்ளதுவா ... *
நின்றசமத்துநிலைநேர்பெறுவதெந்நாளோ ... ... (௰௫)
பாசமகலாமற் பசுவிற்கலவாமல் ... ... *
மாசில்சமத்துமுத்தி வாய்க்குநாளெந்நாளோ .. ... (௰௬)
சிற்றறிவுமெள்ளச் சிதைந்ததம்மான் பேரறிவை ... *
யுற்றறியாவண்ணமறிந் தோங்குநாளெந்நாளோ ... (௰௭)
தந்திரத்தை மந்திரத்தைச் சாரினையாமறிவெவ் .. *
றெந்தத்தபுனவாவேவடிவா யெய்துநாளெந்நாளோ ... (௰௮)
போக்குவரவற்றபரி போக்கிறந்தம்போதத்தே ... .. *
நீக்கமறக்கூடி நிலைபெறுவதெந்நாளோ ... ... (௰௯)
காணபாறுயகாட் டையதூங் காடப்புமாதீர்ந்தயந்த ... *
வீண்பாவம்போயறுவாய் வேறுநாளெந்நாளோ ... (உ௰)
வாடாமக்கநரடியாய் மாயாமக்கசியக்காலை... ... *
நாடாக்கரடி நலம்பெறுவதெந்நாளோ ... ...(உ௧)
ஆட்லைய ... பூ... தாட்லாழித் ... டாய் பாற் ... *
குடம்பேறறுதுகள்ற நாளெந்நாளோ ... (உ௨)
மேலொன்றுமில்லாது ருந்தகூர்தப முடமோ ... *
பாலொடுநீர்போற்கலந்து பகுப்பறவெந்நாளோ ... (உ௩)
அறியாதறிந்த பொருளாய வண்ணலைநாமாகக் ... ... *
குறியாதவண்ணங் குறிக்குநாளெந்நாளோ .. (உ௪)
ஓராமன்மந்திரமு முன்னுமனப் பரவைப் ... ... *
பாராமற்பார்த்துப் படருநாளெந்நாளோ ... (உ௫)
ஊன்பற்றுமென்மேற் பிறவிப்பற்றுமப்பூரணன்பால் ... *
வான்பற்றுங்கண்டோமல் மருவுநாளெந்நாளோ... (உ௬)
ஆண்டானுமடியனுமாய் அனைத்தறிவாலறிவைத் .. ... *
துண்டாமற்றூண்டித் துலங்குநாளெந்நாளோ ... (உ௭)
ஆணவத்தோடத்துவித மானபடி மெய்ஞ்ஞானத் ... *
தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ ... (உ௮)

முற்றிற்று - ஆக ௲உகூஅ,

நிலைபிரிந்தோர்கூடுதற்குபாயம்

கன்மநெறிதப்பிற் கடுநரகென்றெந்நாளு ... ...*
நன்மைதருஞானநெறி நாமணைவதெந்நாளோ ... (க)

ஞானநெறிதானே நழுவிடினு மப்பதத்து ... *
ஈனமுத்தி நல்குமென வன்புறுவதெந்நாளோ ... (௨)
பன்மார்க்கமான பலவடிபட்டேனுமொரு ... ... *
சொன்மார்க்கங்கண்டு துலங்குநாளெந்நாளோ ... (௩)
அத்துவிதமென்ற வன்னியச்சொற்கண்டுணர்ந்து ... *
சுத்தசிவத்தை தொடருநாளெந்நாளோ .. ... (௪)
கேட்டன்முதனான்காலே கேடிலாநாற்பதமும்... ..*
வாட்டமறவெமக்கு வாய்க்குநாளெந்நாளோ .. ... (௫)
என்னையியானென்பதற வெவ்விடமுமென்றுசான் ... *
சன்னிதியாக்கண்டுநிட்டை சாதிப்பதெந்நாளோ... ... (௬)
தாம்பிரமமென்று நடுவேயொன்றுண்டாமா ... *
றெய்பியெல்லாமொன்றாத் திகழுநாளெந்நாளோ ... (௭)
மூசசகமேயாதி முழுதுமகண்டாகார... ... ...*
சச்சிதானந்தசிவந் தானெனப்பதெந்நாளோ... .... (௮)
எவ்வடிவும்பூரணமா மெத்தையுருவென்றிசைந்த ... *
வவ்வடிவுக்குள்ளே யடங்குநாளெந்நாளோ ... ...(௯)
சிந்தித்ததெல்லாஞ் சிவபூரணமாக ... ... *
வந்தித்துவாழ்த்தி வணங்குநாளெந்நாளோ ... ... (௰)
தாங்கியபாரின்றுணி தானேநானாககினியா ... ... *
யோங்குமியோகவுணர் வுற்றிடுநாளெந்நாளோ ... (௰௧)
ஆசனமூர்த்தங்க ளறவகண்டாகாரசிவ ... ... *
பூசைசெயவாசை பொருந்துநாளெந்நாளோ ... (௰௨)
அஞ்செழுத்தி னுண்மை யதுவாணவட்பொருகோ... ...*
நெஞ்சழுத்தியொன்றாகி நிற்குநாளெந்நாளோ ... (௰௩)
அவ்வுயிர்போலெவ்வுயிரு மனைபிரான்றன்னடிமை ... ...*
வெவ்வுயிருமென்றுபணி யாஞ்செய்வதெந்நாளோ ... (௰௪)
தேசிகர்கோனான திறன்மவுனிநந்தமக்கு ... ...*
வாசிகொடுக்கமகிழுநாளெந்நாளோ ... ... (௰௫)
குருலிங்கசங்கமமாக் கொண்டதிருமேனி ... *
யருண்மயமென்றன்புற்றருள்பெறுவதெந்நாளோ ... (௰௬)

எந்நாட்கண்ணி முற்றிற்று - ஆக-௩௱௰௮,

காண்பேனோவென்கண்ணி.

சிந்திக்குந்தோறுந் தெவிட்டாவமுதேயென் ... *
புத்திக்குணீதான் பொருந்திடவுங்காண்பேனோ... ... (௧)
கேவலத்திலுன்கிடந்து கீழ்ப்படாதின்பவருட் ... *
காவலன்பாலொன்றிக்கலந்திடவுங்காண்பேனோ .. ... (௨)

T. 12368

காண்பேனோ கண்ணி.

ஆரியங்கடந்தவொன்றேதா னெளியாட்டிற்ற .. *
பெரியதிறைவையுனைநான்பெற்றிடவுங்காண்பேனோ ... (௩)
மாசற்றவன்பர்நெஞ்சே மாறாதபெட்டகமாத் ... *
தேசத்தமாமணிநின்றேசினையுங்காண்பேனோ... ... (௪)
மாயாவிகாரமலமகல்வெந்தைபிரா ... .. *
னேயானுபூதிநிலைபெறவுங்காண்பேனோ .. . (௫)
பொய்யுலகும்பொய்யுடலும்பொய்ப்படலும்பொய்யெனவே . *
மெய்யறிவைமெய்யெனவேமெய்யடைவுங்காண்பேனோ ... (௬)
வாலற்றபட்டமெனமாயாமனம்படலம் .. ...*
காலற்றுவீழவுழக்கண்ணுடையாய்காணபேனோ ... (௭)
உள்ளும்புறம்புமொருபடித்தாய்நின்றசுகங் ..... . *
கொள்ளும்படிக்கிறைநீகூட்டிடவுங்காண்பேனோ ... (௮)
காட்டுகின்றமுக்கட்கரும்பேபுனிதவென் ... *
றேட்டமெலாநதீவுனதாள்பெறவுங்காண்பேனோ . . (௯)
தூங்காமற்றூங்கச்சுகமே ரூப . பனிமாயி ... ..*
நீங்காமனிற்குநிலைபெறவுங்காணபேனோ ... .. (௰)
வாதவூராளிக்கனவானேசருளையாமவிறைந்தும் ... *
போதவூர்மேறியிந்பொன்னடியுங்காண் பேனோ . ...(௧௧)
சாடையிலலாட்டமெம்பரம்பொருளே நீதிகால . *
நாட்டமறவெற்றைசுத்தஞானவெளிகாணபேனோ .. ...(௧௨)
மன்றுநிம்வாழ்ந்வெபாகதஞ்சேயானிக்க... ... *
குன்றேநின்றுடகிற்குடிபெறவுங்காண்பேனோ .. ... (௧௩)
பொய்யென்றறிந்துமெமைப்போகவொட்டாதையவித்த .. *
வையங்கனமயக்கமாற்றிடவுங்காணபேனோ .. ... (௧௪)
தாயினும்நலலதயாளு மெய்யறிவேனையுன்னித் .. ... *
தீயின்மெழுகொத்துருகுஞ்சிந்தையராகாண்பேனோ .. (௧௫)
என்செயினுமென்பெறினுமென்னிறைவாவேழையன்பா... *
னின்செயலென்றுன்னுநினைவுபரககாணபேனோ .. ...௧௬)
எள்ளத்தனையுயிரக்கமிலாவன்பாவி ... *
யுள்ளத்துமெறந்தையுலாவிடவுங்காண்பேனோ .. ..(௧௭)
வஞ்சகத்துக்காலயமாம்வல்வினையேனுகெடவே *
னெஞ்சகந்நிலையாநீநேர்பெறவுங்காண்பேனோ ... (௧௮)
தொல்லைப்பிறவித்துயர்கெடவுமெந்தைநாள் ... *
மல்லற்கருணைவழங்கிடவுங்காண்பேனோ .. ... (௧௯)
வாளாருங்கண்ணார்மயற்கடலிலாழ்ந்தேன்சற் ... *
றுளாகவெந்தையருள்செயவுங்காண்பேனோ ... [௨௰]
பஞ்சாய்ப்பறக்குநெஞ்சப்பாவியைநீகூவியையா ... *
வஞ்சாதேயென்றின்னருள்செயவுங்காண்பேனோ... ..[௨௧]

ஆடுங்கறங்காயகிலமதிலுழன்றமனம் ... *
வாடுமனையையாநீவாவெனவுங்காண்பேனோ ... [௨௨]
சிட்டர்க்கெளியசிவனேயோதீவினையேன் ... ☆
பட்டற்றவாசைமயக்கறவுங்காண்பேனோ ... [௨௩]
உண்ணின்றுணர்த்துமுதலப்பிலாவொன்றேநின் ... *
தண்ணென்றசாந்தவருள்சார்ந்திடவுங்காண்பேனோ ... [௨௪]
ஓடுங்கருத்தொடுங்கவுள்ளுணர்வந்தான்றநின்னைக் ... ☆
கூடும்படிகலக்கறநீகூட்டிடவுங்காண்பேனோ ... [௨௫]
வாக்கான்மனதான் மதிப்பறியாய்நின்னருளை ... ※
நோக்காமனோக்கிநிற்குநுண்ணறிவுகாண்பேனோ ... [௨௬]
இவ்வுடம்புநீங்குமுனேயெந்தாய்கேளின்னருளா ... ※
மவ்வுடம்புக்குள்ளேயவதரிக்கக்காண்பேனோ ... [௨௭]
நித்தமாயொன்றாய்நிரஞ்சனமாய்நிர்க்குணமாஞ் ... *
சுத்தவெளிநீவெளியாய்த்தோன்றிடவுங்காண்பேனோ ... [௨௮]
கண்ணிறைந்தமோனக்கருத்தேயென்கண்ணேயென் ... *
றுண்ணிறைந்தமாயையொழிந்திடவுங்காண்பேனோ ... [௨௯]
அத்தாவிமலாவருளாளாவானந்த ... *
சித்தாவெனக்கருள்செய்திடவுங்காண்பேனோ ... [௩௰]
வீணேபிறந்திறந்துவேசற்றேனென்னையற ... *
காணேநிறைநிலையருணைபெறக்காண்பேனோ ... [௩௧]
சட்டையொத்தவிவ்வுடலைத்தள்ளுமுன்னேநான்சகச ... *
நிட்டையைப்பெற்றையாநிருவிகற்பங்காண்பேனோ ... [௩௨]
எல்லாந்தெரியமறையாவெனல்லவெல்லாந் ... *
சொல்லாமுனீதான்றொகுத்திரங்கக்காண்பேனோ ... [௩௩]
அண்டபகிரண்டமனைத்துமொருபடித்தாக் ... *
கண்டவர்கள்கண்டதிருக்காட்சியையுங்காண்பேனோ ... [௩௪]
ஊனிருந்தகாயமுடனிருப்பவெற்றைநின்பால் ... ☆
வானிருந்ததென்னவுநான்வந்திருக்கக்காண்பேனோ [௩௫]
நினையத்தலையுந்தெளியறியாப்பாவியே ... ※
வினைவிட்டபரம்பொருணீதேர்பெறவுங்காண்பேனோ [௩௬]
அன்பமெனுந்திடனைத்தந்தேதுறையிடவையாவே ... *
யின்பவெள்ளம்வந்தெங்கெதிர்ப்படவுங்காண்பேனோ... [௩௭]

முற்றிற்று-ஆக ௲௩௫௧.

ஆகாதோவென்கண்ணி.

கல்லாதநெஞ்சங்கரைந்துருகவெத்தொழிற்கும் ... *
வல்லாய்நின்னின்பம் வழங்கிலாகாதோ ... ... [௧]

என்னையறியவெனக்கறிவாய்நின்றருணின் ... ... *
றன்னையறிந்தின்பநலஞ் சாரவைத்தாலாகாதோ ... [௨]

பொய்ம்மயமேயான புரைதிரவெந்தையின்ப ... *
மெய்ம்மயம்வந்தென்னை விழுங்கவைத்தாலாகாதோ... [௩]

மட்டிலாச சிற்சுகமாம் வாழ்வெநின்னின்பமயந் ... *
சிட்டாபோலயானருந்தித் தேக்கவைத்தாலாகாதோ ... [௪]

அத்தாநியம்பாற்றுளடிகசேயலுந்தினமும் ... .. *
நித்தாக்கியின்பம் பெருகவைத்தாலாகாதோ ... ... [௫]

மெல்லியலார்மோக விழற்கிறைப்பேனையாநின் ... *
னெல்லையிலானந்தநல மிச்சித்தாலாகாதோ ... ..[௬]

கட்டழகாமெய்யனனுமனைத்துநிறைபிடானந்தமடக் ... *
கட்ட முகாநின்னைக் கலக்கலாகாதோ ... [௭]

சோதியேநந்தாச் சுகவடிவேயெல்லாவெளியே... ... *
யாதியேநின்னை யறியவைத்தாலாகாதோ .. .. [௮]

நேசஞ்சிறிதுமில்லா னிமலனின்றிருவடிக்கே ... *
வாசஞ்செயவிரங்கி வாவென்றாலாகாதோ . ... ..[௯]

என்னறிவுக்குள்ளேயிருந்ததுபோலவே ... *
நின்னறிவுணின்றுடனாயிருக்கவைத்தாலாகாதோ ... (௰)

ஆதிப்பிரானேயென்னையாளவல்லருளகலச ... ... *
சோதிப்பிரகாசமயந் தோன்றுவித்தாலாகாதோ ... ...(௰௧)

ஆசைசசுழற்கடலிலாழாமலையாநின் ... ... *
னேசப்புணைதந்தா ணிறுத்தலாகாதோ .. ... (௰௨)

பாசங்களெல்லாம் பற்றறவெசெற்றுமெய்ய ... ...*
யீசனேவனவாசமாம் நிரங்கற்றலாகாதோ ... ...(௰௩)

ஓயாவுளவையானருகிவிட்டொருநிச் ... ... *
சேயாகியென்னைநின்பூமசசேரவைத்தாலாகாதோ ... (௰௪)

ஆதியாய்வாழ்வா யகண்டிதமாய்நிறைபரஞ் ... ... *
சோதிநீயென்னைத் தொழும்படிவைக்கலாகாதோ ... (௰௫)

விண்ணூரகண்டைவிட்டும்பாற்பரஞ்சோதி ... .. *
கண்ணார நின்னிறைவைக் காணவைத்தாலாகாதோ ... (௰௬),

சேராமற்சேர்ந்துநின்ற சின்மயனேநிர்மலத்தைப் ... *
பாராமற்பார்ப்போனநீ பக்ஷம்வைத்தாலாகாதோ ... (௰௭)

கண்ணாடிபோலவெல்லாங் காட்டுந்திருவருளை ... *
புண்ணாடியையா வுருகவைத்தாலாகாதோ ... (௰௮)

மூலவிருள்காலவாங்க மூதறிவுதோன்றவருட் ... *,
கோலம்வெளியாகவெந்தை கூடுவித்தாலாகாதோ ... (௰௯)

சாற்றரியவின்பவெள்ளந் தாக்குமதனிமுழுக்கி ... *
தூற்றமுறுமெய்ந்நெறி நுண்மைசொன்னாலாகாதோ ...(௨௰).

கையுங்குவித்திரண்டு கண்ணருவிபெய்யவரு ... ... *
மையநின்றுட்கிமே யபடிமைநின்றுலாகாதோ. முற்றிற்று ஆக-௫௱௭௨

இல்லையோவென்கண்ணி.

எதார்த்தெரியாதெனைமறைத்தவல்லிருளை ... ...*
நாதநீக்கவொரு ஞானவிளக்கில்லையோ ... ...(௧
பணிபற்றநின்ற பதைப்பறவென்கண்ணுண் ... *
மணியொத்தசோதியின்ப வாரியெனக்கில்லையோ ... ...(௨
எம்மாலறிவதற வெப்பெருமான்யாதுமின்றிச் ... ...*
சும்மாவிருக்கவொரு சூத்திரந்தானில்லையோ ... ... (௩)
நாய்க்குங்கடையானேனுநாதாநின்னின்பமயம் ... ...*
வாய்க்கும்படியினியோர் மந்திரந்தானில்லையோ ... (௪)
ஊனாகநிற்கு முணர்வைமறந்தையாநீ ... ... *
தானாகநிற்கவொரு தந்திரந்தானில்லையோ .. ... (௫)
அல்லும்பகலு மகண்டவடிவையுனை நான் ... .. *
புல்லும்படியெனக்கோர் போதனைதானில்லையோ. முற்றிற்று ௫௱௭௮

வேண்டாவோவென்கண்ணி.

கண்டவடிவெல்லாநின்காட்சியென்றேகைகுவித்துப் ...*
பண்டுமின்றுநின்றவென்னைப்பார்த்திரங்கவேண்டாவோ ... (௧)
வாதனையோடாடுமனப்பாம்புமாயவொரு ... ... *
போதனைதந்தையாபுலப்படுத்தவேண்டாவோ ... (௨)
தன்னையறியத்தனியறிவாய்நின்றருளு ... ... *
நின்னையறிந்தென்னறிவைநீக்கிநிற்கவேண்டாவோ ... (௩)
அள்ளக்குறையாவகண்டிதானந்தமெனும் ... ... *
வெள்ளமெனக்கையாவெளிப்படுத்தவேண்டாவோ ... (௪)
அண்டனேயண்டரமுதேயென்றுருயினை ... ...*
தொண்டனாக்கின்பத்தொகுத்திரங்கவேண்டாவோ ... (௫)
பாராதேநின்றுபதையாதேசும்மாதான் ... ... *
வாராயெனவும்வழிகாட்டவேண்டாவோ ... ... (௬)

முற்றிற்று- ஆக- ௫௱௮௪.

நல்லறிவேயென்கண்ணி.

எண்ணிறைந்தமேன்மைபடைத்தெவ்வுயிர்க்குமவ்வுயிராய்க் ...*
கண்ணிறைந்தசோதியைநாங்காணவாநல்லறிவே ... (௧)
சித்தானநாமெல்சடத்தைநாமெனவென்றுஞ் ... *
சத்தானவுண்மைதனைச்சாரவாநல்லறிவே ... ... (௨)

அங்குமிங்குமெங்குநிறைபூரணர்பொற்பறிந்து ... *
ங்கயத்துள்வலைப்பட்டாய்ப்பயன்பெறவாநல்லறிவே ... (௯)
சான்றசோறென்னவிந்தக்காசினியாழ்வத்தனையுந் ... *
தோன்றவருள்வெளியிற்றோன்றவாநல்லறிவே ... (௰)

முற்றிற்று - ஆக - ௩௱௮௮.

பலவகைக்கண்ணி.

என்னரசேகேட்டிலையோவென்செயலோவேதுமில்லை ... *
தன்னரசுநாடாகித்தத்துவக்கூத்தாடியதே ... ...(௧)
பண்டொருகாணின்பாற்பழக்கமுண்டோவெந்தைநினைக் ... *
கண்டொருகாற்போற்றக்கருத்துங்கருதியதே ... (௨)

வேறு.

கண்டனவேகாணுமன்றிக்காணாவோகாணவென் ... *
கொண்டறிவேனெந்தைநினைக்கூடுங்குறிப்பினையே ... [௩]
கல்லாலடியில்வளர் கற்பகமேயென்னளவோ ... *
பொல்லாவினைக்குப்பொருத்தந்தான்சொல்லாயே ... [௪]
தப்பிதமொன்றின்றியதுதானாகிநிற்கவுண்மை ... ...*
செப்பியதுமல்லாலென் சென்னியதுதொட்டனையே ... [௫]

வேறு.

மாசானநெஞ்சனிவன்வஞ்சனென்றோவாய்திறந்து ... ..*
பேசாதமௌனம்பெருமான்படைத்ததுவே [௬]
கற்பதெல்லாங்கற்றேமுக்கண்ணுடையாய்நின்பணியாய் ... *
நிற்பதுகற்றன்றோநிருவிகற்பமாவதுவே ... ...[௭]
முன்னளவில்கன்மமுடையன்றோனிவனென்றோ ... *
வென்னளவிலெந்தாயிரங்காதிருந்ததுவே ... [௮]

வேறு.

நெஞ்சகம்வேறாகிநினைக்கூடவெண்ணுகின்ற ... *
வஞ்சகனுக்கின்பமெந்தாய்வாய்க்குமாறெவ்வாறே ... [௯]

வேறு.

பள்ளங்கடோறும்பரந்தபுனல்போலுலகி ... *
லுள்ளம்பரந்தாலுடையாயென்செய்வேனே ... ... [௰]
முன்னிலைக்கப்பின்மறைக்குமூடவிருளாலறிவே ... *
னென்னினைக்கவென்மறக்கவெந்தைபெருமானே ... [௰௧]
வல்லாளமோதுநின்வான்கருணையென்னிடத்தே ... *
யில்லாதேபோனாலெவ்வண்ணமுய்வேனே ... [௰௨]

வேறு.

வாக்குமனமுமவுனமுறவெந்தைநின்னை ... ...*
நோக்குமவுனமிந்தநூலறிவிலுண்டாமோ... ... [௰௩]

ஒன்றாய்ப்பலவாயுலகமெங்குந்தானேயாய் ... ... *
நின்றாயையாவெனை நீநீங்கற்கெளிதாமோ ... ... [௰௪]
ஆவித்துணையேயருமருந்தேயென்றனை நீ ... ... *
கூவியழைத்தின்பங்கொடுத்தாற்குறைவாமோ ... [௰௫]
எத்தனையோ நின்விளையாட்டெந்தாய்கேளிவ்வளவென் ... *
றத்தனையுமென்னறிவுந்தரமாமோ ... ... [௰௬]
தேடியார்தேர்ந்துஞ்சிவனேயோ நின்றிருத்தாள் ... ... *
கூடுவான்பட்டதுயர்கூறற்கெளிதாமோ ... ... [௰௭]

வேறு.

பற்றினைப்பற்றுமெந்தாய் பற்றுவிட்டாற்கேவலத்தி ... *
லுற்றுவிடுநெஞ்சமுனையொன்றிநிற்பதெப்படியோ ... [௰௮]
ஒப்பிலாவொன்றேநின்றுண்மையொன்றுங்காட்டாமற் ... *
பொய்ப்புவியைமெய்போற்புதுக்கிவைத்ததென்னேயோ... [௰௯]
காலால்வழிதடவுங்காலத்தேகண்முளைத்தாற் ... *
போலேயெனதறிவிற்போந்தறிவாய்நில்லாயோ ... [௨௰]
தன்னரசுநாடாஞ்சடசாலபூமியினை... ... ... *
யென்னரசேயென்னையிறையாகநாட்டினையோ ... [௨௧]

வேறு.

திங்களமுதாநின்றிருவாக்கைவிட்டரசே ... .. *
பொங்குவிடமனையபொய்ந்நூல்புலம்புவனோ ... [௨௨]
உன்னவுன்னவென்னையெடுத்துண்ணுந்திருநிறைவை ... *
யின்னமின்னங்காணமலைந்தாய்சுழலுவனோ... ... [௨௩]
ஆராவமுதனையவானந்தவாரியையன்பாற் ... ... *
சோராமலையாநீதள்ளிவிடவந்ததென்றோ ... ... [௨௪]

பலவகைக்கண்ணி- முற்றிற்று- ஆக- ௪௱௨.

நின்றநிலை.

நின்றநிலையேநிலையாவைத்தானந்த ... *
நிலைதானேநிருவிகற்பநிலையுமாகி ... ... *
யென்றுமழியாதவின்பவெள்ளத்தேக்கி .. ... *
யிருக்கவெனைத்தொடர்ந்துதொடர்ந்திருக்குமந்தோ.
இருக்காதிமறைமுடிவுஞ்சிவாகமாதி ... ...*
யிதயமுங்கைகாட்டெனவேயிதயத்துள்ளே ...*
யொருக்காலேயுணர்ந்தவர்கட்கெக்காலுந்தா ... *
னொழியாதவின்பவெள்ளமுதவாநிற்கும்... .. [௨]
கற்றதுங்கேட்டதுந்தானேயதுக்காகக் ... *
கடபடமென்றுருட்டுதற்கோகல்லாலெம்மான்... *
குற்றமறக்கைகாட்டுங்கருத்தைக்கண்டு ... *
குணங்குறியற்றின்பநிட்டைகூடவன்றோ ... [௩]

நின்றநிலை- முற்றிற்று- ஆக- ௪௱௫.

பாடுகின்றபனுவல்.

பாடுகின்றபனுவலோர்க- டேடுகின்றசெல்வமே ... ✽
நாடுகின்றஞானமன்றி- லாடுகின்றவழகனே ... (௧)
அத்தனென்றநின்னையே- பத்திசெய்துபனுவலாற் ... ✽
பித்தனின்றுபேசவே- வைத்ததென்னவாரமே ... (௨)
சிந்தையன்புசேரவே- நைந்துநின்னைநாடினேன் ... ✽
வந்துவந்துளின்பமே- தந்திரங்குதாணுவே ... (௩)
அண்டரண்டம்யாவுநீ- கொண்டுநின்றகோலமே ... ✽
தொண்டர்கண்டுசொரிகணீர்- கண்டெரங்குஞ்சுகணையுமே ...(௪)
அன்னைபோலவருண்மிகுத்து- மன்னுஞானவரதனே .. ✽
மென்னையேயெனக்களித்த - நின்னையானுநினைவனே ...(௫)

பாடுகின்றபனுவல் - முற்றிற்று ஆக - ௲சஉ௰.

சிவமயம். 1.

ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சம்பு- சிவ - சங்கர - சங்கர சங்கர சம்பு.

ஆதியுமந்தமுமாகி- எனக்-கானந்தமாயறிவாய்நின் றிலங்குஞ்
சோதிமௌனியாய்த் தோன்றி- அவன் - சொல்லாதவார்த்தையைச்
சொன்னாண்டிதோழி - சங்கர .. ..(௧)

சொன்னசொல்லேதென்று சொல்வேன் - என்னைச் - சூதாய்த்
தனிக்கவே சும்மா விருத்தி - முன்னிலையேதுமில்லாதே-சுக- முற்
றச்செய்தேயென்னைப் பற்றிக்கொண்டாண்டி - சங்கர ... ...(௨)

பற்றிய பற்றற வுள்ளே- தன்னைப்-பற்றச்சொன்னான் பற்றிப்
பார்த்த விடத்தே, பெற்றதையேதென்று சொல்வேன் - சற்றும்-
பேசாத காரியம் பேசினான் தோழி - சங்கர ... ... (௩)

பேசா விடும்பைகள் பேசிச்- சுற்றப்-பேயங்கமாகித் திரிந்
த்திரிந்தேன், ஆசாபிசாசைத்துரத்தி - ஐய - னடியிணைக்கீழேயடக்
கிக் கொண்டாடி - சங்கர ... ...(௪)

அடக்கிப் புலனைப் பிரித்தே-அவ - லாகியமேனியிலன்பைவள
ர்த்தேன், மடக்கிக்கொண்டானென்னைத் தன்னுட்-சற்றும்-வாய்பே
சாவண்ண மரபுஞ்செய்தாண்டி-சங்கர ... ... (௫)

மரபைக் கெடுத்தனன் கெட்டேன்-இத்தை-வாய்விட்டுச் சொ
ல்லிடின் வாழ்வெனக்கில்லை, கரவு புருஷனு மல்லன்-என்னைக் - காக்
குந் தலைமைக் கடவுள்காண் மின்னே-சங்கர .. ..(௬)

கடலின்மடைவிண்டதென்ன - இரு கண்களுமானந்தக் கண்
ணீர் சொரிய, உடலும் புளகிதமாக -எனை - யுள்ளமுருக வுபாயஞ்
செய்தாண்டி-சங்கர ... ... (௭)

உள்ளது மில்லதுமாய - முன் - னுணர்வதுவாயுன் னுளங்கண்
டெல்லாந், தள்ளெனச்சொல்லியென் னையன் - என்னைத் - தானாக்
கொண்ட சமர்த்தைப்பார்தோழி - சங்கர ... ... (௮)

பாராதிபூதநீயல்லை - உன்னிப் - பாரிந் திரியங் கரணநீ யல்லை,
ஆராயுணர்வுநீ யென்றான் - ஐய . னன்பா யுரைத்தசொல் லானந்
தந்தோழி - சங்கர ... ... (௯)

அன்பருக் கன்பான மெய்யன் - ஐய - னானந்தமோனனருட்
குருநாதன், தன்பாதஞ் சென்னியில் வைத்தான் - என்னைத் - தானறி
ந்தேன்மனந் தானிறந்தேனே - சங்கர ... ... (௰)

இறப்பும் பிறப்பும் பொருந்த - எனக் - கெவ்வணம் வந்ததென்
றெண்ணியான் பார்க்கின், மறப்பு நினைப்புமாய்நின்ற - வஞ்ச -
மாயாமனத்தால் வளர்ந்ததுதோழி - சங்கர... ... ... (௰௧)

மனமேத கல்லாலெனக்கன்றே - தெய்வ - மௌன குருவாகிவந்
துகைகாட்டி, யெனதாம் பணியற மாற்றி - அவ - னின்னருள் வெள்ளத்
திருத்திவைத் தாண்டி - சங்கர ... ... (௰௨)

அருளாலெவையும் பாரென்றான் - அத்தை - யறியாதே சுட்டி
யென் னறிவாலே பார்த்தேன், இருளானபொருள் கண்டதல்லாற் -
கண்ட - வென்னையுங் கண்டில னென்னேடிதோழி - சங்கர ... (௰௩)

என்னையுந் தன்னையும் வேறா - உள்ளத் - தெண்ணாதவண்ணமிரண்
டறநிற்கச், சொன்னது மோனமொருசொல்லே - அந்தச் - சொல்லால்
விளைந்த சுகத்தை யென்சொலுவேன், சங்கர ... ...(௰௪)

விளையுஞ் சிவானந்தபூமி - அந்த - வெட்டவெளிநண்ணித் தட்ட
விருளாய், களையைக் களைந்துபின் பார்த்தேன் - ஐயன் - களையன்றி
வேறொன்றுங் கண்டிலன்தோழி, சங்கர ... ... (௰௫)

கண்டார் நகைப்புயிர் வாழ்க்கை - இரு - கண்காணநீங்கவுங்கண்
டோந்துயின்றான், கொண்டார்போற் போனாலும்போகும் - இதிற்
குணமேது நலமேது கூறாய்நீதோழி ... ... (௰௬)

நலமேது மறியாத வென்னைச் - சுத்த - நாதாந்த மோனமா
நாட்டந்தந்தேசஞ், சலமேதுமில்லாமலெல்லாம் - வல்லான் - றானா
லென்றநிலைமீது தாக்கினான்தோழி, சங்கர ... ...(௰௭)

தாக்குநல் லானந்தசோதி, அது, தன்னிற்சிறியவென்னைத் தன்
னருளாற், போக்குவரவற் றிருக்குஞ், சுத்த, பூரணமாக்கினான் புது
மைகாண் மின்னே, சங்கர... ... ...(௰௮)

ஆக்கி யளித்துத் துடைக்குந், தொழி, லத்தனைவைத்து மெள்
ளத்தனையேனுந், தாக்கறநிற்குஞ் சமர்த்தன், உள்ள - சாக்ஷியைச்சிந்
திக்கத் தக்கதுதோழி, சங்கர ... ...(௰௯)

சிந்தைபிறந்தது மாங்கே, அந்தச், சிந்தையிறந்து தெளிந்
ததுமாங்கே, எந்தநிலைகளுமாங்கே - கண்ட - யான்றானிரண்டற்றிருந்
ததுமாங்கே சங்கர ... ... (௨௰)

ஆங்கென்று மீங்கென்று முண்டோ, சச்சி, தானந்த சோதிய
ண்ட வடிவாய், ஓங்கிநிறைந்தது கண்டாற், பின்னர், ஒன்றென்
ண்டென் றுரைத்திடலாமோ, சங்கர... ... ...(

என்றுமழியு மிக்காயம், இத்தை, யேதுக்கு மெய்யென்
ந்தீருலகீர், ஒன்றுமறியாத நீரோ, யம, ரெல்லைவந்தாற்சொல்லவு
தாருமுண்டோ, சங்கர ... ... (௨௨

உண்டோ தமைப்போலவஞ்சர், மல: பூரித்ததுப்ப முடலை
மெய்யென்று, கொண்டோபிழைப்பதிங் கையோ, அருட், கோலத்
தைமெய்யென்று கொள்ளவேண்டாமோ, சங்கர .. ... (௨௩)

வேண்டாம் விருப்பும் வெறுப்பும்- அந்த- வில்லங்கத்தாலேவி
ளையுஞ்சனனம், ஆண்டானுரைத்தபடியே- சற் முசையாதிருந்து
கொள் ளறிவாகி நெஞ்சே - சங்கர ... (௨௪)

அறிவாருமில்லையோ வையோ- என்னை - யாரே அறியாதவங்க
தேசத்தில், வறிதேகாமத்தீயிற் சிக்கி- உள்ள - வாழ்வெல்லாந்தோற்க
வோ வந்தேனுந்தோழி- சங்கர ... ... (௨௫)

வந்தவரவைமறந்து- மிக்க- மாதர்பொன்பூமி மயக்கத்திலாழ்ந்தோ
ம், இந்தமயக்கை யறுக்க- எனக்-கெந்தைமெய்ஞ்ஞான வெளியையா
ள்கொடுத்தாய்- சங்கர .. .. .. (௨௬)

வாளாருங்கண்ணியர் மோகம்- யம- வாதக்கனலைவளர்க்குமெ
ய்யென்றே- வேளானவனுமெய் விட்டான்-எவ்விதம்-மிகம்போர்துற
க்கை விதியென்றேதோழி- சங்கர ... ... ௨௭)

விதிக்கும்பிரபஞ்ச மெல்லாஞ்- சுத்த- வெளியின்மஞ்சமென்ன
வேவேதாகமங்கள், மதிக்குமதனை மதியார்- அவர்- மார்க்கத்துன்மா
ர்க்கஞ்சன் மார்க்கமேயாமானே- சங்கர ... ...(௨௮)

துன்மார்க்கமாதர் மயக்கம்- மனத்-தூயர்க்குப்பற்றாது சொ
ன்னேன்ஜனகன், தன்மார்க்கநீதி யிட்டாந்தம்- அவன் - ஞானந்தமா
ன சதானந்தனன்றே- சங்கர ... .(௨௯)

அன்றென்றுமாமென்று முண்டோ - உனக் - கானந்தக்கீர்த்தியனா
டி னறிவாகிச்சற்றே,நிற்றுற்றறியு மெளனவே மறை- நீயுமெய்யா
தி நிகழ்த்தினுன்றோழி- சங்கர ... ... (௩௰)

ஆனந்தக்களிப்பு முற்றுப்பெற்றது-ஆக-துசறுய.

அகவல்.

திருவருண்ஞானஞ் சிறந்தருள்கொழிக்கும் ...*
குருவடிவான குறைவிலாநிறைவே ... *
நிற்றவான்றே நின்மலவடிவே ... ... *
குன்றாப்பொருளே குணப்பெருங்கடலே *

ஆதியந்தமு மானந்தமயமாகி
சோதியேசகதே சொல்லிலாமுதலே
நிர்மலதெய்வத் திருவருட்டன்று
பார்முதலீரைம் பட்பெயரிருவி
அண்டமுதலா மெண்ட நாலுவகை
எழுபிறவியிற் முடிகொண்டும்
ஐந்தபோனியிற் வினம்பரடலக
அனுமுதலைசல் பாவைாக்கையும்
[illegible]முதலாவிற் க பகாலமும்
[illegible]பகுதித் தெரிந்தைமக்கிட
[illegible] நமகெசனறிவிலர்
[illegible] ன் வாலவன்மத்தனை
எவ் [illegible] ரவுடல்வாழ்க்கை
இல்பமமனமே துன்புயிலையெனப்
[illegible] நிசமயிலவரிக
ஆருமை கக் காக்லுபமை [illegible]
ரேகமிசநிவே [illegible]
அறிவுபோமற டாமையடக்கிக்
காலமுங்கமலமும் [illegible]
வேதமுாகமு [illegible] சுயர்க்கமு
மால்றவகுத்தனை பெரும்வண்மை...
அமையாக்காமயெற் சமயக்கா
அறம்பொருளின் றம்பமுநிலையிற்
குருவாய்வந்து பொருவர்போலவினையுந்
தத்துநிலைபோ முத்திமுடிவென
வாதர்க்கமும் பேர்நூல்களும்
நீ[illegible]றவிற்காட்டுபே குறைவின்றி விளங்க
அக்கருதின்றனை யெங்குமாகிச்
சாயாகித் தன்மையாகி
[illegible]பாலமுதவிரு பாக்குமுமெயுந்
[illegible] மையாளையை
[illegible] திருவ மாசற்றுதே
நலமுங்காட்டுமெ [illegible]
நிலையுங்காட்டுதலையருட்கடமையே.

அகவல் முற்றுப்பெற்றது - [illegible]

வண்ணம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பதுமத்தனையிசைந்த முலையென்றதையுகந்து ... ...
வரிவண்டெனவுழன்று கவலெனவாடுஞ் ...
சிறுகிண்கிணிசிலம்பு புனைதண்டைகண்முழங்கும் ...
ஒலிதன்றெனமகிழ்ந்து செவிகொளநாசி ...

[illegible]மஞ்சளின்வியந்த மணமுற்றிடமுகர்ந்து ...
பவமிஞ்சிடவிறைஞ்சி வரிசையினூடு... ...
காலின்மிசை முடிகுடிமயலாய் ... ... (௰

மருளுந்தெருளும்வந்து கதியென்பதைமறந்து ...
மதனன்சலதிபொங்கவிரணமதான ... ...
அணிபுண்டனைவளைந்து விரல்கொண்டுறவளைந்து ...
சிரஞ்சுகமிதென்று பரவசமாகி ... ...

மருவுந்தொழின்மிகுந்து தினமுந்தினமும்விஞ்சி ...
வளரும்பிறைகுறைந்தபடி மதிசோர ... ..
வானரமதென மேனிதிரையாய் ... ...(ஒ

வயதும்படவெழுந்து பிணிபற்றிமிதியென்று ...
வரவுஞ்செயலழிந்து இருமலுமாகி ... ...
அனமுஞ்செலுதலின்றி விழியுஞ்சுடர்களின்று... .
முகமுங்களைகளின்று சரியெனநாடி ... ...

மனையின்புறவிருந்த வினமுங்குலைகுலைந்து ... ..
கலகஞ்செயவிருண்ட யமன்வரும்வேளை ...
ஏதுதுணை பழிகாரமனமே ... ... (

வண்ணம் முற்றுப்பெற்றது - [illegible]

தாயுமானசுவாமிகள்பாடல்.

முற்றுப்பெற்றது.

T 12368